DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

25வது வெள்ளி விழா
2021
UTHAYAN
உதயன்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1328
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday September 17, 2021

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Selva Karthigesu
Sales Representative
416-648-9757
CENTURY 21

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

# Obama endorses Justin Trudeau in the coming Canadian Election

# கனடிய பொதுத் தேர்தலில் ஜஸ்டின் ட்ரூடோவிற்கு ஆதரவாக முன்னாள் அமெரிக்க அதிபர் ஒபாமா கருத்துக்ளைப் பதிவிட்டுள்ளார்



முன்னாள் அமெரிக்க அதிபர் ஒபாமா, நடைபெறவுள்ள கனடா தேர்தலில் தற்போதைய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிற்கு ஆதரவாக தனது கருத்துக்களைப் பதிவிட்டுள்ளார்.

கனடா தேர்தலில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு பராக் ஒபாமா ஒப்புதல் அளித்துள்ள ஆதரவான பதவானது, இதுவரையில். ஒரு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியால் கனேடிய தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருக்கு வழங்கப்பெற்ற ஒரு அரிய ஒப்புதல் பதிவு என்பது இங்கு குறிப்பிடத்தக்க்தாகும். ஆனால் இரண்டாவது முறையாக ஒபாமா அதை செய்தார் என்பதும் இங்கு கவனிக்க வேண்டிய ஒன்றாகும். அவர் முன்னாள் ஜனாதிபதி ஓபாமா அளித்த ஆதரவுக் குரலானது ட்ரூடோவுக்கு 2019ம் ஆண்டில் பல வாக்காளர்களைச் சிந்திக்கத் தூண்டியது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.
ஒபாமா தனது பதிவில் ட்ரூடோவுடன் இணைந்து பணியாற்றுவதில் பெருமைப்படுவதாகவும், வலுவான ஜனநாயக விழுமியங்களைக் கொண்ட திறமையான தலைவர் அவர் என்றும் விபரித்தார்.

# We really need someone to be bold and brave. She is Annamie Paul, for Toronto Centre



# துணிச்சலும் வீராப்பும் கொண்ட ஒரு பிரதிநிதியே Toronto Centre தொகுதிக்குத் தேவை. அவர் வேறு யாரும் அல்ல, Annamie Paul அவர்களே ஆவார்

எதிர்வரும் தேர்தலில் ரொறன்ரோ மத்திய தொகுதியிலிருந்து-**Toronto Centre** -தைரியமும் வீராப்பும் கொண்ட ஒரு புதிய பிரதிநிதியை நாம் பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். அவர் நிச்சயமாக **GREEN Party** யின் தலைவி **Annamie Paul** அவர்களே ஆவார்.
இவ்வாறு **Toronto Centre** தொகுதியில் போட்டியிடும் **GREEN Party** யின் தலைவி **Annamie PAUL** அவர்களை ஆதரித்து நடத்தப் பெற்ற கலந்துரையாடலில் பல வாக்காளர்கள் தெரிவித்துள்ளார்கள் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் **“HOUSING** மற்றும் **DAY-CARE** தொடர்பான எமது பிரச்சனைகளுக்கு அவரிடமே தீர்வுகள் உண்டு” என்றார்கள் (கடைசிப் பக்கத்தில் விபரங்களை அறியவும்)

DAWN TRANSPORTS & SERVICES
FREE ESTIMATES
மூவிங் & டெலிவெறிஸ்
26 FEET CARGO VAN
உங்கள் DELIVERY தேவைகளுக்கு
இலவச மதிப்பீடு Tel: 416-452-2251
We do packaging, wrapping, Moving to storage, Junk removal Express Services Available

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

வாகன மற்றும் வீடுகளுக்கான காப்புறுதித் தேவைகளுக்கு என்னை அழையுங்கள்
Home Auto Commercial & Liability
We do all types of insurance and work with over 20 different companies.
High risk, Uber, Landlord, etc...
PLEASE CALL:
(647) 338-6916
(416) 520-6916
EMAIL: INSURANCEHELPER@OUTLOOK.COM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East Mississauga, ON. L5A 1W7 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905 794 4404

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

# DELIVERING FOR SCARBOROUGH -- AGINCOURT

- 26.7 மில்லியன் டாலர்கள் நிதி ஒதுக்கீடு
  Bridletowne Neighbourhood Centre
- 6 இலட்சம் டாலர்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு
  New Horizons for Seniors Program and increased GIS and OAS Payments
- 2.17 மில்லியன் டாலர்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு
  Canada Summer Jobs for Youths and Students
- 943,991 டாலர்கள் நிதி ஒதுக்கீடு
  தேசிய வீட்டு வசதிகளுக்காக முதலீடு
- 2.26 பில்லியன் டாலர்களுக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு
  Scarborough Subway Expansion
- 10090 Scarborough-Agincourt குடும்பங்கள் Canada Child Benefit திட்டத்தால் பயன் பெற்றார்கள்
- நோய்த் தொற்றுத் தடைக்காகவும் இன்னும் பல விசேட திட்டங்களுக்காகவும் அதிகமான நிதி ஒதுக்கீடு

Campaign Office:
11 Ivy Bush Ave.
Scarborough, ON M1V 2W7

Email: info@jeanyip.ca
Phone: (647) 428-1876
Website: www.jeanyip.ca

Authorized by the Official Agent for Jean Yip

# JEAN YIP
• Scarborough-Agincourt •



BE A VOTER

SEPTEMBER 20
9:30 AM - 9:30 PM

FORWARD. FOR EVERYONE.

Authorized by the official agent for Jean Yip


# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

## OFFICE HELP WANTED

**Scarborough** வில் உள்ள **Trucking Company** ஒன்றிற்கு **Receptionist / General Office Help** வேலைக்கு ஆள் தேவை.
Applicant must have computer & communication skills.
Salary negotiable.

CALL: JAY
**(416) 771-8041**

## காரைக்குடி செட்டிநாடு உணவகத்தில் வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் கென்னடி - லோறன்ஸ் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள காரைக்குடி செட்டிநாடு உணவகத்திற்கு தோசை மற்றும் பரோட்டா தயாரிக்க நல்ல சமையல் வல்லுனர்கள் உடனடியாகத் தேவை.
சிறிது அனுபவம் விரும்பத்தக்கது.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
அத்துடன் Kitchen Helper, Dishwasher தேவை.

**Call: (416) 701-0003**

## House for Rent

**McCowan-Lawrence** சந்திப்புக்கு அருகில் மூன்று அறைகள் கொண்ட வீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. அத்துடன் இரண்டு அறைகள் கொண்ட **BASEMENT** வாடகைக்கு விடப்படும் தனித்தனியாகவும் சேர்த்தும் வாடகைக்கு எடுக்கலாம்.
5 வாகனங்கள் தரிக்கலாம்.

**தொடர்புகளுக்கு- ARUL**
**647 856 0250**

## Renovation Work

**Call us for all your renovation needs:**

- **Basement**
- **Painting**
- **Bathroom Reno**
- **Kitchen Reno**
- **Permits, and Construction**

**416-706-8160**

## உணவகத்தில் வேலை வாய்ப்புக்கள்

**Etobicoke, Mississauga** ஆகிய நகரங்களில் உள்ள கனடிய உணவகங்களில் பின்வரும் வேலை வாய்ப்புக்கள் உடடியாக உண்டு.
**Cooks** (சம்பளம் $ 20.00), **Kitchen Helpers** (சம்பளம் $ 20.00), **Waiters** ஆகிய வேலைகளுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு தேவைப்படின் தங்குமிட வசதியும் செய்து தரப்படும்.

**தொடர்புகளுக்கு: (416) 825-7785**
**அல்லது (416) 827-4426**

## LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

## வேலை வாய்ப்பு

**Scarborough** நகரில் **Markham / Ellesmere** சந்திப்புக்கு அருகில் **Manufacturing Workers** மற்றும் **Forklift Driver** வேலைகளுக்கு ஆட்கள் தேவை. **Full-time, Morning Shifts.**

**Looking for Workers and Forklift Driver to add to our team.**
**We are looking for hard-working and dedicated people for a long-term position.**
தொடர்புகளுக்கு: **ESSAN**
**(647) 993-2872**

## வேலைக்கு ஆட்கள் தேவை

Toronto பகுதியில் **cleaning** வேலைக்கு **cleaner** உடன் தேவை.

**தொடர்புகளுக்கு:**
**(647) 907-8911**

## CLEANING SUPERINTENDENT & CLEANERS WANTED

**Etobicoke, Scarborough** ஆகிய நகரங்களில் **Cleaning Superintendent & Cleaners** வேலை வாய்ப்புக்கள் உடடியாக உண்டு.
அனுபவம் தேவையில்லை.
**CALL:**
**(647) 864-3016**
அல்லது
**(647) 936-3806**

## HELP WANTED

**Furniture Finishing Company** ஒன்றிற்கு
**Full-Time / Part-Time**
**Sprayer & Sander**
வேலைக்கு ஆள் தேவை.
**PLEASE CALL:**
**(416) 636-3655**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — உதயன் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC IJ2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# உண்ணா நோன்பிருந்து தன் இன்னுயிர் நீத்த தியாதி திலீபனை நினைந்து தியானமிருப்போம்

அமைதிப் படை என்ற பெயரோடு எம் மண்ணில் பெருமளவு ஆயுதங்களோடு நிலை கொண்டிருந்த இந்தியப் படைகள் பார்த்திருக்க தியாகி திலீபனின் இன்னுயிர் பிரிந்துத அன்று. உண்ணா நோன்பிருந்த காரணத்தால் உடல் உபாதைகள் அதிகம் அவன் உடலுக்கு வலிகளைக் கொடுத்தாலும், சற்றும் மனம் தளராமல் தன் சாவை எதிர் கொண்டவன் எம் மண்ணன் மைந்தன் மகத்தான தியாகி திலீபன் அவர்கள்.

எம் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு முன்னராக தந்தை செல்வா அவர்கள் நடத்திய அஹிம்சைப் போராட்டம் தோல்வியடைந்த பின்பு எம் இளைஞர்கள் தங்கள் கரங்களில் ஆயுத போராட்டத்தைக் கையில் எடுத்தனர். ஆரம்பத்தில் ஆயுதங்களை எடுத்தனர்.

இலங்கை அரசை இந்தியா வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து 1987 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் தேதி ஐந்து கோரிக்கைகளை தனது கோசங்களாகக் கொண்டு உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார் தியாகி திலீபன் அவர்கள்.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தண்ணீர் அருந்தவும் போவதில்லை என்று அறிவித்தார். ஆனால் அந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால் உண்ணாவிரதத்தின் பனிரெண்டாம் நாள் செப்டம்பர் 26 1987 ல் வீரச் சாவடைந்தார். அவர் இந்திய அரசை நோக்கி முன்வைத்த ஐந்து கோரிக்கைகள் பின்வருமாறு-

1). மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்தவேண்டும்.

2). சிறைக் கூடங்களிலும் இராணுவ பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

3). அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

4). ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும்.

5). தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான கோரிக்கைகள் இந்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பெற்று அவைகள் ஏற்றுகொள்ளப்பட்டால் தங்களுக்கு ஒரு அங்கீகாரமும் தம் தமிழ் மக்களுக்கு நிம்மதியும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள் தலைவர் பிரபாகரன் உட்பட அனைத்துப் போராளிகளும். ஏன் எம் தமிழ் மக்களும் கூடவே.

ஆனால் அவ்வாறு நிகழவில்லை. அந்த வாலிபனின் உயிர் அநியாயமாகப் பறிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை அவன் முன்வைத்த கோரிக்கைகள் ஒன்று கூட நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு இலங்கை இந்திய அரசுகள் மாத்திரமல்ல. இலங்கையில் எம் மக்களிடம் வாக்குகளைப் பெற்ற எமது பிரதிகளுமே காரணம் என்று மக்கள் உணர்ந்துள்ளார்கள். இவ்வாறான தலைவர்களை நம்பியே தவமாக உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த அவனது நினைவு வாரத்தில் திலீபன் என்னும் தியாகிக்காக தியானம் அனுஸ்டிப்போமாக.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்பந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

# எழுத்து என்ற ஆயுதத்தால் சமூகத்தை செப்பனிட முனைந்தவர் இலக்கிய நண்பர் நந்தினி சேவியர் அவர்கள்

## அஞ்சலிக் குறிப்பில் கொழும்பிலிருந்து எழுத்தாளர் 'நல்லை அமிழ்தன்' தெரிவிப்பு

*(பின் பக்கத் தொடர்ச்சி)*

இலங்கையில் அஞ்சலிக் குறிப்பில் கொழும்பிலிருந்து "நல்லை அமிழ்தன்" தெரிவிப்பு.

உண்மையிலேயே எழுந்தாளர் நந்தினி சேவியரின் மறைவுச் செய்தி அதிர்ச்சியாகத்தானிருந்தது. தனது எழுத்துகளைச் சமூகச் சீர்கேடுகளைச் சுட்டெரிக்கும் போர்வாளாகப் பாவித்தவர் அவர்.

எப்பொழுதுமே தான் நம்பும் கோட்பாடுகள் விடயத்தில் , குறிப்பாக மார்க்சியக் கருத்துகள் விடயத்தில், சமரசம் செய்து கொள்ளாதவர். சமூக, அரசியுல் ரூ பொருளியல் விடுதலைக்கான மார்க்சியக் கருத்துகள் ரீதியில் அமைந்த போராட்டம், அதனுடன் இணைந்த தீண்டாமைக்கெதிரான போராட்டம் என்பவற்றில் தெளிவான, உறுதியான கருத்துகளைக் கொண்டிருந்தார்.

அவரது இழப்பு என்னைப்போல் பலருக்கும் அதிர்ச்சியுடன் கூடிய துயரம். அவரது இழப்பால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தவர், உற்றார் , உறவினர்கள், வாசகர்கள் அனைவருக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# கனடா - சுவிஸ் ஆகிய நாடுகளில் தமிழறிஞர் த. துரைசிங்கம் நினைவஞ்சலி நிகழ்வுகள்



அண்மையில் காலமாகிய தமிழறிஞர் த. துரைசிங்கம் நினைவஞ்சலி நிகழ்வுகள் கனடா நாட்டிலும் சுவிஸ் நாட்டிலும் 19 -ம் திகதி (19 - 09 - 2021) ஞாயிறு மாலை நடைபெறவுள்ளன.

"இலக்கிய வித்தகர் - கலாபூ'ணம்" - ஓய்வுநிலை மாவட்டக் கல்விப் பணிப்பாளர் த. துரைசிங்கம் நினைவஞ்சலி நிகழ்வு கனடா - ஸ்காபுரோ ஐயப்பன் இந்து கலாசார மண்டபத்தில் (635, Middlefield Rd, Scarborough, ON MIV 5B8) ஞாயிறு மாலை நடைபெறவுள்ளது.

கனடாவில் சிறப்பாகச் செயற்படும் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் இந்நிகழ்வினை ஒழுங்குசெய்துள்ளது. கனடாவிலுள்ள தீவக மக்களும் மற்றும் எழுத்தாளர்கள் - தமிழ் அபிமானிகளும் இந்நிகழ்வில் பெருமளவில் கலந்துகொள்வரென எதிர்பார்க்கப்படுகிறது.

சுவிஸ் பேர்ண் நகரில் ஞானலிங்கேசுவரர் திருக்கோவில் மண்டபத்தில் (Ero-paplatz 1 B, 3008 Bern) நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கவிதாஞ்சலி - நினைவுப்பகிர்வுரைகள் இடம்பெறவுள்ளன.

ஊடகவியலாளர்கள் - எழுத்தாளர்கள் - கல்வியாளர்கள் -புங்குடுதீவைச் சேர்ந்த பழைய மாணவர்கள் ஆகியோர் நினைவுரை நிகழ்த்துவர்.

சூம் (Zoom) வழியே இலங்கை - கனடா - இலண்டன் - பிரான்ஸ் நாடுகளிலிருந்து பல்ர் உரையாற்றவுள்ளனர்.

சுவிஸ் நாட்டில் வாழும் புங்குடுதீவின் அனைத்துப் பாடசாலை பழைய மாணவர்களும் நலன்விரும்பிகளும் இந்நிகழ்வினை ஒழுங்குசெய்துள்ளனர்.

# கனடாவில் தியாகி திலீபன் நினைவாக 'பைரவி நுண்கலைக் கூடம்' நடத்தும் தொடர்ச்சியான வணக்க நிகழ்வு



கனடாவில் மொன்றியால் மற்றும் ரொறன்ரோ ஆகிய நகரங்களில் தியாகி திலீபன் வணக்க நிகழ்வுகள் அனுஸ்டிக்கப்ப-டுகின்றன. நேற்று முன்தினம் புதன்கிழமை 15ம் திகதி தொடக்கம் இந்த வணக்க நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வகையில் தியாகி திலீபன் நினைவாக கனடா 'பைரவி நுண்கலைக் கூடம்' நடத்தும் தொடர்ச்சியான வணக்க நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை தொடக்கம் இடம்பெற்று வருகின்றன. இதற்கான ஏற்பாடுகளை கல்லூரியின் ஸ்தாபகர்கள் மற்றும் மாணவ மாணவிகள். அவர் தம் பெற்றோர்கள் ஆகியோர் செய்திருந்தனர். நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் கவிஞர் அகணி சுரேஸ் கவிதாஞ்சலி நிகழ்த்துதையும் செல்வி பிரேமிகா ஜெயச்சந்திரன் பாடல் ஒன்றைப் பாடுதையும் காணலாம். (படங்கள் சத்தியன்)




PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!
Joy Square Towns
Corebridge
Copperhill South Barrie
Deer Creek Fine Homes
Alba Condos
Edenshaw Developments Limited
ALBA
Arte Condos
EMBLEM
Vincent Condos
Rosehaven Homes Limited and Townwood Homes Inc. and Guglietti B...
Adagio Condos
Menkes Developments Ltd.
Kensington District Towns
Lynbury Homes
Minu Towns
Stateview Homes
Exchange District Condos 3
Camrost Felcorp
WestLine Condos
CentreCourt Developments Inc.
U.C. Tower 2
Tribute Communities and Riocan Real Estate Investment Trust
Verge Condos
Riocan Real Estate Investment Trust
Gemma Condos
Pinnacle International
Bala Logendralingam
REALTOR®
EXECUTIVE Award
100% Award
RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
Office: 416-287-2222
647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9


chatr
AUTHORIZED DEALER
NATION-WIDE TALK,
TEXT & DATA PLAN
$25/mo.
Scarborough Town Centre | 300 Borough Drive | Toronto, ON | 647-847-3634
Offer subject to change without notice. Get up to 500MB of data on the Talk, Text and Data Plan. Once you reach your 3G speed data allotment, your data speed will be reduced until your next anniversary date. Taxes extra. ™ Trademarks used under license ©2021

கனடிய செய்திகள்
Canadian News

# ஹமில்டன் நகருக்கு அருகில் நடைபெற்ற இரட்டை துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். அவரது தந்தை கடத்தப்பட்டார்.

ஹமில்டன் நகருக்கு அருகில் உள் மவுண்ட் ஹோப் என்னும் பட்டணம் சார்ந்த பகுதியில் நடைபெற்ற இரட்டை துப்பாக்கிச் சூடு, வீட்டு மற்றும் மனிதக் கடத்தல் ஆகிய பாரதுாரமான சம்பவங்களினால் ஒரு இளைஞர் கொல்லப்பட்டார் என்றும் அவரது சகோதரன் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் என்றும் மேலும் மேற்படி கொல்லப்பட்டவரதும் காயப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டவரதும் தந்தையான பகிர் அலி என்பவர் கடத்தப்பட்டார் என்றும் காலை கிடைத்த செய்திகள் தெரிவித்தன. பின்னர் சில மணி நேரங்களில் கிடைத்த செய்தியில் கடத்திச் செல்லப்பட்ட தந்தை பலத்த காயங்களுடன் கண்டு பிடிக்கப்பட்டு தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

நேற்று வியாழக்கிழமை, ஹாமில்டன் பிராந்திய போலீசார் அதிகாலை 3 மணியளவில் கிளன்காஸ்டர் மற்றும் டிக்கென்சன் சந்திப்பு பகுதியில் உள்ள ஒரு வீட்டில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக அங்கு விரைந்து சென்றனர். புத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் வாகனங்கள் அந்த வீட்டைச் சூழ்ந்து கொண்டன.

போலிஸ் அதிகாரிகள் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு சென்றபோது, துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நிலையில் இரண்டு இளைஞர்களைக் கண்டனர். அவர்கள் இருவரும் 20 வயதிற்குட்பட்ட சகோதரர்கள் எனவும் அவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் பலத்த காயங்களுடன் காணப்பட்டதால். ஊடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக போலீசார் தெரிவித்தனர். ஏனினும் காயமடைந்த ஒருவர் பின்னர் உயிரிழந்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.



பொலிசாரின் கூற்றுப்படி, அந்த இரு இளைஞர்களின் தந்தை கருப்பு நிற எஸ்யூவி என்னும் வாகனத்தில் வலுக்கட்டாயமாக கடத்திச் செல்லப்பட்டார் என்றும் அயலவர்கள் தெரிவித்தார்கள்.

கடத்தப்பட்டவர் 63 வய-தான ஃபகீர் அலி எனவும் பாகிஸ்த்தான் நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் ஓர வழக்கறிஞராக பணியாற்றி வந்தார் என்றும் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக பிந்திக்கிடைத்த தகவல்களின் படி அலி தனது வீட்டில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டபோது கருப்பு மற்றும் வெள்ளை நிற பிஜாமா ஆடை அணிந்திருந்தார் என்றும் தற்போது அவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிசார் அறிவித்துள்ளனர் கூறப்படுகிறது.

# கனடாவின் முன்னாள் நீதி அமைச்சர் ஜோடி வில்சன் எழுதிய ஆங்கில நூல் வெளிவந்துள்ளது




2019ம் ஆண்டுக்கு முன்னர் ஜஸ்டின் ட்ரூடோவின் தலைமையிலான அரசாங்கத்தில் நீதி அமைச்சராக பதவி வகித்த பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த திருமதி. ஜோடி வில்சன்-ராய்புல்ட் எழுதிய ஆங்கில நூல் தற்போது வெளிவந்துள்ள நிலையில் அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் சிலவேளை தற்போது 20ம் தி-கதி நடைபெறவுள்ள தேர்தலில் ஜஸ்டின் ட்ரூடோவின் போட்டியாளர்களான கொன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் எரின் ஓ டூல் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீட் சிங் மற்றும் பசுமைக் கட்சியின் தலைவி அனாமி போல் ஆகியோருக்கு ஜஸ்டின் ட்ரூடோவிற்கு எதிரான பிரச்சாரப் பாதையில் புதிய தாக்குதல்களைக் மேற்கொள்ளும் வகையில் அமையும் என்று கருதினாலும் சில அரசியல் விமர்சகர்கள் "அவ்வாறு நடக்காது என்றும் அந்த நோக்கத்தோடு தனது புத்தகத்தை ஜோடி வில்சன்-ராய்புல்ட் எழுதவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

"கேபினட்டில் இந்தியன்" (Indian In the Cabinet) என்ற பெயரில் எழுதப்பட்டுள்ள இந்த புத்தகத்தில் வில்சன்-ராய்போல்ட் எஸ்என்சி-லாவால் என்னும் மொன்றியால் நகர் சார்ந்த நிறுவனம் சம்பந்தமான விவகாரத்தின் மத்தியில் ட்ரூடோ அரசாங்கத்தை விட்டு வெளியேறிய பிறகு, 2021 தேர்தல் பிரச்சாரத்தின் கடைசி வாரத்தில் வெளிவந்திருப்புத அதன் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றுத என்றும் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். 304 பக்கங்களைக் கொண்ட இந்த புத்தகம் அவரது நெருக்கடியான நாட்களை கூறுவதாகவும் அறியப்படுகின்றுத.



ஒட்டாவாவில் அவர் அமைச்சர் பதவி வகித்த போது கட்சி சார்ந்த அரசியலை ஜோடி வில்சன்-ராய்புல்ட் எப்படிப் பார்த்தார் என்பதையும் ட்ரூடோ எப்படியான மனிதர் அல்லது பிரதம மந்திரி என்பதைப் பற்றி மேலும் அறிய ஆர்வமுள்ள எவருக்கும் படிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளதாவும் அறியப்படுகின்றது. இதேவேளை, அடுத்த வாரம் 20ம் திகதி நடைபெறவுள்ள வாக்கெடுப்பின் தாக்கம் நிறைந்த காலப்பகுதியில், வில்சன்-ராய்போல்ட் ஒரு பழங்குடிகள் சார்ந்த நல்லிணக்கம், குற்றவியல் நீதி சீர்திருத்தம் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றில் "உண்மையான மாற்றம்" எவ்வளவு சாத்தியம் என்பதைப் பற்றி ஒரு தெளிவான பார்வையை தெரிவித்திருப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக அரசியல் விமர்சகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த தேர்தலில் ஒரு சுயேச்சையாக போட்டியிட்டு வெற்றி பெற்ற அவர் 20ம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்குத. ஆனால் இந்த புத்தகத்தின் வருகையானது. அவருடைய குரலை மீண்டும் ஒருமுறை, மிக உயர்ந்த அரசியல் மட்டத்திற்கு கொண்டு செல்லும் என்றும் மக்களால் வாசிக்கப்படும் என்றும் இந்த புத்தகம் அக்டோபர் நடுப்பகுதியில் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் கனேடியர்கள் 20ம் திகதி வாக்களிப்பதற்கு ஆறு நாட்களுக்கு முன்னர் அதன் வெளியீடு திகதி மாற்றப்பட்டது என்பதும் லிபரல் கட்சிக்கு தாக்கத்தை அதிகரிக்க தனக்கு எண்ணம் இல்லை என்றும் ஜோடி வில்சன்-ராய்புல்ட் கூறியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, தற்போதைய தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போது கன்சர்வேடிவ் தலைவர் எரின் ஓ டூல் மற்றும் புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர் ஜக்மீத் சிங் ஆகியோர் வில்சன்-ராய்பவுல்டின் அனுபவத்தை ஜஸ்டின் ட்ரூடோ பற்றிய எச்சரிக்கைகளை கனடிய வாக்காளர்களுக்கு உத்வேகமாகவும் எடுத்துக் கூறி வருகின்றனர் என்றும் பலர் தெரிவித்துள்ளனர்.

ஓ"டூல் ட்ரூடோ தனது தேர்தல் பிரச்சாரத்தின் போது "நான் ஜஸ்டின் ரூடோ பற்றி சொல்லுவதை நீங்கள் நம்பாவிட்டால் ஜோடி வில்சன்-ராய்போல்ட் தனது புத்தகத்தில் என்ன சொல்லியிருக்கின்றார் என்பதை படித்துப்பாருங்கள்" என்றும் வாக்காளர்களைப் பார்த்துக் கூறியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

லிபரல் கட்சித் தலைவரான ஜஸ்டின் ட்ரூடோவுக்கு எதிரான ஜோடி வில்சன்-ராய்போல்ட் அவர்களின் முதன்மையான குற்றச்சாட்டுகளில் ஒன்று புத்தகத்தின் தொடக்க அத்தியாயத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. பிர-தமருடனான நேருக்கு நேர் சந்திப்புகளுக்குப் பிறகு ட்ரூடோ மற்றும் அவரது அலுவலகத்தில் பணியாற்றியவர்கள் சிலர் தன்னோடு தொடர்பு கொண்டு கியூபெக் இன்ஜினியரிங்கிற்கு எதிரான நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டதாகவும் ஓர செய்தி வெளியானது.

வில்சன்-ராய்போல்ட் நிறுவனம் பின்னர் ஒரு மோசடிக்கு குற்றத்தை ஒப்புக்கொண்டது என்றும் மற்றும் 280 மில்லியன் டாலர்கள் அபராதம் விதிக்கப்பட்டது என்பதையும் அவர் அடிக்கோடிட்டுக் காட்டுவதாக புத்தகத்தை வாசித்தவர்கள் தங்கள் பதிவுகளில் தெரிவித்துள்ளனர்.

# செப்டெம்பர் 22ஆம் திகதி முதல் கனடா — ஒன்ராறியோவில் தடுப்பூசிக்கான சான்றிதழ் தேவை



கொரோனா நோயின் திரிபுபட்ட வடிவமான அதிகூடிய வேகத்தில் பரவக்கூடிய டெல்டா நோய்த்தொற்றினை அதிகளவில் கொண்ட நான்காவது அலையிலிருந்து மாநில மக்களைப் பாதுகாப்பதற்கு மாநில அரசாங்கம் தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. தகுதியுடைய ஒவ்வொருவரும் தடுப்பூசி போட்டுக்கொள்வது கோவிட்-19 நோய்த்தொற்றுப் பரம்பலைத் தடுக்க உதவும் என்பதால் அரசாங்கம் அனைவரையும் தவ-றாது தடுப்பூசி போட்டுக்கொள்வதற்கு அறிவுறுத்துகிறது.

செப்டம்பர் 22ஆம் திகதி முதல் அனைவரும் குறிப்பிட்ட சில வணிகங்கள் மற்றும் நிலையங்களுக்குச் செல்லும்போது தாங்கள் தடுப்பூசி போட்டுக்கொண்டதற்கான சான்றினைக் காண்பிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள். செப்டம்பர் 22ஆம் திகதிக்கு முன்னதாகவே அனைத்து ஒன்ராறியோ வாழ் மக்களும் தாங்கள் தடுப்பூசி போட்டுக்கொண்டதற்கான சான்றினை ழவெயசழை.உய.்டிழழமஎயஉஉைநெ எனும் இணைய முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மேற்படி சான்றினைப் பெற்றுக்கொள்வதற்கு உதவி தேவைப்படுபவர்களும், கணினி அல்லது அச்சிடும் வசதிகள் இல்லாதவர்களும் மாநில தடுப்பூசி தொடர்பு நிலையத்தினை 1-833-943-3900 என்ற தொலைபேசி எண்ணில் அழைத்து தமக்கான உதவியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பிட்ட சில வணிக நிலையங்களுக்கு அல்லது நிலையங்களுக்குச் செல்லும் ஒன்ராறியோ வாழ் மக்கள் அனைவரும் தாங்கள் தடுப்பூசி போட்டுக்கொண்டதற்கான சான்றினை தங்கள் புகைப்பட அடையாள அட்டை ஒன்றுடன் இணைத்துக் காண்பிக்க வேண்டும்.

எடுத்துக்காட்டுக்கு, அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள்:

☐ பிறப்பு உறுதிச்சான்றிதழ்
☐ குடியுரிமை அட்டை
☐ வாகன ஓட்டுனர் அட்டை
☐ அரசாங்கத்தினால் (ஒன்ராறியோ அல்லது ஏனைய அரசினால்) வழங்கப்பட்ட அடையாள அட்டைகள், உடல்நலக் காப்புறுதி அட்டை **(Health Card)** உள்ளிட்டவை.
☐ பூர்விகக்குடி அத்தாட்சி அட்டை / பூர்வீகக்குடி உறுப்பினர் அட்டை கடவுச்சீட்டு
☐ நிரந்தர வதிவுரிமை அட்டை

செல்லும்போது பயனாளர்கள் முழுமையாக தடுப்பூசி போட்டிருக்க வேண்டிய இடங்கள்:

☐ உள்ளக மாநாட்டு / நிகழ்ச்சி மண்டபங்கள், கலையரங்குகள், திரையரங்குகள்
☐ உள்ளக உணவகங்கள், மது அருந்தும் கூடங்கள், ஏனைய உணவு / பான நிலையங்கள்
☐ உள்ளக / வெளியக நடன வசதிகளுடன்கூடிய உணவு / பானம் பரிமாறும் இடங்கள் (உதாரணம்: இரவுநேர கேளிக்கை விடுதிகள் / நடனமாடக்கூடிய வசதியுள்ள விடுதிகள்)
☐ உள்ளக குதிரைச்சவாரி நிலையங்கள், மகிழுந்து ஓட்டப்போட்டி நிலையங்கள் மற்றும் இவைபோன்ற நிகழ்வுகள் நடைபெறும் இடங்கள்.
☐ பார்வையாளர்கள் பங்குகொள்ளும் உள்ளக வர்த்தக திரைப்பட மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பு நிலையங்கள்
உள்ளக தண்ணீர் விளையாட்டரங்கங்கள்
☐ பார்வையாளர்கள் விளையாட்டு நிகழ்ச்சியைப் பார்வையிடும் வசதியுள்ள உள்ளக இடங்கள்
உள்ளக சூதாட்ட நிலையங்கள், கேளிக்கை விளையாட்டுடன்கூடிய இடங்கள்
☐ உள்ளக விளையாட்டு வசதிகளை / உடற்பயிற்சி வசதிகளைக் கொண்ட இடங்கள், உள்ளக பொழுதுபோக்கு உடற்பயிற்சி நடவடிக்கைகள், பயிற்றுனருடன்கூடிய தனிநபர் உடற்பயிற்சிக்கூடங்கள் உள்ளடங்கலாக
☐ உள்ளக கருத்தரங்கு / மாநாட்டு நிலையங்கள் (உதாரணமாக: விழா மண்டபங்கள் / மாநாட்டு மண்டபங்கள்)
☐ உள்ளக பாலியல் தொடர்பான கேளிக்கை நிலையங்கள்

உங்களையும் மற்றவர்களையும் பாதுகாக்க நீங்கள் செய்யக்கூடிய முக்கியமான செயல் தடுப்பூசி போட்டுக்கொள்ளுதல் மட்டுமே. முதலாவது அல்லது இரண்டாவது கோவிட்-19 தடுப்பூசியை நீங்கள் இன்னும் போட்டுக்கொள்ளவில்லையென்றால், தயவுசெய்து இன்றே சென்று போட்டுக்கொள்ளுங்கள்.

இவ்வாறு ஒன்றாரியோ மாநில அரசு மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பயங்கரவாதத்துடன் தொடர்புடைய செய்திகளையும் பகிர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் சிறையில் வாடும் திருகோணமலை இளைஞர்கள்



இலங்கையில் சமூக வலைத்தளங்களில் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய புகைப்படங்களையும், செய்திகளையும் பகிர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் திருகோணமலையில் சில இளைஞர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கடந்த வருடமும் இவ்வருட ஆரம்பத்திலும் கைது செய்யப்பட்டிருந்தார்கள் இவர்களுடைய வழக்குகள் மூதூர் மற்றும் திருகோணமலை நீதி மன்றங்களிலும் இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில் அவர்களுடைய வழக்குகள் தொடர்பில் சட்டவியலாளர்களின் உதவி நாடப்பட்டபோது இதற்கு பிணை வழங்க முடியாது எனவும் கடுமையாகப் பதில் சொல்லப்பட்டது. எனவே ஜனாதிபதி அவர்கள் தங்களுடைய பிள்ளைகளை மன்னித்து தங்களுக்கு பிணை வழங்க வேண்டும் எனவும் கைத செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக கூறப்படுவதாவது. சமூக வலைத்தளங்களில் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய புகைப்படங்களையும், செய்திகளையும் பகிர்ந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் திருகோணமலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் பெற்றோர்கள் சிலர் ஊடக சந்திப்பினை ஏற்பாடு செய்து கைது செய்யப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

திருகோணமலை நகரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்த ஊடக சந்திப்பு இடம்பெற்றது. இந்த ஊடக சந்திப்பின் போது கைது செய்யப்பட்டவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் இவ்வாறு கருத்து தெரிவித்தனர்.

எமது பிள்ளைகளுக்கும் பயங்கரவாத அமைப்பாக அரசாங்கம் கூறும் தரப்பினருக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது எனவும் அவர்களுடைய வயதை கணக்கிட்டால் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்றதே அவர்களுக்கு தெரியாது.

இருப்பினும் சமூக வலைத்தளங்களில் அதன் பின்விளைவுகள் பற்றி அறியாமல் தவறுதலாக சில பதிவுகளை பதிவிட்டிருந்தார்கள் அது தவறுதான் அந்த தவறை மன்னித்து விடுதலை செய்ய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஆவண செய்ய வேண்டும் எனவும் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை அவர்கள் செய்யமாட்டார்கள் எனவும் மன்றாட்டமாக கேட்டுக் கொண்டார்கள்.

இவர்கள் தொடர்பாக வழக்குகள் இடம்பெற்று வரும் நிலையில் அதில் எவ்வித முன்னேற்றமும் இல்லையெனவும் அவர்களுடைய உழைப்பில்தான் எங்களுடைய வாழ்வாதாரம் இருந்ததாகவும் உறவினர்கள் தெரிவித்தனர். இப்போது நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றோம் எனவே எங்களுடைய குடும்ப நிலையை கருத்தில் கொண்டு அவர்களை பிணையிலாவது விடுதலை செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர். எனினும் இந்த விடயத்தில் ஜனாதிபதியோ அன்றி பாராளுமன்ற உறுப்பினர்களோ சாதகமான பதில்களைக் கூறும் அளவிற்கு இல்லை என்றும் கூறப்படுகின்றது.

# இலங்கையில் பொலிஸ் கான்ஸ்டபிள் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை

பொலிஸ் விஷேட அதிரடிப்படையில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மினுவங்கொட, உடுகம்பொல பகுதியை சேர்ந்த 36 வயதுடைய ஒருவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.


அவர் தற்கொலை செய்து கொண்டமைக்கான காரணம் இதுவரையில் இனங்காணப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பல விடயங்கள் பற்றி மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் தமது அறிக்கையில் குறிப்பிடவில்லை

## யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் கவலை



தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பல விடயங்கள் பற்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் தமது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்பது மன வருத்தத்தைத் தருகிறது. என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் தமது அறிக்கையை வெளியிட்டுள்ளார். அதனை எப்படிப் பார்க்கிறீர்கள்? என அவரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு பதில் வழங்கியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பல விடயங்கள் பற்றி அவர் குறிப்பிடவில்லை என்பது மன வருத்தத்தைத் தருகிறது.
உதாரணத்திற்கு எமது காணிகளை அரசாங்கம் தந்திரமாகவும் பலாத்காரமாகவும் கையேற்றல் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

ஒரு வேளை பல உண்மையான தரவுகளை விபரமாக அவர் எதிர்பார்த்திருக்கின்றாரோ நான் அறியேன். அடுத்த மார்ச் மாதக் கூட்டத்திற்கு முன்னர் இவை பற்றி முழு விவரங்களை நாம் சேகரித்து அனுப்ப வேண்டும். எனினும் பல முக்கிய விடயங்களை அவர் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

முதலாவதாக மக்களை வேவு பார்ப்பது அவர்களை அச்சுறுத்துவது மற்றும் மனித உரிமை மீறல் செயற்பாட்டாளர்களை, பத்திரிகையாளர்களை, காணாமல் போனோரின் குடும்ப உறுப்பினரைக் குறிவைத்து அவர்களை நீதிமன்றில் நிறுத்துவது போன்ற செயற்பாடுகள் தற்போது விரிவடைந்து மாணவர்களை, கல்வியாளர்களை, மருத்துவர்களை ஏன் மதத் தலைவர்களையும் அரசாங்கம் கண்காணிக்கத் தொடங்கியுள்ளது என்பதைக் கூறியுள்ளார்.

இரண்டாவதாக நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் ப்றிப் பேசினால் போதாது நடைமுறையில் முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும் என்றுள்ளார்.

மூன்றாவதாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளை உடனே தற்காலிகமாகவேனும் செயலிழக்க வைக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

நான்காவதாக 2019 ஆண்டு ஈஸ்டர் ஞாயிறில் நடந்த குற்றங்கள் சம்பந்தமான சூத்திரதாரிகளை உடனே கண்டுபிடித்து உண்மையையும் நீதியையும் நிலை நாட்ட வேண்டும் என்றுள்ளார். இப்படி பல விடயங்களை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று பொருள்படக் கூறியுள்ளார்.

மேலும் அரசாங்கத்திற்கு சார்பாகவும் பேசி தொடர்ந்து பொறுப்புக்கூறல் விடயத்தில் அவசியமான செயற்பாடுகளை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

மேலும் பொறுப்புக்கூறல் சம்பந்தமான விசாரணைகளை உடனே நடத்த உரிய குழுவை அமைப்பதாகவும் அதற்கான நிதிகளை அங்கத்துவ நாடுகள் பெற்றுத்தர வேண்டும் என்றும் கூறியுள்ளார். மொத்தத்தில் நாம் எதிர்பார்த்த பல விடயங்கள் கூறப்படாமல் விட்டாலும் தற்போதைக்கு இலங்கை அரசாங்கத்தை சர்வதேச கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளார்.

அரசாங்கமும் வேறு வழியின்றி அதற்கு அசைந்துள்ளது. பணம் தான் பிரச்சனை. அத்துடன் நாம் நடப்பவை பற்றிய உண்மை விபரங்களை பட்டியலிட்டு அவருக்கு அனுப்பக் கடமைப்பட்டுள்ளோம்.

**- மன்னார் நிருபர் (14-09-2021)**

# இலங்கையின் இராஜாங்க அமைச்சர்களில் ஒருவரான லொஹான் ரத்வத்த ராஜினாமா



இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தனது இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து ராஜினாமா செய்வதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதுடன் அவர் அதனை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் வெலிக்கடை மற்றும் அனுராதபுரம் சிறைச்சாலைகளில் தன்னால் ஏற்பட்ட அசம்பாவிதமான சம்பவங்களுக்கு பொறுப்பேற்று அவர் தனது பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை கவலையளிக்கின்றது

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி



கடந்த ஐ.நா.சபையின் அறிக்கை என்பது மிகவும் ஒரு முக்கியம் வாய்ந்த காத்திரமான அறிக்கையாக அமைந்திருந்தது. மக்களும் அதனை வர வேற்ற நிலையில் தற்போதைய ஆணையாளரின் அறிக்கை என்பது மிகவும் கவலை தரக்கூடிய விடையமாக அமைந்துள்ளது. என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் 15ம் திகதி புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் அவர்களின் அறிக்கையை நிராகரிக்க முடியாது. ஆனால் கவலையளிக்கின்றது.

குறித்த அறிக்கையில் இலங்கை அரசாங்கத்தினால் கூறப்பட்ட விடையங்கள் குறிப்பாக இலங்கை அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்த முடியாது என தெரிவித்த விடையங்கள் மீண்டும் ஒத்துழைக்கத் தயார் என்று கூறப்படுகின்ற நிலையில் கூறப்பட்ட விடயங்களுக்கு மாறாக எமது தமிழ் பிரதேசங்களில் பல்வேறு அத்து மீறல்கள் நடந்து கொண்டு உள்ளதை நாங்கள் குறிப்பிட்டிருந்தோம்.

அவ்விடயம் சம்பந்தமான கருத்துக்கள் கூறப்படவில்லை என்பது கவலையளிக்கின்றது. மேலும் அரசியல் தீர்வு சம்பந்தமாக ஆணையாளரின் அறிக்கையில் இடம் பெறவில்லை என்பது மிகவும் கவலையளிக்கிறது.

இந்த நாட்டில் இடம் பெறும் இராணுவ ஆட்சி,காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, ஆசிரியர் களின் போராட்டம், இவை அத்தனையும் ஒரு பிரச்சினையாக கூறப்பட்டுள்ளதே தவிர அரசாங்கம் அவற்றை எல்லாம் உடனடியாக செய்ய வேண்டும் அல்லது நிறுத்த வேண்டும் என்கிற உத்தரவு குறித்த அறிக்கையில் இல்லாமல் இருப்பது கவலையளிக்கிறது.

கடந்த ஐ.நா.சபையின் அறிக்கை என்பது மிகவும் ஒரு முக்கியம் வாய்ந்த காத்திரமான அறிக்கையாக அமைந்திருந்தது. மக்களும் அதனை வரவேற்ற நிலையில் தற்போதைய ஆணையாளரின் அறிக்கை என்பது மிகவும் கவலை தரக்கூடிய விடையமாக அமைந்துள்ளது.

குறித்த அறிக்கையின் ஊடாக நாங்கள் எதிர் பார்க்கின்ற சர்வதேசம் என்கிற விடையம் கை விட்டு போய் விடுமோ? என்கின்ற கேள்வி எங்கள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. குறித்த அறிக்கையில் எமது பல பிரச்சினைகள் தொடர்பாக மேலோட்டமாக காட்டப்பட்டுள்ளது.

அதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு நிலைப்பாட்டை இந்த அறிக்கை சொல்லவில்லை. அதனை விட இலங்கை அரசாங்கத்தை நம்புவதாகவும், புதிதாக தெரிவு செய்யப்பட்ட வெளிவிவகார அமைச்சர் நல்லதொரு மனிதர் என்கின்ற போர்வையில் அவரை புகழ்ந்து பேசுகின்ற ஒரு நிலையும் அரசாங்கத்திற்கு கால அவகாசத்தை வழங்குகின்றது போன்ற ஒரு நிலையும் காணப்படுகிறது.

இந்த ஜனாதிபதியும் அரசாங்கமும் இருக்கும் வரை தமிழ் பேசும் மக்களுக்கு நியாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லை. கால தாமதத்தை ஏற்படுத்துகின்ற வாய்ப்பாக இருக்கும். என அவர் மேலும் தெரிவித்தார்.

- மன்னார் நிருபர் (15-09-2021)



# பிரதமர் மகிந்தாவின் புதல்வர் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் விஜயம் செய்தார்

இலங்கை பிரதமர் மதிந்தாவின் புதல்வர் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ 16ம் திகதி வியாழக்கிழமை மாலை அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ள தமிழ் கைதிகளை சந்தித்தார்.

கைதிகள் தங்கள் பிரச்சனைகள் குறித்து அமைச்சரை உடனடியாக சந்திக்க வேண்டும் என அண்மையில் கடிதம் எழுதியிருந்தனர்.

இந்நிலையில் கைதிகளை சந்தித்த நாமல் ராஜபக்ஷ அவர்களுடைய கவலைகளை கேட்டறிந்ததுடன் அவை தொடர்பாக தீர்வொன்றை பெற்றுத்தரும் நடவடிக்கைகளை தனிபட்ட ரீதியில் தானே முன்னெடுப்பதாகவும் அமைச்சர் அவர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

(16-09-2021)

உலக செய்திகள்
World News

# ஆப்கானிஸ்தானில் பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் இஸ்லாமிய கடும்போக்குச் சட்டங்கள்அமுல் செய்யப்படுகின்றன

ஆப்கானிஸ்தானில் தலிபான் அரசாங்கத்தில் உயர் கல்வி அமைச்சராகப் பதவி வகிக்கும் பாக்கி ஹக்கானி லோயா ஜிர்கா கூடாரத்தில் உரையாற்றும்போது, “நாட்டின் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் ஷரியா சட்டத்தின்படி முன்னெடுக்கப்படும்” என்று கூறியுள்ளார். இதன் அர்த்தம் பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும். இனிமேல் கடுமையான இஸ்லாமிய கடும்போக்குச் சட்டங்கள் அமுல் செய்யப்படும் என்று கருதுவதாக அங்குள்ள கல்வியாளர்கள் குழு ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

இந்த அடிப்படையில் இனிமேல் கல்விக் கூடங்களில். ஆண், பெண் மாணவர்கள் ஒரு வகுப்பறையில் கலந்து கல்வி பெறத் தலிபான்கள் தடை விதித்துள்ளதைத் தொடர்ந்து பல்கலைக்கழக வகுப்பறைகள் ஆண், பெண் மாணவர்களுக்கென திரைச் சீலைகள் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளன.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் “பஜ்வாக் ஆப்கான் நியூஸ்” என்ற ஆப்கானிஸ்தான் செய்தி நிறுவனம் டுவீட்டரில் புகைப்படத்தைப் பகிர்ந்துள்ளது. அந்தப் புகைப்படத்தில் ஆண், பெண் மாணவர்கள் கலப்பது திரைச் சீலை கொண்டு பிரிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் கல்விக்கூடங்களின் வகுப்பறைகளில் மாணவ மாணவியர் கலப்பதைத் தவிர்க்கவென சுவர் அமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் தலிபான்களுக்கும் இடையில் ஏற்கனவே நடைபெற்ற கூட்டமொன்றில் ஆண், பெண் மாணவர்கள் கலந்து கல்வி கற்பதை தொடர்ந்தும் முன்னெடுக்காது அதனை முடிவுக்கு வர வேண்டும் என்று தலிபான்கள் குறிப்பிட்டுள்ளனர்.



நாட்டிலுள்ள பாடசாலைக-ளில் ஆண், பெண் மாணவர்களுக்கான தனித்தனி வகுப்பறைகள் உள்ளன. அதேநேரம் ஆண், பெண் மாணவர்கள் கலந்து கல்விகற்கும் அரச தனியார் பல்கலைக்கழகங்களும் இருக்கின்றன என்று ஏ.என்.ஐ. சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் தலிபான்களின் இந்நடவடிக்கை குறித்து அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர். “பொது பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் தனித்தனியாக வகுப்புகளை நிர்வகிக்கலாம். ஆனால் தனியார் கல்வி நிறுவனங்களில் பெண் மாணவியர் குறைவாக இருப்பதால் இது சிரமமான காரியமாக இருக்கும்” என்றும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

நாட்டின் முக்கிய பல்கலைக்கழகங்களில் வளங்கள் பற்றாக்குறையாக இருப்பதால் பல்வேறு வகுப்புகளை ஏற்பாடு செய்ய முடியாத நிலைமை உள்ளது. அதனால் தலிபான்களின் இந்நடவடிக்கை பெண்கள் உயர் கல்வியை இழக்கும் நிலையை உருவாக்கும் என்று பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.



# நோர்வே நாட்டின் தேசிய அரசியலில் இடம் பிடித்துள்ள இலங்கைத் தமிழரான ஹம்ஸி குணரட்ணம்

நோர்வே நாட்டில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றது தேர்தலில், இலங்கை தமிழரான ஹம்ஸி குணரட்ணம் தெரிவு செய்யப்பட்டுளார். நோர்வேயின் மிகப்பெரிய அரசியற் கட்சியான தொழிற்கட்சி, நாட்“டின் தலைந-கரான ஒஸ்லோவில் நிறுத்திய வேட்பாளர்களில், பிரதமர் பதவிக்கான வேட்பாளர் யூனாஸ் கார் ஸ்டூரவுக்கு அடுத்த இடத்தில் ஹம்சியை நிறுத்தியதன் மூலம் அவரது நாடாளுமன்றப் பதவியை உறுதி செய்திருந்தது. அத்துடன் இவரது நோர்வே நாட்டில் வாழும் அனைத்து தமிழ் மக்களுக்கும் ஒரு அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது என நோர்வேயில் வாழும் பல அன்பர்கள் தங்கள் சமூக ஊடகங்களின் பக்கங்களில் பதிவுகளை வெளியிட்டுள்ளனர்.

நோர்வேயில் இடம்பெற்ற நாடாளுமன்ற தேர்தலில், இலங்கை தமிழரான ஹம்ஸி குணரட்ணம் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக இலங்கையில் இருந்து மூன்று வயதில் தனது பெற்றோருடன் நோர்வேக்கு அகதியாக சென்ற ஹம்சாயினி ஆரம்பத்தில் நோர்வே நாட்டின் மிகப்பெரிய கட்சியான தொழிற்கட்சியின் ஒஸ்லோ இளைஞரணியில் இணைந்தார் பின்னர் அவர் அதன் தலைவியாகவும் பதவி வகித்தவர். 19 வயதில் (2007) ஒஸ்லோ மாநகரசபையின் பிரதி-நிதியாகப் பெரும் ஆதரவுடன் தெரிவான அவர், 2015 முதல் ஒஸ்லோ மாநகரசபையின் துணை முதல்வராகப் பதவி வகிக்கிறார். இந்நிலையில் அவருக்கு பலரும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் கூறிவருகின்றனர். இதே-வேளை முழுநேர அரசியல்வாதியாக நோர்வே தமிழர்கள் மத்தியில் இருந்து ஹம்ஸி மாத்திரமே உருவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஹம்ஸி குணரட்னம் 2007 இல் முதல் முறைப்படி நடைபெற்ற தேர்தலில் ஒஸ்லோ நகர சபையின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார், பின்னர் அவர் ஸ்டோர்டிங்கின் துணை உறுப்பினராக இருந்தார் (2013-2017) மற்றும் ஒஸ்லோவின் துணை மேயராக 21 அக்டோபர் 2015 அன்று பதவியேற்றார். தற்போது பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளார்.



இலங்கையில், மைத்திரிபால சிறிசேனா ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் இலங்கைக்குச் சென்ற போது அவரைச் சந்தித்து நினைவுப் பரிசு ஒன்றை வழங்கியபோது எடுக்கப்பட்ட படம் இங்கு காணப்படுகின்றது.

# நாட்டில் உணவு நெருக்கடியா?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

**நா**டு பொருளாதார ரீதியாக வங்குரோத்தாகி விட்டதா? என்று ஒரு இந்திய ஊடக நண்பர் கேட்டார். நாட்டின் பொருளாதாரம் சரிந்துவிட்டது என்பது உண்மை. அமெரிக்க டொலரைக் காணமுடியவில்லை. ஆனால் நாங்கள் இன்னமும் பாணை சீனியில் தொட்டு சாப்பிடும் ஒரு நிலைக்கு வரவில்லை என்று அவரிடம் சொன்னேன். ஆனால் இன்னும் சில மாதங்களில் நிலைமை மேலும் மோசமடையலாம் என்று பொருளியல் நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள்.

இந்திய யூடியூப்பர்களும் சில இணைய ஊடகங்களும் இலங்கைத் தீவின் பொருளாதார நெருக்கடியை குறித்து அதிகமாக செய்திகளை வெளியிடுகின்றன. இச்செய்திகள் உள்நோக்கத்தோடு மிகைப்படுத்தப்பட்டவை என்று இலங்கைத்தீவில் ஒரு தரப்பினர் கூறுகிறார்கள். ஆனால் கடந்தவாரம் அரசாங்கம் 623 பொருட்களை இறக்குமதி செய்வதற்கு சில நிபந்தனைகள் விதித்திருக்கிறது. அதன்படி பொருட்களை இறக்குமதி செய்ய விரும்பும் வணிகர்கள் கொள்வனவு விலைக்கு நிகரான தொகையை வங்கியில் வைப்பிலிட வேண்டும் என்று அரசாங்கம் கூறுகிறது. ஏனெனில் அரசாங்கத்தின் இறக்குமதி சக்தி குறைந்து விட்டதே காரணம் என்று பொருளியல் நிபுணர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அதற்கு காரணம் வெளிநாட்டு செலவாணி ஒதுக்கீடு குறைந்தமைதான் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இலங்கைதீவில் பொருளாதாரம் நெருக்கடியில் சிக்கியது இப்பொழுதுதான் என்பதல்ல. வைரஸ் தொற்றுக்கு முன்னரே நாட்டின் சுற்றுலாத்துறை பயங்கரமாக பாதிக்கப்பட்டிருந்தது. ஈஸ்டர் குண்டு வெடிப்பையடுத்து நாடு உல்லாசப் பயணிகளை கவரும் தன்மையை பெருமளவுக்கு இழந்துவிட்டது. வைரஸ் வந்து நிலைமையை மேலும் மோசமாக்கியிருக்கிறது என்பதே சரி. நாட்டுக்கு வெளிநாட்டு செலாவணியை ஈட்டித்தரும் துறைகளான ஆடை உற்பத்தித் துறை சுற்றுலாத்துறை புலம் பெயர்ந்து உழைக்கும் இலங்கையர்களின் உழைப்பு மற்றும் ஏனைய ஏற்றுமதி துறைகள் போன்றவற்றில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டின் வெளிநாட்டு செலவாணி ஒதுக்கீடு குறைந்துவிட்டது. அதனால் அரசாங்கம் பல பொருட்களில் இறக்குமதியை நிறுத்தியது.

வசதி படைத்தவர்கள் ஓடும் வாகனங்கள் முதற்கொண்டு கீழ் மத்தியதர வர்க்கத்தினரின் மோட்டார்சைக்கிள்கள் உள்ளடங்கலாக வாகனத் இறக்குமதி நிறுத்தப்பட்டுவிட்டது. அதைப்போலவே மஞ்சள், உரம் உட்பட பல்வேறு பொருட்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த வாரம் 623 பொருட்களில் இறக்குமதிக்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. அந்த நிபந்தனைகள் மறைமுகமாக இறக்குமதியை கட்டுப்படுத்துகின்றன. குறிப்பாக அது சிறிய நடுத்தர ஏற்றுமதியாளர்களை அதிகம் பாதிக்கக்கூடியது மேற்கண்ட 623 பொருட்களின் இறக்குமதிக்கு நிபந்தனை விதிப்பதற்கு கிட்டத்தட்ட ஒரு வாரத்துக்கு முன்பு அரசாங்கம் அவசரகால சட்ட விதிகளின்படி அத்தியாவசிய உணவுப் பொருட்களை நிர்வகிப்பதற்கு ஒரு மேஜர் ஜெனரலை பொறுப்பாக நியமித்தது. அத்தியாவசியப் பொருட்களை அவசரகாலச் சட்டத்தின் கீழ் நிர்வகிக்க வேண்டிய ஒரு நிலைமை தோன்றியபோதே இலங்கை தீவு பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலையை அடைந்து விட்டது என்று வெளிநாட்டு ஊடகங்கள் கருதும் ஒரு நிலைமை தோன்றியது.

இவ்வாறு அத்தியாவசிய உணவுப் பொருட்களை அவசரகால சட்ட விதிகளின் கீழ் கொண்டுவந்த பின்னர் போலீசாரும் படைத்தரப்பினரும் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள பெரிய மற்றும் சிறிய பண்டகசாலைகளின் மீது திடீரென்று பாய்ந்தன. இதன்போது பதுக்கி வைக்கப்பட்டிருந்த அரிசி, மா, சீனி போன்ற பல பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. மேற்கண்ட நடவடிக்கைகளின் மூலம் அத்தியாவசிய பொருட்களை பதுக்குவோர் மீது அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கும் என்று ஒரு உணர்வு நாடு முழுதும் உருவாக்கப்பட்டது.

எனினும் உள்ளூர் கடைகளிலும் பல்பொருள் அங்காடிகளிலும் சீனிக்கும் மாமாவுக்கும் பால்மாவுக்கும் இப்போதும் தட்டுப்பாடு உண்டு. பெரும்பாலான பல்பொருள் அங்காடிகளில் சீனி இருக்கும் இடம் காலியாக இருக்கிறது. பால்மா இருக்கும் இடமும் காலியாக இருக்கிறது. பெரும்பாலான பல்பொருள் அங்காடிகளில் விலை பொறிக்கப்பட்ட சீனிப் பொதிகளை காண முடியவில்லை. மிகச்சில பல்பொருள் அங்காடிகளில் சீனி சொரியலாக விற்கப்படுகிறது. பால்மா பக்கட்டுக்ககளை நீண்டநாள் வாடிக்கையாளர்களுக்கு அல்லது குறிப்பிட்ட தொகைக்கு மேல் பொருட்களை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு சில பல்பொருள் அங்காடிகள் ரகசியமாக கொடுக்கின்றன. அந்தப் பெட்டிகளை ஒரு பேப்பர் பைக்குள் வைத்து ரகசியமாக கொடுக்கும் அளவுக்குத்தான் நாட்டில் பால்மா கிடைக்கிறது. அதாவது அத்தியாவசிய பொருட்களுக்கு ஆணையாளராக ஒரு மேஜர் ஜெனரலை நியமித்த பின்னரும் பொருட்களின் விலை இறங்கவில்லை என்று பொருள்.



அண்மையில் இது தொடர்பில் ஊடகங்களுக்கு பதில் கூறிய அஜித் கப்ரால் வணிகர்கள் பொருட்களை பதுக்கிய படியால்தான் செயற்கையாக தட்டுப்பாடு ஏற்பட்டது என்றும் பொருட்களின் விலை அதிகரித்தது என்றும் விளக்கம் கூறுகிறார். இவர் ராஜாங்க அமைச்சராக இருந்து இப்பொழுது மதியவங்கியின் ஆளுநராக பதவியேற்றுள்ளார். ஆனால் வணிகர்கள் ஏன் பொருட்களை பதுக்குகிறார்கள்? ஏனென்றால் பொருட்களின் இறக்குமதிக்கு தட்டுப்பாடு ஏற்படும் பொழுது எதிர்காலத்தில் பொருட்களின் விலைகள் அதிகரிக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் அதிக லாபத்தை பெறும் நோக்கத்தோடுதான். இவ்வாறு பதுக்கப்பட்ட பொருட்களை அரச படைகளும் காவல்துறையும் திடீர் பாய்ச்சல்களின் மூலம் கைப்பற்றுகின்றனர். கைப்பற்றப்பட்ட பொருட்கள் அரசாங்கத்தால் சதோச மூலம் வினியோகிக்கப்படுதாக செய்திகள் வெளிவருகின்றன. ஆனால் கைப்பற்றப்பட்ட பொருட்களை அரசாங்கம் அதை பதுக்கிய வர்தகர்களிடமே சந்தை விலைப்படி கொள்வனவு செய்வதாகவும் அதை பதுக்கிய முதலாளிகள் சட்டத்தின்படி தண்டிக்கப்படுவதில்லை என்றும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் அத்தியாவசிய பொருட்களும் உட்பட பல பொருட்களுக்கு நாட்டில் நெருக்கடி உண்டு. அரசாங்கம் அந்த நெருக்கடிகளை கட்டுப்படுத்துவதற்காக ராணுவத்தனமாக சில நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. ஆனால் அவை எதிர்பார்த்த விளைவுகளை இக்கட்டுரை எழுதப்படும் இந்நாள் வரையிலும் தரவில்லை.

அதுமட்டுமல்ல அரசாங்கம் வேறு ஒரு உத்தியையும் கையாள்கின்றது. சில பொருட்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டதால் வரக்கூடிய விளைவுகளை எதிர்கொள்வதற்காக அல்லது பொது சனங்களின் கோபத்தை திசைதிருப்புவதற்காக அரசாங்கம் உள்ளூர் உற்பத்தி, சுற்றுச்சூழலை பாதுகாப்பது, மண்வளத்தை பாதுகாப்பது போன்ற கவர்ச்சியான பசுமை கோஷங்களை முன்வைக்கின்றது. இயற்கை உரங்களைப் பாவிப்பது; மண்ணின் வளத்தை பாதுகாப்பது; சுற்றுச்சூழலை பாதுகாப்பது; உள்ளூர் உற்பத்தியை பெருக்குவது போன்றவை உன்னதமான அரசியல் பொருளாதார இலட்சியங்கள்தான். ஆனால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபின் அதிலும் குறிப்பாக ஒரு பெருந்தொற்றுச்சூழலில் அவற்றை திடீரென்று அமல்படுத்த முடியாது. அவை போன்ற உன்னதமான இலட்சியங்களை அடைவதற்கு நீண்டகால திட்டங்கள் வேண்டும். நீண்டகால அணுகுமுறைகள் வேண்டும்.

மாறாக இறக்குமதியை திடீரென்று நிறுத்திவிட்டு, இடைக்கிடை சமூக முடக்கங்களை அறிவித்துக் கொண்டு, மக்களை உள்ளூர் உற்பத்திக்கு திரும்புமாறு கேட்பது பொருத்தமானதா? சில தசாப்தங்களுக்கு முன்பு சிறிமாவோ அரசாங்கத்தின் காலத்தில் அவ்வாறு உள்ளூர் உற்பத்திகள் ஊக்குவிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் ஒரு தொகுதி கல் வீடுகள் அக்கால கட்டத்தில்தான் கட்டப்பட்டன. குறிப்பாக செம்பாட்டு நிலங்களில் தோட்டங்களை வைத்திருந்தவர்கள் அதிகம் உழைத்தும் சொத்துக்களை சேர்த்ததும் அக்கால கட்டங்களில்தான். ஆனால் இப்போது இருப்பது ஒரு பெரும்தொற்றுக் காலம். உலகம் முழுவதும் ஒரு அசாதாரண சூழல் நிலவுகிறது. இப்படிப்பட்ட ஓர் அசாதாரணச்சூழலில் இதுபோன்ற பரிசோதனைகளையும் நீண்டகால நோக்கிலான திட்டங்களையும் எப்படி முன்னெடுப்பது?

உதாரணமாக மஞ்சளின் இறக்குமதியை அரசாங்கம் நிறுத்தியது. அதனால் பெருந்தொகை பணத்தை அரசாங்கம் சேமித்தது. ஆனால் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதாக கூறிக்கொண்டு மஞ்சளை உள்ளூரில் உற்பத்தி செய்யுமாறு விவசாயிகளை ஊக்குவித்தது. ஆனால் அதன்மூலம் நாட்டின் மஞ்சள் தேவையில் அரை வாசியைத்தான் ஈடுசெய்ய முடிந்தது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் மஞ்சள் கஞ்சாவை போல மாறிவிட்டது. அது இந்தியாவில் இருந்து கடத்தி வரப்படுகிறது. கடத்திவரப்படும் கஞ்சாவைக் கைப்பற்றும் அரசாங்கம் அதை சதொசவில் சந்தை விலைக்கு விற்கிறது.

இப்போது அரசாங்கம் 623 பொருட்களுக்கு இறக்குமதிக்கான நிபந்தனைகளை விதித்திருக்கிறது. இதனால் மேற்படி பொருட்களும் இனிமேல் கஞ்சாபோல கடத்தப்படலாம் என்று தெரிகிறது. சில நாட்களுக்கு முன் கிடைத்த ஒரு தகவலின்படி இந்தியாவில் இருந்து மஞ்சளுடன் சேர்த்து வீட்டுத் தேவைக்கான மின்னியல் சாதனங்களும் கடத்தி வரப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகள் நிதி முகாமைத்துவம் போன்றவை கள்ளச்சந்தையைத்தான் ஊக்குவிக்கின்றனவா? அதேபோல அரைச்சமூக முடக்கமும் நாட்டில் பதுக்கலையும் கொரோனா சந்தைகளையும்தான் உற்பத்தி செய்திருக்கிறது.

அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகள் மற்றும் நிதி முகாமைத்துவம் மட்டும் அல்ல ராணுவ மயமாக்கல் கொள்கையும் பொருளாதாரத்தைப் பாதிக்கின்றது என்று சில பெரிய வணிகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். உதாரணமாக சுங்கப் பகுதிக்கும் துறைமுக அதிகார சபைக்கும் ஓய்வுபெற்ற படை அதிகாரிகளே பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மிகக்குறிப்பாக துறைமுக அதிகாரசபைக்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட படை அதிகாரி விவகாரங்களை முறையாக நிர்வகிக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது. உதாரணமாக இலங்கையின் கொழும்பு துறைமுகம் இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்தை விடவும் பெரியது. எனவே தூத்துக்குடிக்கு வரும் பெரிய கப்பல்கள் இடைத்தங்கல் நிலையமாக கொழும்பைப் பயன்படுத்துகின்றன. ஆனால் புதிய நிர்வாகத்தின்கீழ் இவ்வாறு வரும் கப்பல்களின் தொகை வீழ்ச்சியடைந்து விட்டதாகவும் நிர்வாகத் தாமதங்கள் காரணமாக கப்பல் கொம்பனிகள் துபாய் நோக்கி செல்வதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. துறைமுகத்தில் கொள்கலன்கள் தேங்கிக் கிடக்கின்றன என்றும் அவற்றை காலிசெய்து புதிய ஏற்றுமதி பொருட்களை அவற்றின் நிரப்புவது தாமதமாகிறது என்றும் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகர்கள் தெரிவிக்கிறார்கள்.

இவ்வாறாக அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள், நிதி முகாமைத்துவம், ராணுவ மயமாக்கல் போன்றவற்றால் மொத்த பொருளாதாரமும் நெருக்கடிக்குள் சிக்கிவிட்டது என்று பொருளியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். நெருக்கடியை சமாளிப்பதற்கு அரசாங்கம் பசில் ராஜபக்சவை நிதி அமைச்சராக நியமித்தது. அவர் நிதியமைச்சராக வந்ததிலிருந்து கிழமைக்கு ஒரு புதிய முடிவு எடுக்கப்படுகிறது. ஆனால் இவை எவற்றாலும் சரிந்து விழும் பொருளாதாரத்தை இன்று வரையிலும் நிமிர்த்த முடியவில்லை. ஏன்?

நாட்டின் பொருளாதாரம் சரிந்து விழுந்தமை என்பது தனிய பெருந் தொற்றுநோய் காரணமாக மட்டுமல்ல. அல்லது அதற்கு முன் நிகழ்ந்த ஈஸ்டர் குண்டு வெடிப்பு மட்டும்தான் அதற்கு காரணம் என்பதல்ல. காரணம் அதைவிட ஆழமானது. தென்னாசியாவின் திறந்த சந்தைப் பொருளாதாரத்துக்கு முதலில் திறக்கப்பட்ட நாடு இலங்கைத்தீவுதான். ஆனால் இலங்கைத் தீவுக்கு பின் அவ்வாறு திறக்கப்பட்ட பல நாடுகள் எங்கேயோ போய்விட்டன. இந்தோனேஷியா வியட்நாம் பங்களாதேஷ் போன்றவை இலங்கையை விடவும் முன்னேறிவிட்டன. ஆனால் சிறிய இலங்கைத்தீவு எல்லாவிதமான வளங்களையும் கொண்டிருந்த போதிலும் முன்னேற முடியவில்லை. காரணம் மிகவும் எளிமையானது. பல்லினத்தன்மை மிக்க ஒரு தீவை கட்டியெழுப்ப இலங்கைத்தீவில் தொடர்ச்சியாக வந்த ஆட்சியாளர்கள் தவறி விட்டார்கள். அதாவது இனப்பிரச்சினைதான் இலங்கைத்தீவின் பொருளாதாரம் சரிந்துவிழக் காரணம்.

எல்லாவிதமான வளங்களையும் கொண்டிருந்த அழகிய சிறியதீவை பல்லினத்தன்மை மிக்க ஒரு நாடாகக் கட்டியெழுப்ப சிங்களத் தலைவர்களால் முடியவில்லை. அதன் விளைவாக பொருளாதாரம் சீரழியத் தொடங்கியது. யுத்தம் இலங்கைத்தீவின் முதலீட்டு கவர்ச்சியை இல்லாமல் செய்தது. அப்படிப் பார்த்தால் 2009ஆம் ஆண்டுக்குப் பின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தியிருக்க வேண்டும். ஆனாலும் முடியவில்லை. ஏன்?

ஏனென்றால் யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்ற அரசாங்கத்தால் முடியவில்லை. அது மட்டுமல்ல ராஜபக்சக்கள் யுத்த வெற்றியை குடும்ப வெற்றியாக மாற்றி அந்த அடித்தளத்தின் மீது ஒரு கட்சியையும் கட்டி எழுப்பி விட்டார்கள். இப்பொழுது அவர்கள் யுத்த வெற்றிக்கு தலைமை தாங்குகிறார்கள். யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்றத் தவறியதால்தான் அதாவது இனப்பிரச்சினைக்கு தீர்வை கண்டுபிடிக்க தவறியதால்தான் கடந்த 12 ஆண்டுகளாக அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடியவில்லை. அரசியல் ஸ்திரத்தன்மை இல்லை என்றால் நாட்டின் முதலீட்டு கவர்ச்சி அதிகரிக்காது. இதுதான் அடிப்படைப் பிரச்சினை.

பசிலை மட்டுமல்ல வேறு யாரைக் கொண்டு வந்தாலும் பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்கு ஒரே ஒரு முன்நிபந்தனைதான் உண்டு. யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்றுவது. பல்லினத் தன்மை மிக்க ஓரழகிய சிறிய தீவை கட்டியெழுப்புவது. ஆனால் யுத்த வெற்றிவாதத்திற்கு தலைமை தாங்கிக் கொண்டு அந்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்ற முடியுமா?

# இனிதான் கடினமான பொறுப்பு; ஐந்து மலைகளைத் தாண்டியாக வேண்டும்: அதிகாரிகள் மத்தியில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

இனிமேல்தான் உங்களுக்குக் கடினமான பொறுப்பு இருக்கிறது என, அதிகாரிகள் மத்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினால் தமிழக சட்டப்பேரவையில் விதி 110ன்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், அமைச்சர்களால் அவர்களது துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளின்போது வெளியிடப்பட்ட அறிவிப்புகள் மற்றும் அரசு செயல்படுத்தி வரும் நலத் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று (செப். 16) தலைமைச் செயலகத்தில், நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் வெ. இறையன்பு மற்றும் அனைத்துத் துறைச் செயலாளர்கள் கலந்து கொண்டனர். இந்த ஆய்வுக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் தொடக்க உரை நிகழ்த்தினார்.பின்னர், ஆய்வினை மேற்கொண்ட முதல்வர் ஆற்றிய உரை:''கடந்த மே 7ஆம் தேதி தமிழகத்தின் முதல்வராக நான் பொறுப்பேற்றுக் கொண்டது முதல், இன்றுவரை அரசினுடைய அனைத்து முயற்சிகளுக்கும் ஊக்கமாகவும், உறுதுணையாகவும் இருந்து கொண்டிருக்கக்கூடிய அரசுத் துறைச் செயலாளர்கள் அனைவருக்கும் எனது நன்றி.

அதுவும் இந்த கரோனா காலத்திலும் தொய்வு இல்லாமல் மக்களுக்குப் பணியாற்றுவதன் மூலமாக இந்த அரசுக்குச் சிறப்பான பெயரைத் தேடித் தந்திருக்கிறீர்கள். அதற்கும் என்னுடைய நன்றி. இந்த ஒத்துழைப்பும், செயல்பாடும் எப்போதும் நீடிக்க வேண்டும்.ஏனென்றால், இனிமேல்தான் உங்களுக்குக் கடினமான பொறுப்பு இருக்கிறது. முதல்வர் என்ற முறையில், அந்தந்தத் துறையின் அமைச்சர்கள் என்ற முறையில் அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறோம். அவற்றையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்றால், அதற்கு நீங்கள்தான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், ஐந்து மலைகளை நாம் தாண்டியாக வேண்டும். கடந்த சட்டப்பேரவைத் தேர்தலின்போது திமுகவின் சார்பில், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன செய்யப் போகிறோம், என்னென்ன செய்வோம் என்று உறுதிமொழிகள் கொடுத்து, தேர்தல் அறிக்கை வெளியிட்டிருக்கிறோம்.

அதில் 500க்கும் மேற்பட்ட வாக்குறுதிகள் அடங்கியிருக்கின்றன. அப்போது மாவட்ட ரீதியாகவும் ஒரு தேர்தல் அறிக்கை வெளியிட்டிருக்கிறோம். அதிலும், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் என்னென்ன வாக்குறுதிகள் என்று பிரித்து வெளியிட்டிருக்கிறோம்.குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஆளுநர் உரை தரப்பட்டிருக்கிறது; நிதிநிலை அறிக்கை வெளியிட்டிருக்கிறோம்; வேளாண் நிதிநிலை அறிக்கை என்று புதிதாக தாக்கல் செய்து, அதையும் வெளியிட்டிருக்கிறோம்; சட்டப்பேரவையில் துறைவாரியாக மானியக் கோரிக்கை விவாதத்தின்போது புதிய அறிவிப்புகளையும் வெளியிட்டிருக்கிறோம்; சட்டப்பேரவையில் விதி 110ன் கீழ் சில அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறோம்.இவை அனைத்தையும் நிறைவேற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் நம்மிடம்தான் இருக்கிறது. அதைத்தான் ஐந்து மலைகளைத் தாண்டியாக வேண்டும் என்று நான் சொன்னேன். இந்த அறிவிப்புகள் அனைத்தையும் படிப்படியாக நாம் நிறைவேற்றியாக வேண்டும். அதற்கு உங்களுடைய முழு ஒத்துழைப்பு அவசியம் தேவை.இவை அனைத்தும் மக்கள் நன்மைக்காக அளிக்கப்பட்டிருக்கக்கூடிய உறுதிமொழிகள் ஆகும். இந்த வாக்குறுதிகள், அறிவிப்புகள் அனைத்தும் அரசாணைகளாக வரவேண்டுமென்று சொன்னால், அதற்குத் துறைகளின் செயலாளர்கள்தான் பொறுப்பேற்றுச் செயலாற்ற வேண்டும்.ஒவ்வொரு அறிவிப்பினை நிறைவேற்றுவதிலும் பல கட்டங்கள், முறைகள் இருக்கின்றன.



நான் இந்த அறிவிப்புகளைச் செயல்படுத்துவது குறித்து அமைச்சர்களைக் கண்காணிப்பேன் என்று சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் முடிந்தவுடன் சொல்ல ஆரம்பித்துவிட்டேன். இரண்டு நாட்களாக, நான் செல்கிற நிகழ்ச்சிகளில், கட்சி நிகழ்ச்சியாக இருந்தாலும், எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும், நானே நேரடியாகக் கண்காணிக்கப் போகிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.எனவே, அமைச்சர்கள் மட்டுமல்ல; ஒவ்வொரு துறைச் செயலாளரும் இந்த அறிவிப்புகளைக் குறித்த காலத்துக்குள் முடிக்கக்கூடிய வகையில் என்னுடைய கண்காணிப்பு இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கோவிட் பெருந்தொற்றுக் காரணத்தினால் சில பொருளாதார நெருக்கடிகள் உள்ளதை நீங்களும் அறிவீர்கள், நாங்களும் அறிந்திருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில், ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கக்கூடிய நிதியினை அந்தந்தத் திட்டப் பணிகளுக்கு முழுமையாகவும், முறையாகவும் செலவிடுவதன் மூலம் அந்தந்த அளவிற்கு நம் பொருளாதாரத்துக்கு உங்கள் திறமையான செயல்பாடுகள் தக்கவகையில் ஊக்கமளிப்பதாக அமையும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, அனைத்துத் துறைகளின் திட்டங்கள் செயல்படுத்தப்படுவது குறித்த தகவல்களை நான் தெரிந்துகொள்ளும் விதமாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மூலம் 'ஆன்லைன் தகவல் பலகை' (Dash Board) ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலம் தகவல்களை நான் தினமும் பார்க்கப் போகிறேன். தகவல்களை அளிக்கும் வகையில்தான் 'ஆன்லைன் தகவல் பலகை' ஏற்படுத்தப்படவிருக்கிறது. என்னுடைய அறையிலேயே பெரிய திரை (Screen) ஒன்றினை வைத்து, தகவல்களை அறிந்துகொள்ளும் வகையில் ஏற்பாடு நடந்து வருகிறது.எனவே, நாம் அளித்திருக்கக்கூடிய வாக்குறுதிகள், வெளியிட்டிருக்கக்கூடிய அனைத்து அறிவிப்புகள், அரசினுடைய முக்கியத் திட்டங்கள், எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய உறுதிமொழிகள் தொடர்பான பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வு எனத் தமிழக மக்களுக்கு ஒரு நல்லாட்சியை வழங்க, நாம் நிறைவேற்றும் ஒவ்வொரு திட்டமும், தகவல்களும் இந்தத் 'தகவல் பலகையில்' இடம்பெறும். அந்தத் தகவல்கள் தினந்தோறும் அப்டேட் செய்யப்படும். தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் ஆலோசகர் இதன் ஒருங்கிணைப்பாளராக இருந்து செயல்படப் போகிறார்.

அந்தத் தகவல் பலகை எப்படி இருக்க வேண்டுமென்றால், ஒவ்வொரு அறிவிப்பும் செயல்படும் விதம் குறித்து, Physical Target மற்றும் Financial Target என்று இடம்பெற்றிருக்க வேண்டும்.வாரம் ஒருமுறை இந்தத் தகவல் பலகையை வைத்து நான் ஆய்வு செய்யப் போகிறேன். அறிவிப்பு தொடர்பாக அரசாணை போட்டுவிட்டோம் என்பதால் அறிவிப்பு நடைமுறைக்கு வந்துவிட்டதாக அர்த்தம் இல்லை. அந்த அறிவிப்பின் பலன் மக்களைச் சென்றடைய வேண்டும். அப்போதுதான் நாம் அறிவிப்பைச் செயல்படுத்திவிட்டோம் என்று அர்த்தமாகும் என்பதையும் நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை.ஒவ்வொரு அறிவிப்பையும் செயல்படுத்துவதற்கு கால நிர்ணயம் செய்து கொள்ளுங்கள். அந்தக் காலத்துக்குள் நிறைவேற்றுங்கள். அமைச்சர்களும் அதிகாரிகளும் இணைந்ததுதான் இந்த அரசு. எனவே, இணைந்து செயல்படுங்கள். இணைந்து செயல்படுவதன் மூலமாக வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றித் தாருங்கள்.அனைத்துத் துறையும் ஒருசேர வளர வேண்டும். ஒரு துறை முன்னேறியது, சுறுசுறுப்பாகச் செயல்பட்டது என்று இல்லாமல் அனைத்துத் துறைகளும் ஒருசேர முன்னேற்றம் கண்டது என்ற சூழலை நாம் உருவாக்க வேண்டும்.அனைத்துத் துறை வளர்ச்சி அனைத்து மாவட்டங்களின் வளர்ச்சி அனைத்துச் சமூக வளர்ச்சி ஆகியவை உங்களுடைய எண்ண ஓட்டமாக இருக்க வேண்டும். இந்தச் சிந்தனை அனைத்துத் துறைகளின் செயலாளர்களுக்கும் ஏற்படுமானால் தமிழகத்தின் எதிர்காலம் என்பது, இந்தியாவில் தலைசிறந்ததாக மாறும் என்பதில் சந்தேகமில்லை. அதற்கு நீங்களெல்லாம் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் நோக்கம், நான் முன்பே குறிப்பிட்டது போல அறிவிக்கப்பட்ட திட்டங்கள் சிறப்பாகவும், விரைவாகவும் மக்களுக்குக் கொண்டு சேர்த்திட வேண்டுமென்று உங்களுக்குத் தெரிவிப்பது என்னுடைய கடமையாகும். உங்கள் துறையினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் செயலாக்கத்தினை, அவை குறித்து நான் தெரிந்துகொள்ள, வரும் அக்டோபர் மாதம் நான் மீண்டும் ஆய்வு செய்யவிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.அதற்குள்ளாக தேவையான அரசாணைகளை வெளியிட்டு, பணிகளைத் தொடங்குவதற்கான நல்ல முயற்சிகளை நீங்கள் ஒவ்வொருவரும் எடுக்க வேண்டும். அதற்கு இந்த அரசு உங்களுக்கு எப்போதும் துணை நிற்கும்''. இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# 3 முன்னாள் அமைச்சர்கள் ஊழல் செய்யவே மதுரை ஸ்மார்ட் சிட்டி திட்டம்: அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் குற்றச்சாட்டு



மூன்று முன்னாள் அமைச்சர்கள் சம்பாதிப்பதற்காகவும், அவசர அவசரமாக ஊழல் செய்வதற்காகவும் மதுரை ஸ்மார்ட் சிட்டி திட்டம் செயல்படுத்தப் பட்டதாக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார். மதுரை மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி ஆய்வுக்கூட்டம் இன்று கூடுகிறது. கூட்டத்தில் இந்தத் திட்டத்தைப் பற்றி ஆலோசிப்பதற்காக இன்று நிதியமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், மாவட்ட ஆட்சியர் அனீஸ் சேகர், மாநகராட்சி ஆணையர் கே.பி.கார்த்திகேயன் மற்றும் அதிகாரிகளுடன் சென்று ஆய்வு செய்தார்.

அதன்பின் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:''சட்டப்படி நடக்க வேண்டிய ஸ்மார்ட் சிட்டி திட்டம் இன்று நடக்கிறது. பல ஆண்டுகளாக இந்தக் கூட்டம் நடக்காமல் இருந்தது. ஸ்மார்ட் சிட்டி திட்டங்கள் அனைத்தும் தவறாக ஆரம்பிக்கப்பட்டன. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த தனித் தலைவர் இருக்க வேண்டும். அதேமாதிரி மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டும். கவுன்சிலர்கள் ஏற்கெனவே இல்லை. எம்எல்ஏக்களை அழைத்து அவர்கள் ஆலோசித்து இருக்க வேண்டும். ஆனால், அதிமுக ஆட்சியில் அவர்கள் கட்சி எம்எல்ஏக்களைக் கூட, இந்தத் திட்டத்திற்கான ஆலோசனைகளைக் கேட்கவில்லை.

மூன்று முன்னாள் அமைச்சர்களின் சம்பாதிப்பதற்காகவும், அவசர அவசரமாக ஊழல் செய்வதற்காகவும் இந்தத் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது.எந்தத் துறையில், எப்படிக் கூடுதலாக ஊழல் செய்யலாம் என்ற அடிப்படையிலேயே ஸ்மார்ட் சிட்டி திட்டம் தொடங்கியுள்ளது. அதற்குச் சிறந்த உதாரணம் மதுரை மீனாட்சியம்மன் கோயில் பேவர் பிளக். ஆற்று மணலைத் திருடி, எங்குமே கிடைக்காததுபோல் கற்களைக் கொண்டுவந்து சாலை போட்டுள்ளனர். அதனால், மீனாட்சியம்மன் கோயிலைச் சுற்றி இருக்கிற சாலைகளையும் வீணாக்கி, ஊழலுக்காக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளனர். தேவைக்கும், ஜனநாயகத்திற்கும் முரணாக இந்தத் திட்டம் மதுரையில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனாலும், ஆரம்பித்த இந்தத் திட்டத்தை வேகப்படுத்தி எதையெல்லாம் சரிசெய்ய முடியுமோ அதைச் சரியாக்குவதற்கு கடைசிக்கட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

இத்திட்டத்தில் அனைத்துக் கட்டிடங்களும், சாலைகளும் தரமற்று உள்ளன. ஸ்மார்ட் சிட்டி பணிகள் தொடங்கியுள்ளதில் ஏற்பட்ட முறைகேடுகள் குறித்து நிதித் தணிக்கை செய்ய வேண்டும். இதில் அதிகாரிகள் மீதான முறைகேடு குறித்து ஆதாரம் இருந்தால் அவர்கள் மீதும் நடவடிக்கை பாயும்.ஸ்மார்ட் சிட்டி திட்டத்தால் மதுரை மீனாட்சியம்மன் கோயிலைச் சுற்றியுள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்க அவர்கள் திட்டமிடவில்லை. கோயிலைச் சுற்றியுள்ள போக்குவரத்தை நெரிசலையும் கட்டுப்படுத்த வேண்டும்''. இவ்வாறு அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.

# கட்அவுட்டிற்கு ஆட்டை பலி கொடுத்து ரத்தாபிஷேகம் — பால் முகவர்கள் சங்கம் ரஜினி ரசிகர்கள் மீது நடவடிக்கை

## தனது ரசிகர்களை கண்டித்து நல்வழிப்படுத்த தவறிய ரஜினிகாந்த் இவ்விகாரத்திலாவது உடனடியாக விழித்துக் கொள்ள வேண்டும்



நடிகர் ரஜினிகாந்த நடித்துள்ள அண்ணாத்த திரைப்படத்திற்கு பொதுவெளியில் வைக்கப்பட்டுள்ள கட்அவுட்டிற்கு பொதுமக்கள் மற்றும் சிறுவர்கள் முன்னிலையில் ஆட்டை பலி கொடுத்து அவரது ரசிகர்கள் ரத்தாபிஷேகம் செய்த காட்டுமிராண்டித்தனம் அரங்கேறிய காணொளி சமூக வலைதளங்களில் வெளியாகி அதிர்ச்சியளிக்கிறது. கட்அவுட்களுக்கு பாலாபிஷேகம் செய்தது போய் தற்போது ஆட்டை பலி கொடுத்து ரத்தாபிஷேகம் செய்கிற நடிகர் ரஜினிகாந்த ரசிகர்களின் காட்டுமிராண்டித்தனத்தை தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

நடிகர் ரஜினிகாந்தின் அண்ணாத்த கட்அவுட்டிற்கு ஆட்டை பலி கொடுத்து ரத்தாபிஷேகம் செய்த சம்பந்தப்பட்ட ரசிகர்கள் மீது தமிழக காவல்துறை உடனடியாக வழக்குப்பதிந்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச் சங்கம் வலியுறுத்துகிறது.

ஏற்கனவே கட்அவுட்களுக்கு பாலாபிஷேகம் செய்கிற கலாச்சாரத்தை தடுக்க வேண்டும் என தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச் சங்கம் சார்பில் ரஜினிகாந்த் அவர்களுக்கு நேரிலும், பதிவு தபால் மூலமும் பலமுறை கோரிக்கை முன் வைத்தும் தனது ரசிகர்களை கண்டித்து நல்வழிப்படுத்த தவறிய அவர் இவ்விகாரத்திலாவது உடனடியாக விழித்துக் கொள்ள வேண்டும். தவறான கலாச்சாரம் தமிழகத்தில் அரங்கேற அவர் காரணமாக இருக்க கூடாது என திரு. ரஜினிகாந்தை தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**சு.ஆ. பொன்னுசாமி**
**நிறுவனத் தலைவர்**
**தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச் சங்கம்.**

# கொத்தடிமைகளாக ஓமன் நாட்டில் சிக்கிக்கொண்ட தமிழர்களை நாம் தமிழர் கட்சியினர் மீட்டனர்!



கும்பகோணம் பகுதியைச் சேர்ந்த சிவா, ரங்கா, மயிலாடுதுறையைச் சேர்ந்த ராஜசேகர், சீர்காழி சுரேஷ், தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் திருப்பதி ஆகியோர் ஒரு ஏஜென்ட் மூலம் ஏறக்குறைய ஒரு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட செலவு செய்து கடந்த டிசம்பர் மாதம் ஓமன் நாட்டிற்கு வேலைக்காக சென்றுள்ளனர்.

அங்கு போய் பணியில் சேர்ந்த பிறகு தான் கொத்தடிமைகளாக தாங்கள் ஆக்கப்பட்டுள்ளோம் என்பதும், இரவு பகலாக தாங்கள் பார்க்கும் பணிக்கு ஊதியம் கிடையாது என்பதும் அவர்களுக்குத் தெரியவருகிறது.

இதுகுறித்து கும்பகோணம் நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர்களிடம் தங்கள் உறவினர் மூலம் கும்பகோணம் நாம் தமிழர் கட்சியின் பொறுப்பாளர்களில் ஒருவரான ராஜசேகரிடம் மேற்கண்டவர்கள் தெரிவிக்க,

இதுபற்றிய தகவல் கும்பகோணம் நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர்கள் மூலமாக நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமானுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் நாம் தமிழர் கட்சியின் ஓமன் நாட்டுப் பிரிவான செந்தமிழர் பாசறைக்கு தகவல் தெரிவிக்க, செந்தமிழர் பாசறையின் பொறுப்பாளர்கள் கொத்தடிமைகளாக ஆக்கப்பட்டுள்ள தமிழர்களை தங்களது சொந்த பொறுப்பில் மீட்டு தாயகத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

கடந்த 2 நாட்களுக்கு முன்பாக தாயகம் திரும்பிய பாதிக்கப்பட்ட 5 தமிழர்களும் பத்திரிகையாளர்கள் முன்னிலையில் நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர்களுக்கு நன்றி தெரிவித்தனர். தாங்கள் இழந்த தொகையை மீட்டுத்தரக் கோரியுள்ளனர். இந்த நிகழ்வில் கும்பகோணம் நாம் தமிழர் கட்சியின் தொகுதி செயலாளர் வழக்கறிஞர் மோ ஆனந்த், கும்பகோணம் மாநகரச் செயலாளர் கார்த்திகேயன், ராஜசேகர், தம்பி அரவிந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

பாதிக்கப்பட்டவர்களை ஏமாற்றியவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவும், அவர்கள் கட்டிய பணத்தை மீட்கவும் நாம் தமிழர் கட்சி சார்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது.

தமிழர்கள் கொத்தடிமையாக பட்ட செய்தி தெரிந்தவுடன் விரைந்து செயல்பட்ட கும்பகோணம் நாம் தமிழர் கட்சி பொறுப்பாளர்களுக்கும், வழக்கறிஞர் மணி செந்திலுக்கும், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கும், நாம் தமிழர் கட்சியின் ஓமன் நாட்டுப் பிரிவு செந்தமிழர் பாசறை பொறுப்பாளர்களுக்கும் தாயகம் திரும்பிய உறவுகள் தங்களது நன்றியைத் தெரிவித்தார்கள்.

**மக்கள் தொடர்பு: ஜான்**


MONEY PROBLEMS?™
ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்

உங்களைக் கேளுங்கள்?



- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta™ credit

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும்.
உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

Scarborough / Downtown Toronto: 416-489-2000
Mississauga / Brampton: 416-650-5400





Scarborough
201-4433 Sheppard Ave. E
Scarborough, ON, M1S 1V3

Toronto/Downtown
800-120 Eglinton Ave. E
Toronto, ON, M4P 1E2

North York
306-1280 Finch Ave. W
North York, ON, M3J 3K6

Mississauga
110-93 Dundas Street E.
Mississauga, ON, L5A 1W7

Brampton
201-7990 Kennedy Rd. South,
Brampton, Ontario, L6W 0B3

Mark Shamly
Tamil Consultant

Proudly Served over 15,000 clients since 2004
Visit : GtaCredit.Com

Ajay Oberoi
Experienced Credit Counsellor



# Situation in Sri Lanka is not Encouraging says UN Human Rights Commissioner

- Siva Parameswaran Senior International Journalist London

Sri Lanka has come under scathing criticism by the UN Human Rights High commissioner for not fulfilling it's commitment to the council and the international community.

Michelle Bachalet-UN Human Rights High commissioner in her oral submissions during the 48th session of the council has called upon the Government of Sri Lanka (GOSL) to prove it's commitment to work with the UN to ensure accountability.

In her submission Michelle Bachalet has expressed her strong dissatisfaction over continuing militarisation in the country and the culture of impuntiy.

"The current social, economic and governance challenges faced by Sri Lanka indicate the corrosive impact that militarisation and the lack of accountability continue to have on fundamental rights, civic space, democratic institutions, social cohesion and sustainable development".

She also said that her office will be ''closely monitoring'' the new state of emergency declared in the country with the aim of ensuring food security and price controls amid deepening recession.

"The emergency regulations are very broad and may further expand the role of the military in civilian functions".

While noting with interest the President's recent meeting with some civil society leaders, and I encourage broader dialogue and steps to open Sri Lanka's civic space-she said.

"I note with interest Regrettably, surveillance, intimidation and judicial harassment of human rights defenders, journalists and families of the disappeared has not only continued, but has broadened to a wider spectrum of students, academics, medical professionals and religious leaders critical of government policies. Several peaceful protests and commemorations have been met with excessive use of force and the arrest or detention of demonstrators in quarantine centres".

She has also expressed apprehension about new regulations on civil society groups and says it is widely feared that they will further tighten restrictions on fundamental freedoms.

Culture of Impunity

The UNHRC commissioner has condemned the culture of impunity prevailing in the country. She has pointed out the decision of the Attorney General not to proceed with charges against former Navy commander Wasantha Karannagoda in the case of the enforced disappearances of 11 men in 2008 and 2009.

"I am concerned by developments in judicial proceedings in a number of emblematic human rights cases".

The President's recent pardon of a former member of parliament, Duminda Silva, has also been criticised by the UNHRC chief. She says this also "risks eroding confidence in the rule of law and judicial process".

Michelle Bachalet has expressed her deep concerns about deaths in police custody and reports of torture and ill-treatment by law enforcement officials.

Problematic PTA

The arbitrary decision of the government to detain individuals under the draconian Prevention of Terrorism Act (PTA) has come in for sharp criticism by the High commissioner. Noting the government's intention to revisit the PTA-she has called for the act to be repealed at the earliest.

"I urge an immediate moratorium on the use of the Act, and that a clear timeline be set for its comprehensive review or repeal".

In her oral submission on 13th September, Ms Bachelet has stressed the importance of transparent, victim-centred and gender sensitive approaches, and that reparations programs must be accompanied by broader truth and justice measures.

She has also said the Office of Missing Persons has failed to inspire confidence among the victims.

While the GOSL has put forward its proposal to implement the recommendations of the UNHRC-critics say those proposals lacks will and depth and point out that GOSL has constantly negated the assurances given to the UNHRC and the international community.

While the 51st session of the UNHRC is considered crucial for the future of Sri Lanka the remarks of the High commissioner are seen as a stark warning. Her message to the GOSL is the UNHRC is closely monitoring the developments in the island nation.



"I encourage Council members to continue paying close attention to developments in Sri Lanka, and to seek credible progress in advancing reconciliation, accountability and human rights".



# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடலங்களை கொண்டு செல்வதற்கான நிதி உதவியாக ஒரு இலட்சம் ரூபாய் அனுப்பிவைத்த கனடா – 'ரொறன்ரோ மனித நேயக்குரல் அமைப்பு'




மாவட்ட பொது வைத்தியசாலை - கிளிநொச்சி
District General Hospital - Kilinochchi
15 SEP 2021
Director
District General Hospital
Kilinochchi


பாராளுமன்றம்
PARLIAMENT
SIVAGNANAM SHRITHARAN M.P

கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மரணமடைந்தவர்களின் உடலங்களை மின்தகன நிலையங்களுக்கு கொண்டுசெல்வதற்குரிய நிதியுதவியாக ஒரு இலட்சம் ரூபாய்கள் கனடாவில் இயங்கிவரும் மனித நேய அமைப்பான 'ரொறன்ரோ மனிதாபிமானத்தின் குரல்' அமைப்பின் ஊடாக நேற்றைய தினம் (2021.09.14) கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் வழங்கிவைக்கப்பட்டது. இதற்கான தொகை கனடாவில் வாழும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் **(IMTC)** தலைவர் திரு.துரைராஜா, மற்றும் கனடா, வீடு விற்பனை முகவரும் தொழில் அதிபருமான திரு பாஸ்கரன் சின்னத்துரை ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் அனுப்பி வைக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மின்தகன மயானம் இல்லாத சூழலில், கொரோனாப் பெருந்தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களை வவுனியா (பூந்தோட்டம்) , கெக்கிராவ, அனுராதபுரம், பொலனறுவை உள்ளிட்ட பகுதிகளுக்கு கொண்டுசெல்வதற்கு இறந்தவர்களின் உறவினர்களிடமிருந்தே பணம் அறவிடப்பட்டு வருகின்றது. ஏற்கனவே இந் நோய்த்தொற்றுக் காலத்தில் தொழில் வாய்ப்புக்களையும், வருமான மூலங்களையும் இழந்து பொருளாதார ரீதியாக கடும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள கிளிநொச்சி மாவட்ட மக்களின் நலன் கருதி, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ.சிவஞானம் சிறீதரன் அவர்களால் ரொறன்ரோ மனிதாபிமானத்தின் குரல் **(Toronto Voice of Humanity)** அமைப்பிற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, அவ் அமைப்பின் இயக்குனர்களான, உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் (ஐஆவுஊ) தலைவர் திரு.துரைராஜா, மற்றும் கனடா, வீடு விற்பனை முகவரும் தொழில் அதிபருமான திரு பாஸ்கரன் சின்னத்துரை ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் கிளிநொச்சி வைத்தியசாலையின் அமரர் ஊர்திக்கான எரிபொருட்செலவுக்கென ஒருலட்சம் ரூபா நிதியுதவி கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் கௌரவ.அருணாசலம் வேழமாலிகிதனால், கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வராஜா சுகந்தனிடம் கையளிக்கப்பட்டது.

அதேவேளை இவ்வருடம் டிசெம்பர் மாதம் வரை, கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் மரணமடைபவர்களின் உடலங்களை இலவசமாக மின்தகன நிலையங்களுக்குக் கொண்டுசெல்வதற்குரிய முழுமையான போக்குவரத்துச் செலவினை தான் ஏற்பாடு செய்துதருவதாக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ.சிவஞானம் சிறீதரன் அவர்கள் வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் உறுதியளித்துள்ளார்.

மேற்படி நிகழ்வின்போது பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ.சிவஞானம் சிறீதரன், கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர் கௌரவ.சண்முகராஜா ஜீவராஜா, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி நகர வட்டார அமைப்பாளர் திரு. கணபதிப்பிள்ளை ஆனந்தவடிவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இங்கு காணப்படும் படங்கள் அங்கிருந்து அனுப்பிவைக்கப்பட்டவையாகும்.



# இலங்கையின் உள்ளக சிக்கல்களுக்கு தீர்வு காண வெளியக பொறிமுறையொன்றை உருவாக்கும் அதிகாரம் ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு இல்லை!

மங்கை சூதகமானால் கங்கையில் குளிக்கலாம், கங்கை சூதகமானால் என்ன செய்வது? சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் லோஹன் இரத்வத்தை கடந்த 12 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) அநுராதபுரம் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதி ஒருவரை முழங்காலில் மண்டியிடச் செய்து அவரது தலையில் கைத்துப்பாக்கியை வைத்து மிரட்டியிருக்கிறார். அப்போது அவர் நிறைவெறியில் இருந்தார் என்று கூறப்படுகிறது. இதில் வியப்பென்ன என்றால் இராசாங்க அமைச்சர் நிறவெறியில் இருந்தாலும் அவர் சிறுபான்மைத் தமிழ்க் கைதிகளை இனம்கண்டு அவர்கள் தலைகளுக்கு குறிவைத்திருக்கிறார்.

கரவெட்டியைச் சேர்ந்த மதியரசன் சுலக்‌ஷன் (33) என்ற கைதியே அமைச்சர் லோஹன் அவர்களால் குறிவைக்கப்பட்டவர் எனத் தெரிகிறது. இவர் கடந்த 2009 ஆம் ஆண்டில் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட நிலையில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து அனுராதபுரம் சிறையில் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் தங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாகவும் தங்களை யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்கு மாற்றும் செய்யவேண்டும்.

அதற்கு முதல்நாள் நிறவெறியில் இதே இராசாங்க அமைச்சர் தனது நண்பர்கள் புடைசூழ வெலிக்கடை சிறைக்குத் துப்பாக்கியுடன் சென்று அடாவடித்தனத்தில் ஈடுபட்டார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறைச்சாலையில் இருந்த தூக்குமேடையைப் பார்க்க வேண்டும் என அடம் பிடித்துள்ளார். அவரோடு ஒரு அழகுராணியும் இருந்துள்ளார்.

அனுராதபுரம் சிறைச்சாலையில் தன்னால் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டே, லோஹன் இரத்வத்த தனது பதவியை இராசினாமா செய்ததாக சனாதிபதி ஊடகப் பிரிவு நேற்றைய தினம் அறிவித்திருந்தது. ஆனால் இவர் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் அமைச்சின் இராசாங்க அமைச்சர் பதவியை இன்னும் துறக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சிறைச்சாலைக்குள் அத்துமீறி நுழைந்து அடாவடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ், இராசாங்க அமைச்சர் லோஹன் இரத்வத்தயை கைது செய்யுமாறு காவல்துறையில் சிறைக் கைதிகளின் பாதுகாப்புக்கான அமைப்பு முறைப்பாடு செய்துள்ளது.

லோஹன் இரத்வத்தையின் குடும்பம் கொலை, சண்டைசச்சரவில் மாட்டுப்படுவது இது முதல்தடவை அல்ல. 2001 ஆம் ஆண்டு உடதலவின்னவில் 10 முஸ்லிம் இளைஞர்களைக் கொன்றதாக லோஹான் இரத்வத்யும் அப்போது பாதுகாப்பு அமைச்சின் துணை அமைச்சராக இருந்த அவரது தந்தை அனுருத்துவ இரத்வத்தை மீது குற்றம் சாட்டப்பட்டது. 2006 ஆம் ஆண்டு கொழும்பு உயர் நீதிமன்றத்தால் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். ஆனால் இரத்வத்தை குடும்பத்தின் ஐந்து பாதுகாவலர்கள் குற்றவாளிகள் எனக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டனர்.

மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் கொலையோடு மாகன் இரத்வத்தை சம்பந்தப்பட்டிருந்தார் என்ற ஐயப்பாடு இருந்தது. முன்னாள் சந்திரிகா குமாரதுங்க 22 டிசெம்பர், 1999 அன்று வி.புலிகள் விரைவில் அழிகப்படுவர், அவர்களது ஆதரவாளர்களின் நாட்கள் எண்ணப்படுகின்றன எனப் பேசியிருந்தார். அதற்குச் சில நாட்களுக்கு முன்னர் குமார் பொன்னம்பலம் சந்திரிகா குமாரதுங்காவின் பேச்சுத் தொடர்பாக நீண்ட கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பியிருந்தார். அதையிட்டு மொறட்டுவ சாமன் மற்றும் ஆர்பிசி இரணசிங்க இருவரிடத்தும் "குமார் பொன்னம்பலம் போன்றவர்களை எப்படிச் சிங்களவர் உயிரோடு விட்டிருக்கிறார்கள் **(e ayi yakko sinhala minissu marannay, puluwannam ara Kumar Ponnambalam jathi wadi wagay thadi demelek marapanko.)** என்ற சாரப்பட சொல்லியிருக்கிறார். இதில் ஆர்பிசி இரணசிங்க குமார் பொன்னம்பலம் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டார். குமார் பொன்னம்பலம் 05, சனவரி 2000 அன்று கொழும்பில் கொல்லப்பட்டார்.

லோஹன் இரத்வத்தையை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்று மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள், அரசியல்வாதிகள், ஊடகங்கள் குரல் கொடுத்து வருகிறார்கள். லோஹன் இரத்வத்தையினதும் அவரது அடியாட்களது அடாவடித்தனம் பல் கேள்விகளை எழுப்பியுள்ளது.

1) கொழும்பில் இருந்து அனுராதபுரத்துக்கு உலங்குவானூர்தியில் சென்றிருக்கிறார். இது அரசுக்குச் சொந்தமான உலங்குவானூர்தியா? அல்லது தனியார் உலங்குவானூர்தியா? அப்படியென்றால் அது பறப்பதற்கு உரிய அனுமதி பெறப்பட்டதா?

2) லோஹன் இரத்வத்தை பயன்படுத்திய கைத்துப்பாக்கி யாருக்குச் சொந்தம்? அதை வைத்திருப்பதற்கு உரிய அனுமதி இருந்ததா?

3) வெலிகட மற்றும் அனுராதபுர சிறைச்சாலை அதிகா-ரிகள் கைத்துப்பாக்கியோடு உள்நுழைந்த லோஹன் இரத்வத்தை ஏன் கைது செய்யவில்லை?

4) உலங்குவானூர்தியை செலுத்திய ஆள் யார்? அவரது பெயர் என்ன?

இதில் வேடிக்கை என்ன வென்றால் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 48 ஆவது அமர்வு நடந்து கொண்டிருக்கும் காலத்தில் இந்த சம்பவம் அரங்கேறியுள்ளது ஆகும். இந்த அமர்வில் ஐ.நா மனித உரிமை ஆணையர் மிச்சேல் பெச்சலெட் வாய்மூல அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளார். அடிப்படை சுதந்திரங்கள் மீதான கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்படலாம் என்ற அச்சம் காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

மேலும் 46/1 தீர்மானம் சென்ற 23 மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட பின்னர் வாய் மூலமான முன்னேற்ற




அறிக்கையை சமர்ப்பித்தார். .நீண்ட காலமாக சிறிலங்காவுக்கு எதிராக வைக்கப்படும் உரிமை மீறல்களை மிச்சேல் பெச்சலெட் பட்டியல் இட்டார்.

(1) பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, மிக நீண்ட காலம் சிறை வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை இலங்கை அரசாங்கம் விரைவுபடுத்த வேண்டும்.

(2) 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் மத தலைவர்கள் நியாயத்தை நிலைநாட்ட வேண்டும்.

(3) சட்டத்தரணி ஹிஜா' ஹிஸ்புல்லா, நம்பிக்கையில்லா சாட்சியங்கள் இல்லாது, நீதிமன்ற நடவடிக்கைகளின் ஊடாக 16 மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

(4) 2008 மற்றும் 2009ஆம் ஆண்டில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில், முன்னாள் கடற்படை தளபதி வசந்த கரணாகொடவிற்கு எதிரான வழக்கை தொடர முடியாது என சட்ட மாஅதிபர் அறிவித்தது,

(5) 2011ஆம் ஆண்டு அரசியல்வாதியின் கொலை குற்றத்திற்காக தண்டனை வழங்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு, சனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியது நீதி செயல்முறை மீதான நம்பிக்கையை இல்லாது செய்துள்ளது.

(5) போலீஸ் தடுப்புக் காவலில் உள்ளவர்கள் உயிரிழப்பது, போதைப்பொருள் குற்றத்தில் ஈடுபடுவோர் மீதான துப்பாக்கி பிரயோகங்கள் மற்றும் சட்ட அமலாக்க அதிகாரிகள் மீதான தொடர் சித்திரவதைகள் மற்றும் மோசமான நடத்தைகள்.

(6) காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்திலே, அவர்களுடைய உறவுகள் எதிர்பார்க்கிற நீதி வழங்கப்பட வேண்டும்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு இணையவழி காணொலி மூலம் பதிலளித்த வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தீர்மானம் 46/1 இன் கீழ் அமைக்கப்பட்ட எந்தவொரு வெளிப்புற முன்முயற்சிகளுக்கான முன்மொழிவை சிறிலங்கா நிராகரிக்கும் அதே நேரத்தில், சம்பந்தப்பட்ட விடயங்களில் உள்நாட்டு செயன்முறைகள் கையாளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும் கூறுகையில்-

(1) தீர்மானம் 30.∴1 இலங்கையில் வாழும் சமூகத்தைத் துருவப்படுத்திவிடும்.

(2) மனித உரிமைகள் பேரவை அதன் தொடக்கக் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

(3) என்றும், சம்பந்தப்பட்ட நாட்டின் ஒத்துழைப்பு இல்லாமல் தொடங்கப்பட்ட வெளிப்புற முயற்சிகளால் அந்த நாட்டினால் குறிப்பிட்ட இலக்குகளை அடைந்து கொள்ள முடியாது அது அரசியல்மயமாக்கலுக்கு உட்படுத்தப்படும்.

(4) உலகின் பல பகுதிகளில் மனிதாபிமான மற்றும் ஏனைய ஆக்கபூர்வமான நோக்கங்களுக்காக அவை (நிதி) அவசரமாகத் தேவைப்படும்போது, இந்த முயற்சியில் செலவிடப்பட்ட வளங்கள் தேவையற்றவை.

**- கனடா நக்கீரன்**

(5) 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் குற்றவாளிகள் மீது இலங்கை தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து, அனைத்து விதமான சட்ட நடைமு-றைகளையும் பின்பற்றி வருகிறது. வதாக அவர் குறிப்பிடுகின்றார்.

பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதிலும், அனைத்து மதங்களைச் சார்ந்த இலங்கையர்களைப் பாதுகாப்பதிலும் எப்போதும் போல தாம் விழிப்புடன் இருப்பதாக வெளிவிகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கோவிட்-19 வைரஸ் தொற்று நோயின் நாளாந்த சவால்கள் இருந்த போதிலும், உள்நாட்டு செயன்முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தை இதன்போது பட்டியலிட்டு அவர் முன்னிலைப்படுத்தியிருந்தார்.

01. காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் அதன் முக்கிய செயற்பாடாக, ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து காணாமல் போனவர்களின் பட்டியலை இறுதி செய்கின்றது.

02. இழப்பீட்டு அலுவலகம் இந்த ஆண்டு 3775 கோரிக்கைகளை செயலாக்கியுள்ளது.

03. தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் அதன் 8 அம்ச செயற்றிட்டத்தைத் தொடர்கின்றது.

04. தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் ஆணையை நிறைவேற்றுகின்றது.

05. நிலையான அபிவிருத்தி இலக்கு 16 இன் கீழான வழிநடத்தல் குழுவொன்று சமாதானம், நீதி மற்றும் வலுவான நிறுவனங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

06. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்கும், சர்வதேச விதிமுறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப கொண்டு வரவும் அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இம்மாத இறுதியில் அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

07. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள வழக்குகளை விசாரணை செய்யவும், இதுபோன்ற வழக்குகளை விரைவாக சமாளிப்பதற்கான பரிந்துரைகளை வழங்கவும் ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

08. பொறுப்புக்கூறல் மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும், முந்தைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை மறுபரிசீலனை செய்வதற்காகவும் உயர் நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் விசாரணை ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. விசாரணை ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையை சனாதிபதியிடம் சமர்ப்பித்தது. இறுதி அறிக்கை அடுத்த 06 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்படும்.

09. நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு, நுண்ணறிவுகளைப் பெறுவதற்கும், ஆதரவைப் பயன்படுத்துவதற்கும் நாங்கள் சிவில் சமூகத்துடன் தீவிரமான ஈடுபாட்டைப் பராமரிக்கின்றோம்.

இலங்கையின் உள்ளக பிரச்சினைகளுக்கு தீர்வு காண வெளியக பொறிமுறையொன்றை உருவாக்கும் அதிகாரம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கு இல்லை என்பதே சிறிலங்காவின் நிலைப்பாடாக இருக்கிறது.

தீர்மானம் 46-1 இலங்கையில் இழைக்கப்பட்ட அட்டூழியங்களால் பாதிக்கப்பட்டோருக்கும், தப்பிப்பிழைத்தோருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது.

அப்படி என்றால் தீர்மானம் 46-1 இன் கீழ் 13 நிபுணர்கள் அடங்கிய விசாரணைக் குழுவின் கதி என்னவாகும்? அந்த நிபுணர் குழு இலங்கை வருவதை சிறிலங்கா அரசு அனுமதிக்காது என்கிறார் வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரீஸ். இலங்கைக்குச் செல்லாது குறித்த நிபுணர் குழு சாட்சியங்களைத் திரட்டவும் முடியாது.

இதனால் ஐநாமஉ பேரவையின் 46-1 தீர்மானத்தின் முக்கிய திரிசங்கு சொர்க்கத்தில் தள்ளப்பட்டுள்ளது. தீர்மானம் 46-1 முன்மொழிந்த நாடுகள் சிறிலங்கா அரசை வழிக்குக் கொண்டுவர எப்படிக் காய் நகர்தப் போகின்றன என்பது கேள்விக் குறியாக மாறியுள்ளது.

# இலங்கையின் ராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளை அநாகரிகமாக நடத்தியமைக்கு பலரும் கண்டனம்



ஐ.நா அமர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே, இலங்கையின் ஒரு அமைச்சர் இது போன்ற மிக மோசமான செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதென்பது, ஐ.நா மனித உரிமைப் பேரவையை இலங்கை அரசாங்கம் ஒரு பொருட்டாகவே கருதவில்லை என்பதையே காட்டுகின்றது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கடந்த 12ஆம் திகதி அனுராதபுரம் சிறைச்சாலைக்கு ராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சென்றிருந்தவேளை, அங்கிருந்த தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளில் அமர்த்தி அநாகரிகமாக நடந்துள்ள சம்பவத்தை உறுதிப்படுத்தி தமிழ் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் இராஜாங்க அமைச்சர் தனது பாதுகாப்பிற்காக வைத்திருந்த துப்பாக்கியை இரண்டு அரசியல் கைதிகள் தலைமீது வைத்து அச்சுறுத்தியும் உள்ளார். இச் சம்பவத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது. மேலும் ஐ.நா.வின் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே, இலங்கையின் ஒரு அமைச்சர் இது போன்ற மிக மோசமான செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதென்பது, ஐநா மனித உரிமை பேரவையை இலங்கை அரசாங்கம் ஒரு பொருட்டாகவே கருதவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

ஐ.நா மனித உரிமை பேரவையை ஒரு பொருட்டாகக் கருதாத இலங்கையை தொடர்ந்தும் ஐ.நா மனித உரிமைப் பேரவைக்குள் வைத்திருப்பது அர்த்தமற்றது, அதற்கு அப்பால் குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டு செல்ல உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அநாகரிகமான செயல் தொடர்பாக மேலும் பல பிரமுகர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர். அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் அவர்களும் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளை மண்டியிடச் செய்து தலையில் துப்பாக்கியை வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்திருக்கும் செயலானது தமிழ் மக்களின் அரசியலுக்கு நேராக நீட்டப்பட்ட துப்பாக்கியாகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு நேராக நீட்டிய துப்பாக்கியாகவுமே நாம் கருதுகின்றோம் என மேற்படி அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார். அரசியல் கைதிகளுடைய தற்போதைய நிலவரம் குறித்து சில நாட்களுக்கு முன்னர் அவரால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் சிறைச்சாலைகளின் இராஜாங்க அமைச்சர் கடந்த 12 ஆம் திகதி அனுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று அரசியல் கைதிகளை மண்டியிடச் செய்து தலையில் துப்பாக்கியை வைத்து கொலை அச்சுறுத்தல் விடுத்திருக்கும் செயலானது, தமிழ் மக்களின் அரசியலுக்கு நேராக நீட்டப்பட்ட துப்பாக்கியாகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு நேராக நீட்டிய துப்பாக்கியாகவும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கருதுவதோடு இத்தகைய அநாகரிகமான செயலை மிகவும் வன்மையாகவும் கண்டிக்கின்றது.

இலங்கை மனித உரிமைக்கு மதிப்பு அளிக்கின்ற நாடு எனில் குறிப்பிட்ட அமைச்சரை அமைச்சுப் பதவியிலிருந்து உடனடியாக நீக்கி துரித விசாரணைக்கு உட்படுத்தி உரிய தண்டனை வழங்குவதோடு மனநல சிகிச்சையும் அளித்தல் வேண்டும். அதுவே இலங்கை அரசு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்குக் காட்டுகின்ற நல்லெண்ண சமிக்ஞையாக அமையும். இல்லையெனில் இது இலங்கை அரசும் ஐநா மனித உரிமைகள் பேரவைக்கெதிராக செயல்படுகின்றது என்பதைச் சுட்டி நிற்கும். மேலும் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பாகவும், இச்சட்டத்தால் நீண்ட காலம் சிறையில் வாடுவோரின் மனித உரிமை விடயமாகவும் ஆராய ஆட்சியாளர் குழு நியமித்து இருப்பதாகக் கூறுவது கேலிக்கூத்தாக அமையும்.

அது மட்டுமல்ல அரசின் பயங்கரவாத தடை சட்டம் தொடர்பான செயற்பாடு ஐ.நா மனித உரிமை பேரவையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் ஒரு செயலாகவே அமையும். குறிப்பிட்ட அமைச்சரின் செயல்பாடு நீண்டகாலமாகச் சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக நம்பிக்கையற்ற நிலைக்குத் தள்ளப்படுவதோடு வாழ்க்கையில் விரக்தி நிலையும் ஏற்பட்டு அத்தோடு உளவியல் ரீதியில் பாதிப்பையும் ஏற்படுத்தும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

சிறைச்சாலை கைதிகளைப் பாதுகாக்க வேண்டிய அமைச்சரே இவ்வாறான ஒரு செயலில் ஈடுபடுவதன் மூலம் தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்பது வெளிப்படுவதோடு அனைத்து அரசியல் கைதிகளையும் பாதுகாப்பு மிகுந்த தமிழர் பிரதேசங்களில் சிறைச்சாலைக்கு மாற்றி அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்றும் அனுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிகளை உடனடியாக பாதுகாப்பான தமிழர் பகுதிகளில் உள்ள சிறைச்சாலைக்கு மாற்றிப் பாதுகாப்பை உறுதி செய்தல் வேண்டும்.

இனவாத ஆட்சியாளர்கள் ஆசியாவின் அறிவாலயம் எரிந்து சாம்பலாக்கி இனப்படுகொலையுடனான இன அழிப்போடு நின்றுவிடாது அது இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கெல்லாம் நீதி கேட்டுக் கொண்டிருந்த நிலையில் அரசியல் கைதிகளின் தலையில் துப்பாக்கி வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்நாட்டின் இனவாத அரசியல் தமிழ் மக்கள் இனிவரும் காலங்களிலும் அடக்கி ஒடுக்கும் என்பதற்கு இன்னுமொரு சாட்சி அரங்கேற்றப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் ஒரே சக்தியாக நின்றால் மட்டுமே எமது எதிர்காலம் காக்கப்படும்.

இச் சம்பவத்தைக் கருத்திற்கொண்டு இலங்கையில் நடந்த இனப்படுகொலையுடனான இன அழிப்பிற்குச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நீதி கிடைக்க வழியேற்படுத்துமாறும், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்குக் கொண்டு செல்லுமாறும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கொழும்பில் பணியாற்றும் மனித உரிமைகள் தொடர்பான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் அவர்களும் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித் துள்ளார்.

அவர் தனது அறிக்கையில், "இலங்கையில் ஆட்சியில் இருப்பவர்களுக்கும் அப்பாவி மக்களுக்கும் சட்டம் சார்ந்த விடயங்களில் பாரபட்சமான நடைமுறை பின்பற்றப்படுகின்றது. இவ்வாறான நிலை தொடருமாயின் நாட்டு மக்களுக்கு நீதித்துறையில் நம்பிக்கையற்றுப் போய்விடும்". இவ்வாறு தெரிவித்துள்ளார் அம்பிகா சற்குணநாதன் அவர்கள்.

அண்மையில் இலங்கையின் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வளிப்பு விவகாரங்களுக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த சிறைச்சாலைகளுக்குச் சென்று தமிழ்க் கைதிகளை தரக்குறைவாகப் பேசி மற்றும் அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பாக வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் அரசியலமைப்பின் சிறைச்சாலைகள் தொடர்பான சட்டத்திற்கமைய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உயிர் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்க வேண்டிய பொறுப்பிலுள்ள இராஜாங்க அமைச்சர், சட்டங்களை மீறும் வகையில், அவற்றுக்கு மதிப்பளிக்காமல் செயற்பட்டிருப்பாரானால் அது பாரதூரமான குற்றமாகும் என்று முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே கைதிகளை தரக்குறைவாக நடத்தியதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் பல தரப்பினராலும் விமர்சனங்களும் கண்டனங்களும் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், இது குறித்து வினவிய போதே சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில், இராஜாங்க அமைச்சர் சிறைச்சாலைக்குச் சென்று பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை துப்பாக்கியைக் காண்பித்து மிரட்டி, அவர்களை முழந்தாழிடச் செய்து தரக்குறைவாக நடத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளமையானது பாரதூரமான குற்றச்சாட்டுக்களாகும்.

காரணம் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள், குறிப்பாக பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் ஏற்கனவே பல வகையிலும் பாரபட்சங்களுக்கு உட்படுத்தப்பட்டு உரிமை மீறல்கள் இழைக்கப்பட்டவர்களாகவே உள்ளனர்.

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சரான அவர் இலங்கையின் அரசியலமைப்பின் சிறைச்சாலை சட்டங்களுக்கமைய சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உயிர் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்க வேண்டிய பொறுப்பிலுள்ளவராவார். இவ்வாறான முக்கிய பொறுப்பிலுள்ள அமைச்சரே இவ்வாறு எமது சட்டங்களை மீறும் வகையில், அவற்றுக்கு மதிப்பளிக்காமல் செயற்பட்டிருப்பாரானால் அது பாரதூரமான குற்றமாகும். எனவே இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் போது நிச்சயம் அவர் பதவி நீக்கப்பட வேண்டும்.

பதவி நீக்கி பின்னர் அது குறித்த விசாரணைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். காரணம் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தமது தற்பாதுகாப்பிற்காகக் கூட எதனையும் செய்ய முடியாத நிலையிலுள்ளவர்களாவர். இவர்கள் அரசாங்கத்தின் கண்காணிப்பிலேயே உள்ளவர்களாவர்.

இவ்வாறிருப்பவர்கள் உயர் பதவியிலுள்ள இராஜாங்க அமைச்சரொருவர் சிறைச்சாலைக்குள் சென்று துப்பாக்கியைக் காண்பித்து மிரட்டி முறையற்ற விதத்தில் நடந்து கொண்டுள்ளமை பொறுத்தமற்றது. குறித்த அமைச்சரின் செயற்பாடு தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அவர் கைது செய்யப்படவுமில்லை.

# கனடாவில் சுமார் இரண்டரை மில்லியன் மக்கள் பொது தேர்தல் நாளுக்கு முன்னரேயே வாக்களிக்கும் சலுகையை பயன்படுத்தியுள்ளார்கள்

எதிர்வரும் செப்டம்பர் 20ம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் இம்முறை மக்கள் தேர்தல் நாளுக்கு முன்னரேயே வாக்களிக்கும் சலுகையை அதிகமாக பயன்படுத்தியுள்ளார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டில் சுமார் இரண்டரை மில்லியன் கனடிய மக்கள் இந்த தேர்தல் நாளுக்கு முன்னரேயே வாக்களிக்கும் சலுகையை பயன்படுத்தியுள்ளார்கள் என்ற செய்தி அனைத்து கட்சித் தலைவர்களையும் மகிழ்ச்சி கொள்ள வைத்துள்ளது என்று அறியப்படுகின்றது.

கடந்த 10ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் வழங்கப்பட்ட இந்த சிறப்பு வசதியினூடாக முதல் நாளில் மொத்தம் 1.3 மில்லியன் மக்கள் வாக்களித்துள்ளதாக எமக்கு கிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இந்த முன்னரேயே வாக்களிக்கும் வசதியானது திங்கட்கிழமை இரவு 9 மணி வரை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற வாய்ப்பு வழங்கப்பெற்றது.

2019 பெடரல் தேர்தல் வாக்குப்பதிவை ஒப்பிடுகையில், இந்த முறை முன்கூட்டியே வாக்களிக்கும் வசதியை முதல் நாளில் பயன்படுத்தியவர்கள் எண்ணிக்கை சிறிது அதிகரித்துள்ளதாகவே தெரிய வந்துள்ளது. 2019ல் முன்கூட்டியே வாக்களித்தவர்கள் மொத்தம் 4.7 மில்லியன். 2015ல் இந்த எண்ணிக்கை 3.65 மில்லியன் என பதிவாகியிருந்தது.

கனேடியர்கள் சிறப்பு அனுமதி பெற்று வார நாட்களிலும் வாக்களிக்கலாம். இந்த முன்கூட்டியே வாக்களிக்கும் திட்டத்தின் படி சுமார் இரண்டரை மில்லியன் வாக்களித்துள்ளார்கள் என்று அறியப்படுகின்றது.

SECURE THE FUTURE

# Mohsin BHUIYAN

## Scarborough Southwest



**SECURE JOBS**
by recovering the 1 million jobs lost during the pandemic within one year.

**SECURE ACCOUNTABILITY**
by enacting a new Anti-Corruption law to clean up the mess in Ottawa.

**SECURE OUR RETIREMENT**
by passing new legislation to protect pensions and never tax Canadians' capital gains on the sale of their principle residence.

**SECURE THE ENVIRONMENT**
by introducing low carbon savings accounts enabling Canadians to save money every time they fuel up.

**SECURE OUR ECONOMY**
by balancing the budget over the next decade.

To learn more about our plan visit **www.conservative.ca/plan**

**Vote for Mohsin Bhuiyan for better representation in Scarborough Southwest**

416-901-VOTE (8683) | vote@mohsinbhuiyan.ca | www.mohsinbhuiyan.ca

Authorized by the Official Agent for Mohsin Bhuiyan

## What the residents of Scarborough Southwest are saying about Bill Blair 1.4 ★ 140 reviews

Below are direct quotes from google reviews

★ 6 months ago
WHY DONT YOU RESPOND TO YOUR EMAILS?!?!?! Please remember, we put you in that seat.. I look forward to the day we remove you from it. Feels he sees himself as too good to respond to phone calls or emails.

★ 10 months ago
Zero stars for Bill Blair ! I've sent multiple emails and hand written letters with no response. My 12 year old son sent a hand written letter with no response. Mr Blair blatantly lies and is making canada a dangerous place with his ill thought out actions.

★ a year ago
If I could have, I would have given 0/5 stars. Does NOT respond to correspondence in any form (email, phone, etc). When presented with FACTS, completely disregards them and shows no interest or desire to "Listen and Maybe Learn". Poor excuse for a MP in all account and needs to be removed ASAP.

★ a year ago
Does not respect his constituents. Has avoided my questions for a year now.

★ a year ago
Not Friendly when being approched. I did not like the way he spoke to me . He made me feel like i was nobody . I said a simple Hello, and he just shooshed me to get out of his way and he looked frustrated.

★ a year ago
I've placed multiple calls to the office. Most times I've left a message with my contact information. I have never received a call back. Apparently Minister Blair does not believe in being accountable to Canadians.

★ 3 years ago
Called the office on a Monday, no response. Drove to the office on Wed. Not open until 12 pm. Called later on Wednesday. Told I should wait for a call back. Shame on you Bill Blair.

And much, much more online on Bill Blair's record of the past six years. **Don't you think we deserve better? Make your vote count!**

# உலகத்தின் இதயங்களை உடைத்தெறிந்த அமெரிக்காவின் 'உலக வர்த்தக நிலையம்'

இருபது வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற உலகை உலுக்கிய ஓர பயங்கரவாதச் சம்பவத்தின் கோரமான நினைவுகளை பகிர்ந்து கொள்ளாமல் இருக்க முடியாது. அதுதான் திடீ-ரென ஒரு காலையில் மக்கள் பணிகளுக்கும் பாடசாலைகளுக்கும் பயணித்துக்கொண்டிருந்த வேளையில் இடம் பெற்ற ஒரு விபரீதமான சம்பவம். உலகத்தின் இதயங்களை உடைத்தெறிந்த அமெரிக்காவின் "உலக வர்த்தக நிலையம்" தாக்கி அழிக்கப்பட்ட கொரூரம். யாருமே எண்ணிப்பார்க்க முடியாது அளவிற்கு பயங்கரவாதத்தின் உச்சம் என்று பார்க்கப்பட வேண்டிய இந்த சம்பவத்தை நாம் மீண்டும் ஒன்றாக இருந்து மீட்டுப் பார்ப்போம் இப்போது.

விரும்பத்தகாத நினைவுகளை தோற்றுவிக்கும் அளவுக்கு உயிருடன் இருந்த மற்றும் வயதான அனைவருக்கும் இந்தச் சம்பவம் ஒரு கதைதான். அன்று காலை எனது நண்பர் என்னை அழைத்தார். தொலைக்காட்சியைப் பாருங்கள். என்ன பயங்கரம் நடக்கின்றுத என்பதைக் காண்பீர்கள் என்று அவர் சொன்னார். என் சகோதரி என்னை அழைத்தார், "உங்கள் டிவி-யை பாருங்கள். நியூயார்க்கில் ஏதோ நடக்கிறது" என்றார்.

செப்டம்பர் 11, 2001 அன்று காலை நாங்கள் தொலைக்காட்சியை இயக்கிய வண்ணம் அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றை பார்க்கத் த-யாரானோம்.

அமெரிக்காவின் நியுயோர்க் நகரின் மத்தியில் உள்ள இரண்டு உலக வர்த்தக மையக் கோபுரங்களில் ஒன்று தீப்பிடித்து எரிந்ததைப் பார்த்தோம். இது ஒரு பயங்கரமான விபத்தா அல்லுத எவ்வாறு இந்த கொடுமையான சம்பவம் நிகழ்ந்துத என்று நாங்கள் யோசித்தோம். பெரும்பாலானவர்கள் உலகெங்கும் இருந்த அப்படித்தான் நினைத்திருப்பார்களா. ஆனால் சில நிமிடங்களில் அதை நாங்கள் உணர்ந்து கொண்டோம்.



இது ஓர சர்வதேசப் பங்கரவாதம் என்பதை அறிந்து கொண்டோம். தோலைக்காட்சிகளில் வானொலிக-ளில் உலககெங்கும் இருந்து பல விமர்சகர்கள் தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

அவர்களில் ஓர பத்திரிகையாளர் ஒரு முக்கியமான கேள்வியை முன்வைத்தார்.

"சர்வதேசத்தின் முக்கியமாக ஒரு அரச பயங்கரவாதத்தை அரங்கேற்றும் நாடு என்று வர்ணிக்கப்படும் அமெரிக்காவின் மீது இவ்வாறான ஒரு தாக்குதல் எவ்வாறு நடத்தப்பட்டது".

இந்தக் கேள்வியை பலர் முன்வைத்திருக்க மாட்டார்கள். ஆனால் இந்தக் கேள்வியை யாரும் புறக்கணிக்க முடியாது.

வியட்னாம் போன்ற நாடுகளில் தா-னாக "மூக்கை" நுழைத்து அங்கு இலட்சக் கணக்கானவர்களை கொன்றழித்த அமெரிக்காவின் மீது இந்த தாக்குதலை நடத்தியிருக்கின்றார்கள். அவர்களும் பயங்கரவாதிகளே என்று நாம் தீர்மானித்தேன்.

இந்த தாக்குதல் நடத்தப்பெற்ற போது கடைசி அமெரிக்க ஜனாதிபதி நாட்டின் ஒரு பாட-சாலையில் மாணவர்களின் வகுப்பறையில் தனது நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தார்.



முதலாவது தாக்குதல் நடத்தப் பெற்ற பின்னர், இரண்டாவது விமானம் இரண்டாவது கோபுரத்தைத் தாக்கியது. அப்போதுதான் ஒன்று தெளிவாகி-யது. இந்த தாக்குதல் ஒரு நன்கு திட்டமிட்ட ஒரு பயங்கரவாதத் திட்டம் என்புத. இது ஒரு விபத்து இல்லை. பயங்கரவாதமே என்ற விடயம் நிரூபணமாகியது.

அந்த தருணத்தில், இரண்டு கோபுரங்களும் தீப்பற்றிய வண்ணம் கூறு கூறுகளாக கீழ் நோக்கி விழுந்து கொண்டிருந்தன. தொடர்ந்து சில மணி நேரத்தில் மேலும் சில முக்கியமான அமெரிக்க நிர்வாகக் கேந்திரங்களில் மற்றும் லோயர் மன்ஹாட்டன் என்னும் இடத்திலும் இவ்வாறான பயங்கரமான விமானத் தாக்குதல் நடத்தப்பெற்று அந்த இடங்கள் புகையில் மூழ்கின.

அந்த தருணத்தில், இரண்டு கோபுரங்கள் விழுந்ததும், மன்ஹாட்டன் புகை மற்றும் தூசியால் மூழ்கியதும், பென்டகன் தாக்கப்பட்டதும், பென்சில்வேனியாவில் மற்றொரு விமானம் கீழே விழுந்ததும், வரலாற்றின் ஆபத்தான அத்தியாயத்தை எழுதத் தொடங்கின. அமெரிக்கத் தலைவர்களும் மக்களும் "ஆடி" ப்போனார்கள் என்றே கூற வேண்டும் முந்தையதை தவறுகளை அவர்கள் உணரத் தொடங்கியிருக்க வேண்டும்.

அந்த தாக்குதல் நடந்த நாள் பற்றி ஒவ்வொருவரிடமும் ஒரு கதை உள்ளது, இன்று 2021ம் ஆண்டில் இரண்டு தசாப்தங்களுக்குப் பிறகு, குறிப்பாக அமெரிக்காவில் எவ்வளவு மாற்றம் ஏற்பட்டது என்பது நன்கு தெளிவாகத் தெரிகிறது: அன்றாட வாழ்க்கையின் சாதாரண நடைமுறைகள், அமெரிக்க அரசாங்கத்தின் அமைப்பு, போர்கள் மற்றும் சர்வதேச விவகாரங்கள்.

மிக அண்மையில் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப்படைகள் விலகி-யது கூட பல பாடங்களைக் கற்றுக்கொண்ட பின்னர் தான் என்பது அனைவரும் அறியக் கூடியதாக உள்ளது.

எரின் ஓ டூல் ஒரு புதிய கட்சிக்கு தலைமை தாங்குவதாகக் கூறி, மையவாத வாக்காளர்களுக்கு ஒரு ஆக்ரோஷமான ஆடுகளத்தை உருவாக்குகிறார், ஆனால் லிபரல் தலைவர் ஜஸ்டின் ட்ரூடோ தனது முக்கிய அரசியல் போட்டியாளர் ஒரு முற்போக்கான பழமைவாதியோ அல்லது ஒரு தலைவரோ அல்ல என்று கூறி வெள்ளிக்கிழமை அந்த வாதத்தை மறுத்தார். அவரது கட்சி அவரைப் பின்பற்றாது.

தேர்தல் பிரச்சாரத்தின் ஒரே ஆங்கில மொழி விவாதத்திற்கு மறுநாளே ட்ரூடோ ஓ"டூலுக்கு எதிராக ஊசலாடி வந்தார், வாக்களிக்கும் நாளுக்கு முன் கூட்டாட்சி கட்சித் தலைவர்கள் முக்கியமான இறுதி வாரத்திற்குச் சென்று, முன்கூட்டியே வாக்குப்பதிவு தொடங்கியபோது.

ஸ்டாரின் ஆசி-ரியர் குழுவிடம் பேசி-ய ட்ரூடோ, தனது சிறுபான்மை அரசாங்கம் எப்படியும் நீண்டகாலம் தப்பிப்பிழைத்திருக்கலாம் என சந்தேகிப்பதாகவும், வெள்ளிக்கிழமை பிரச்சாரப் பாதையில் ஓ"டூலின் பரிந்துரையை கிண்டல் செய்தார். மறைந்த ஜிம் ஃப்ளஹெர்டி போன்ற பிற முற்போக்கு பழமைவாதிகள்.

"ஒருவேளை அவர் முற்போக்கான பழமை-வாதியாக இருக்கலாம்" என்று ஓ"டூலின் ட்ரூடோ கூறினார். ஆனால் நான் அவரை ஒரு முற்போக்கான பழமைவாத தலைவர் என்று அழைக்க மாட்டேன். ஒரு முற்போக்கு கன்சர்வேடிவ் தலைவர், அவர் சார்பு தேர்வு என்று கூறும் போது, அவரது காக்கஸ் சார்பு தேர்வாக இருக்கும் ஒரு முற்போக்கான பழமைவாத தலைவர், தடுப்பூசிகளுக்கு ஆதரவாக இருப்பதாகக் கூறுகிறார், 90 சதவிகி-த கனேடியர்களை தடுப்பூசி போடுவதற்கு முன்பு அவர் தனது 90 சதவிகிதத்தை சமாதானப்படுத்த முடியும்.

"அதனால் அந்தத் தலைவர், அவர் எப்படிப்பட்டவர் என்று அவர் சொல்ல முடியும், ஆனால் நீங்கள் உண்மையில் வழிநடத்தவில்லை என்றால், நீங்கள் உண்மையில் மக்களை எங்காவது கொண்டு வரவில்லை என்றால், நீங்கள் உண்மையில் அந்த கொள்கைகளுக்கு ஏற்ப நின்று கொள்கைகளை நிர்வகிக்க விரும்பவில்லை என்றால், நான் அந்த மோனிகரை அவருக்கு கொடுக்க மாட்டேன்.

ட்ரூடோ கடந்த ஆண்டு கன்சர்வேடிவ் கட்சி தலைமை போட்டியில், "பீட்டர் மெக்கேவில் ஒரு முற்போக்கு பழமைவாதியாக இருந்த ஒருவர் இருந்தார், அவர் கன்சர்வேடிவ் கட்சியின் வலதுசாரி பழமைவாத தளத்துடன் பணிபுரிந்த எரின் ஓ டூலேவால் தோற்கடிக்கப்பட்டார்-டெரெக் ஸ்லோன், லெஸ்லின் லூயிஸ், துப்பாக்கி லாபி. கனடாவின் கன்சர்வேடிவ் கட்சியின் முற்போக்கான பழமைவாதக் கூறுகளை தோற்கடிக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டனர் - மேலும் உங்கள் தலைமைக்கு நீங்கள் கடமைப்பட்டவர்கள் வெற்றி பெறுவார்கள்.

ஓ"டூல், வெள்ளிக்கிழமை மிசிசாகாவி-ல் பேசுகையில், மாற்றம் மற்றும் ஸ்திரத்தன்மை ஆகிய இரண்டின் முகவராக நடித்தார். "எங்களுக்கு ஒரு புதிய தலைவர் கிடைத்துள்ளார். எங்களிடம் ஒரு திட்டம் உள்ளது. எங்களுக்கு நம்பமுடியாத வேட்பாளர்கள் உள்ளனர்.

அவர் நிருபர்களிடம் கூறுகையில், கனேடியர்கள் அவருக்கும் அவரது தளத்திற்கும் ஒரு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறார்கள், இது 50 பில்லியன் டாலருக்கும் அதிகமான புதிய செலவினங்கள் மற்றும் பட்ஜெட்டை ஒரு தசாப்தத்திற்குள் சமநி-லை.






**On September 20th RE-ELECT**

# HELENA JACZEK

Markham—Stouffville

## About Helena

- Dr. Helena Jaczek was elected in 2019 as Member of Parliament for Markham-Stouffville.
- As Chief Medical Officer of Health for York Region for 18 years, Helena was responsible for Public Health, Land Ambulance and long-term care.
- Helena served as the Member of Provincial Parliament for the riding of Oak Ridges-Markham for 11 years. During that time, she served as the Minister of Health and Long-Term Care and Minister of Community and Social Services.
- As a member of the Standing Committee on Industry, Science, and Technology and the Standing Committee on Transport, Infrastructure and Communities, Helena worked to lessen the impact of the health and economic consequences of the global pandemic.
- Helena graduated from the Faculty of Medicine at the University of Toronto and was on the active staff at Women's College Hospital.
- She has a Masters of Health Science and a Masters of Business Administration.







## Delivering Results For Markham-Stouffville

Introduced and increased the Canada Child Benefit, a tax-free payment of up to $6,833 per year, per child, to help eligible families with the cost of raising children, helping over **16,000 families** and over **29,000 kids** in Markham-Stouffville.

Supporting our seniors, including restoring the age of eligibility for Old Age Security (OAS) to 65, a **one-time increase of $500** to the OAS in 2021 and a permanent increase to OAS of **10% in 2022** for seniors aged 75 and over.

Building sustainable transit in our community through a **$2.2B investment in York Region, including the Yonge Subway extension**, to boost our economy and improve your commute.

This year, **invested nearly $150,000 through** the New Horizons for Seniors Program to promote social inclusion and improve seniors' health and well-being in Markham-Stouffville.

**Over $300,000 through the Energy Savings Rebate Program** to help residents with up to $5,000 in grants for retrofits to make energy-efficient purchases, save them money, make their homes more energy efficient, help protect the environment, and address climate change.

**Over $6.2 million** through the COVID-19 Resilience Infrastructure Stream to advance Markham's Trees for Tomorrow program, continue the City's Block Street Pruning and replace 595 street trees, plant approximately 500 trees in Stouffville and replace/construct new sidewalks, and upgrade Markham's Emergency Operations Centre.


**$18.4 billion in** COVID-19 support for Small-Businesses in Ontario through the Canada Emergency Business Account (CEBA).

905-554-0337
votehelena.ca
info@votehelena.ca

/DrHelenaJaczek
@HelenaJaczek
@HelenaJaczek

Authorized by the Official Agent for Helena Jaczek

HELENA JACZEK


ON SEPTEMBER 20
VOTE
LIBERAL
For $10 a day child care
For housing affordability
For a permanent increase to GIS payments for seniors
Authorized by the registered agent for the Liberal Party of Canada.

# NUCLEUS UNIVERSITY

## SCHOOL OF MEDICINE

- 4-Year MD Program for Undergrad
- 5-Year MD Program for High School Grads
- Clinicals conducted at USA teaching hospitals
- Pre-Medical Classes conducted in Brampton
- Graduates can write US & Canadian Licencing Exams

## SCHOOL OF DENTISTRY

- 4-year DDS Program for Undergrads
- 5-Year DDS Program for High School Grads
- Doctor of Dental Surgery Program conducted in Aruba
- Pre-Dental Classes conducted in Brampton
- Graduates can write US & Canadian Licencing Exams

- Canadian Owned University in one of the safest Caribbean country of Aruba
- Become a practicing Medical Doctor or Dentist in Canada or USA
- Within 5 years for High School graduates or 4 years for University undergraduates
- Pre-medicine courses can be completed in Brampton campus for high school graduates.
- Affordable tuition fees, scholarships available to outstanding students.
- Clinical training at Johns Hopkins affiliated hospitals in the USA

**For more information contact admissions office at: (416) 910-8750**

**தமிழில் உரையாட அழைக்கவும், Dr. Balachandar: (416) 545-7080**

**NUSOM.ORG**

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

### WE ACCEPT

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

### LIST OF SERVICES

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**


RE-ELECT
GARY
ANANDASANGAREE
SCARBOROUGH-ROUGE PARK
647-910-GARY (4279)
VoteForGary.ca
Info@VoteForGary.ca
Liberal
FORWARD. FOR EVERYONE.
65+
ஒரு நாளுக்கு $10 சிறுவர் பராமரிப்பு
மேலும் பலமான அனைவருக்குமான சுகாதாரப் பராமரிப்பு
மலிவானதும், அணுகக்கூடியதுமான வீடமைப்பு
முதியோருக்கு ஆதிகரித்த ஆதரவு
கோவிட்-19 உதவி நடவடிக்கைகளும் மீட்சித் திட்டமும்
வாக்களிப்பதற்கான வழிகள்
SEP 20
SEP 10,11,12 & 13
IN-PERSON
தேர்தல் நாள்
செப்ரெம்பர் 20
காலை 9:30 முதல்
இரவு 9:30 வரை
முற்கூட்டிய வாக்களிப்பு
செப்ரெம்பர் 10, 11, 12, 13
காலை 9 முதல்
இரவு 9 வரை
நேரில்
Elections Canadaவில்
செப்ரெம்பர் 14 ஆந் திகதி
மாலை 6 மணிக்கு முன்பாக
மேலதிக தகவல்களுக்கு Elections.ca யைப் பார்வையிடுங்கள்.
Authorized by the Official Agent for Gary Anandasangaree

# உளவுத்துறை அதிகாரியான ஆர்.என். ரவி தமிழ்நாட்டின் புதிய ஆளுநராக நியமனம்? — பழ. நெடுமாறன் கண்டனம்



தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கை: தமிழ்நாட்டின் புதிய ஆளுநராக ஐ.பி உளவுத்துறை அதிகாரியான ஆர்.என். ரவி நியமிக்கப்பட்டிருப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

கல்வித்துறையினர், முன்னாள் நீதியரசர்கள் போன்ற அரசியல் சார்பற்றவர்களே மாநில ஆளுநர்களாக நியமிக்கப்படுவார்கள் என அரசியல் சட்டம் தொகுக்கப்பட்ட காலத்தில் நாடாளுமன்றத்தில் சட்ட அமைச்சரான அம்பேத்கர் வாக்குறுதி அளித்தார். 1967ஆம் ஆண்டிற்குப் பிறகு பல்வேறு மாநிலங்களில் எதிர்க்கட்சியினர் ஆட்சியைப் பிடித்தபோது, அங்கெல்லாம் முன்னாள் அதிகாரிகளை ஆளுநராக நியமிக்கும் போக்கு வளரத் தொடங்கியது. மேற்குவங்கத்தில் இடதுசாரிகள் கூட்டணி ஆட்சியின் போது அங்கு ஆளுநராக ஐ.பி. உளவுத்துறையின் முன்னாள் தலைவர் எம்.கே. நாராயணன் நியமிக்கப்பட்டார். தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். ஆட்சியின் போது இந்திய உள்துறையின் செயலாளராக இருந்த சுந்தர் லால் குரானா ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஒன்றிய ஆட்சியில் காங்கிரசு இருந்தபோது பின்பற்றிய இந்த வேண்டாத பழக்கத்தை பா.ச.க. ஆட்சியும் பின்பற்றுகிறது.

சனநாயக மரபுகளுக்கு எதிராகவும், மாநில ஆட்சிகளைக் கண்காணிப்பதற்கும் முன்னாள் அதிகாரிகளை ஆளுநராக நியமிக்கும் போக்குக்கு எதிராக அனைவரும் இணைந்து கண்டனக் குரல் எழுப்ப முன்வருமாறு வேண்டிக்கொள்கிறேன்".

இவ்வாறு தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்

சினிமா

# சிறந்த பேச்சாளருக்கான சர்வதேச விருதை வென்ற நடிகை பார்வதி நாயர்



நடிகைகள் ஒரு விழாவில் கலந்து கொண்டால், அந்த விழாவிற்கு வருகை தந்தவர்கள் அனைவரிடத்திலும் உற்சாகம் ஊற்றெடுக்கும். நடிகையுடன் செல்.்.பி எடுத்துக் கொள்வது முதல், அவருடன் கலந்துரையாடுவது, அந்த விழாவில் அவர் பேசும் பேச்சு, பேச்சு மொழி உள்ளிட்டவைகள் மூலம் அவரின் திரை ஆளுமை தவிர தனித்துவமான திறமைகளும் வெளிப்படும் வாய்ப்பு உண்டாகிறது. இதன் காரணமாக நடிகைகள், நகைக்கடைகள், உணவகங்கள் என வணிக நோக்கம் சார்ந்த விழாக்களில் கலந்து கொள்வதில் ஆர்வம் காட்டுகிறார்கள். அத்தகைய விழாக்களில் நடிகைகள் கலந்துகொண்டு பேசும்போது, அவர்களின் பேச்சில் வெளிப்படும் சுவாரசியமான தகவல்கள், மேடை ஆளுமை, வருகை தந்திருக்கும் விருந்தினர்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடம் உற்சாகத்தை உண்டாக்கும் உண்டாகும் பேச்சு என பல விஷயங்கள் இருக்கிறது.

இந்நிலையில் உலக அளவில் இலாப நோக்கமற்ற தன்னார்வ தொண்டு நிறுவனமான "டோஸ்ட்மாஸ்டர்" ஏற்பாடு செய்திருந்த ஒரு கூட்டத்திற்கு சென்றிருந்தோம். 140 க்கும் மேற்பட்ட நாடுகளில் 3 லட்சத்து 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களை கொண்டு இயங்கும் இந்த "டோஸ்ட்மாஸ்டர்" தன்னார்வ தொண்டு நிறுவனம் கல்வியியல் துறையில் ஆக்கப்பூர்வமாக செயல்படும் தலைவர்களையும், தலைமைப் பண்புடன் கூடிய பேச்சாளர்களையும், மனதின் மாசுகளை அகற்றி, வலிமையான உளவியல் உத்திகளுடன் முன்னேற்றத்தை நோக்கி செல்வதற்கான பாணியை எளிதாக விளக்கும் சுயமுன்னேற்ற பேச்சாளர்களையும் உருவாக்கியிருக்கிறது. இவர்களின் கூட்டத்தில் கலந்து கொள்ள கௌரவ விருந்தினராக அழைக்கப்படுவதற்கே ஏராளமான தகுதிகள் வேண்டும். ஏதேனும் ஒரு துறையில் அனுபவ ஆளுமையுடன் சர்வதேச விருதுகளையும் பெற்றிருக்கும் திறமையாளர்களையும், சாதனையாளர்களும் மட்டும்தான் இவர்கள் நடத்தும் கூட்டத்திற்கு கௌரவ விருந்தினர்களாக அல்லது பேச்சாளர்களாகவும் அழைக்கப்படுவர். உதாரணமாக கூற வேண்டுமென்றால் இந்தியாவின் உயரிய விருதான பத்மஸ்ரீ, பத்மபூஷன், பத்மவிபூஷன் போன்ற விருதுகளை வென்ற சாதனையாளர்களை தான் கௌரவ விருந்தினர்களாக பேசுவதற்கு அழைப்பார்கள். இத்தகைய சாதனையாளர்களும் "டோஸ்ட் மாஸ்டரி"ன் உயரிய சர்வதேச தரத்திலான நோக்கத்தை உணர்ந்துகொண்டு மிகுந்த விருப்பத்துடன் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

இதுபோன்றதொரு கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது அங்கு இளைய தலைமுறை மற்றும் இணைய தலைமுறையின் விருப்பத்திற்குரிய நடிகையான பார்வதி நாயர் அவர்களை பேச்சாளராக அழைத்திருந்தார்கள்.

டோஸ்ட்மாஸ்டரின் உறுப்பினர்கள் கலந்து கொண்ட அந்த விழாவில் நடிகை பார்வதி நாயரின் அற்புதமான பேச்சு அனைவரின் புருவத்தையும் வியப்பில் உயர்த்தியது. மாடலிங் மங்கையாகவும், விளம்பரங்களில் தோன்றும் வசீகர பெண்ணாகவும் திறமையான நடிகையாகவும் மட்டுமே அறிந்திருந்த பார்வதி நாயர், அன்றைய கூட்டத்தில் பேசிய பேச்சு, அவரின் தனித்திறமையை அடையாளப்படுத்தியது. சரளமான பேச்சு... எளிமையான உதாரணங்கள்... அழுத்தமான நோக்கங்கள்... என ஒரு சுய முன்னேற்ற பேச்சாளருக்குரிய அத்தனை ஆளுமைகளும் இவரின் பேச்சில் இடம்பெற்றிருந்தது. கூட்டத்தை வசியப்படுத்தி வளமான சொல்லாட்சியை இவர் தடையில்லாமல் கைவரப் பெற்றிருந்தார். இவரின் பேச்சு உறுப்பினர்களை ஆச்சரியப்படுத்தியது.



அதன்பிறகுதான் நமக்கெல்லாம் நடிகை பார்வதி நாயர் - பள்ளியில் படிக்கும்போதே மேடைப் பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டு ஏராளமான விருதுகளை வென்றவர் என்பதும், சுயமுன்னேற்ற பேச்சுக்களை பேசி ஏராளமான தன்னம்பிக்கை நாயகர்களை உருவாக்கியது என்பதும் தெரியவந்தது. விழாவின் இறுதியில் அவருக்கு "டோஸ்ட் மாஸ்டர்" விருது கொடுத்து கௌரவிக்கப்பட்டார்.

கொரோனா காலகட்டத்தில் ஏராளமான திரை உலக பிரபலங்கள் இல்லத்திலேயே முடங்கி, தங்களின் உடல் நலனில் அக்கறை செலுத்தி வந்தபோது, நடிகை பார்வதி நாயர் மட்டும் இத்தகைய பணியுடன் கூடுதலாக மேடைப் பேச்சு திறமையும் வெளிப்படுத்தி அனைவரையும் கவர்ந்ததால், இனி அவரை நடிகை என்ற அடையாளத்துடன் மட்டும் சுருக்கி கொள்ளாமல், ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் உத்வேகத்தை வழங்கும் தன்னம்பிக்கை பேச்சாளராக அடையாளப்படுத்த வேண்டும் என தோன்றியது.

சர்வதேச அளவிலான "டோஸ்ட்மாஸ்டர்" விருதை வென்ற நடிகை பார்வதி நாயருக்கு இணையத்தில் பாராட்டுகள் குவிந்து வருகிறது.

இதனிடையே நடிகை பார்வதி நாயர், சர்வதேச அளவில் பிரமிக்கத்தக்க அளவிலான பேச்சாளர்களையும், சாதனையாளர்களையும் உருவாக்கும் டெட்எக்ஸ் (TEDx) என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் நடைபெறும் பேச்சரங்களில், பல முறை கௌரவ பேச்சாளராக கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டவர் என்பதும், அதில் ஒரு முறை அவர்களின் அழைப்பை ஏற்று, தன்னுடைய சுருக்கமும், வீரியமும், ஆழமும் கொண்ட பேச்சால் அனைவரையும் வியக்கவைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ரொறன்ரோர தமிழ் சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படத்திற்கான விருதை வென்ற அமுதவாணனின் "கோட்டா"




இயக்குனர் அமுதவாணனின் இயக்கத்தில் 2020ஆம் ஆண்டு தீபாவளி முடிந்த ஒரு வாரத்தில் வெளியான கோட்டா திரைப்படம் பல்வேறு சர்வதேச விருதுகளை குவித்தது.

அப்படம் வெளியான போது திரையரங்குகளில் மிகுந்த வரவேற்பையும் ரசிகர்களையும் பெற்றுக் கொடுத்தது. மேலும் சிறந்த விமர்சனங்களையும் பெற்றிருந்தது. இந்த படத்தின் முதல் பார்வை போஸ்டர் மற்றும் ட்ரெய்லரை சினிமா மற்றும் விளையாட்டுத் துறையில் உள்ள பல பிரபலங்கள் வெளியிட்டிருந்தார்கள்.

அத்துடன் கோட்டா திரைப்படத்தின் பயணம் நின்று விடவில்லை. இன்றைய தேதி வரை சுமார் 64 சர்வதேச விருதுகளை குவித்துள்ளது. இதன் பிறகும் இன்னும் பல விருதுகளை குவிக்கும் என்று படக்குழுவினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.




அதில் முக்கிய விருதாக டொரன்டோ தமிழ் சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படமாக விருதை வென்றுள்ளது. இந்நிலையில், கோட்டா திரைப்படம் 16 விருதுகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் தொடர்பு: தியாகு

# "கனடாவின் 'பைரவி' நுண்கலைக் கூடத்தின் இசை சார்ந்த, மனித நேயம் சார்ந்த பணிகள் மெச்சத் தக்கவை""

## மாணவி பிரேமிக்கா ஜெயச்சந்திரனின் "ட்ரம்ஸ்" அரங்கேற்ற நிகழ்வில் "உதயன்" லோகேந்திரலிங்கம் புகழாரம்



"கனடாவில் மிக நீண்ட காலமாக இயங்கிவருகின்ற "பைரவி" நுண்கலைக் கூடத்தின் இசை சார்ந்த மற்றும் மனித நேயம் சார்ந்த பணிகள் மெச்சத் தக்கவை". அத்துடன் மேற்படி நிறுவனத்தின் அதிபர் கலைஞர் ஜெயச்சந்திரன் அவர்கள் இளம் கலைஞர்களுக்கு வழங்கும் சந்தர்ப்பங்கள் மிகவும் அதிகம். அது போன்றே இன்று நடைபெறும் பிரேமிகா ஜெயச்சந்திரன் என்னும் அவரது புதல்வியின் பிரேமிக்கா ஜெயச்சந்திரன் அவர்களின் "ட்ரம்ஸ்" வாத்திய அரங்கேற்ற நிகழ்வைப் பார்க்கின்றேன். தனது புதல்வின் இசைப் பயணத்திற்கு எப்போதும் ஆதரவு வழங்கும் நிறுவனத்தின் அதிபர் கலைஞர் ஜெயச்சந்திரன் அவர்கள் இந்த மேடையில் எத்தனை இளம் கலைஞர்களுக்கு மேடை வழங்கி அத்துடன் அவர்கள் அனைவரையும் கௌரவித்தும் உள்ளார்.



இவ்வாறு "பைரவி" நுண்கலைக் கல்லூரியின் மாணவியும் அதிபர் ஜெயச்சந்திரன் - சத்தியா தம்பதியின் புதல்வியுமாகிய பிரேமிக்கா ஜெயச்சந்திரன் அவர்களின் "ட்ரம்ஸ்" வாத்திய அரங்கேற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றியபோது "உதயன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் புகழாரம் சூட்டினார். மேற்படி நிகழ்ச்சிக்கு தொகுப்பாளராக சாந்தி பணியாற்றினார். மற்றுமொரு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ட்ரம்ஸ் கலை-ஞர் சுரேஸ் அவர்களும் அங்கு பிரேமிகா தொடர்பான பல கருத்துக்களைக் கூறிச் சென்றார்.



இன்று மதிய நேரத்தில் இந்த அரங்கேற்ற நிகழ்வு இடம் பெற்றாலும் பெற்றோர்கள் கலைஞர்கள் என பலரும் கலந்து கொண்டு செல்வி பிரேமிகாவை வாழ்த்திச் சென்றனர்.

### உதயன் வெள்ளிவிழாச் சிறப்பிதழ் தொடர்ச்சியாக உலகெங்கும் உள்ள கலை இலக்கிய மற்றும் ஊடக நண்பர்களுக்கு வழங்கப்பெறுகின்றன




அந்த வகையில் கனடாவில் கலை இலக்கியம் மற்றும் ஊடகத்துறையில் ஈடுபட்டு வருபவரும் "யுகம்" வானொலியின் நிறுவனருமான "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரனுக்கு உதயன் பிரதம ஆசிரியர், உதயன் வெள்ளிவிழாச் சிறப்பிதழ் ஒன்றை அவரது வானொலி நிலையத்தில் வழங்குவதைக் படத்தில் காணலாம்.




பாடசாலைக்குத் திரும்பும் பிள்ளைகளின் பாதுகாப்புக்காகக் குரல் கொடுங்கள்

பிள்ளைகளுக்குக்கு அது அவசியம்.

வகுப்பு அளவுகளைச் சிறிதாக்கவும், பாடசாலைக்குப் போய்வருவோருக்கு மேலும் பாதுகாப்பு வழங்கி நிலைமையை சீர் படுத்த எம்மால் முடியும்.

இன்னுமொரு வருடத்திற்கு தடங்கல்கள், மூடல்கள் அல்லது வலி மிகுந்த தொலைதூர, மற்றும் கலவை வகுப்புக்கள் ஆகியன எமக்குக் கட்டுப்படியாகாது.

- வகுப்பு அளவுகளை மேலும் சிறியதாக்குதல்
- காற்றோட்ட வசதிகளை மேம்படுத்துதல்
- பாடசாலைப் பணியாளர்களுக்குத் தடுப்பூசி போடுவதைக் கட்டாயமாக்குதல், தற்பொழுது பாடசாலைகுச் செல்லும் பட்டியலிலுள்ள பிள்ளைகளுக்கு கோவிட் தடுப்பூசி போடுதல்
- சிறப்புத் தேவைகள் உள்ள பிள்ளைகளுக்கு வகுப்பறையில் அதிக ஆதரவு
- மன ஆரோக்கியம், மற்றும் பொது ஆரோக்கியம் தொடர்பான விடயங்களில் ஆதரவு



Ontario NDP NPD de l'Ontario

# மெகா தடுப்பூசி முகாம்களுக்கு மக்கள் அமோக வரவேற்பு
# இனி வாரந்தோறும் சிறப்பு முகாம் நடத்த தமிழக அரசு முடிவு



**கொ**ரோனாவை தடுப்பதற்காக தமிழ்நாடு முழுவதும் செப். 12 அன்று மெகா தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தடுப்பூசி செலுத்தி வருகின்றனர்.

இதுபற்றி, சென்னை பெரும்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இலக்கு 20 லட்சம்

தடுப்பூசி மட்டுமே கொரோனா தொற்றை தடுக்க ஒரே தீர்வு என அனைவரும் உணர்ந்து இருக்கிறோம். தடுப்பூசி 2 தவணையும் செலுத்திக்கொண்டால் 97.5 சதவீதம் நோய் எதிர்ப்பு சக்தி உடலில் உருவாகும் என்று உயர் மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் வாரத்துக்கு ஒரு மெகா தடுப்பூசி முகாம் நடத்த வேண்டும் என்று முதல் - அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். அதன்படி, முதல்கட்ட மெகா தடுப்பூசி முகாம் அனைத்து மாவட்டங்களிலும் செப்டம்பர் 12-ம் தேதி நடைபெற்றது. இதன்மூலம், 40 ஆயிரம் தடுப்பூசி முகாம்களில் 20 லட்சம் பேருக்குதடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

"மக்களை தேடி மருத்துவம்" திட்டம் கடந்த மாதம் 5-ம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. இதுவரை இத்திட்டத்தில் 4.07 லட்சம் பேர் பயன்பெற்றுள்ளனர். இதன்மூலம் தினமும் 12 ஆயிரம் பேர் பயனடைகின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

இறையன்பு ஆய்வு

சென்னை மீனம்பாக்கம் ஜெயின் கல்லூரியில் நடைபெற்ற மெகா தடுப்பூசி முகாமில் தலைமைச் செயலாளர் இறையன்பு ஆய்வு மேற்கொண்டார். இதையடுத்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், தடுப்பூசி செலுத்திக் கொண்டால் மட்டுமே நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்க முடியும் என்கிற காரணத்தால் பெரிய அளவிலான தடுப்பூசி முகாம்கள் நடத்தப்படுகின்றன. அக்டோபர் மாத இறுதிக்குள் தடுப்பூசி முகாம்கள் அதிகப்படுத்தப்பட்டு, அதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

மதியத்திற்குள் பாதி இலக்கு எட்டியது

அன்று காலை 7 மணிக்கு 40 ஆயிரம் முகாம்களில் தொடங்கி, இரவு 7 மணி வரை 20 லட்சம் பேருக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், ஆறு மணிநேரத்தில் 11 லட்சம் பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

தலைநகர் சென்னையில் மட்டும் 1600 முகாம்கள் அமைக்கப்பட்டு, ஆதார் இல்லாதவர்களும் தடுப்பூசி செலுத்தி கொள்ளலாம் என்று சென்னை மாநகராட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

தடுப்பூசி முகாம்களுக்கு கிடைத்த வரவேற்பு பற்றி, சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது, "தமிழ்நாடு முழுவதும் இன்று மெகா தடுப்பூசி முகாம்கள் நடந்துவரும் நிலையில், பிற்பகல் 1 மணி வரை 6 மணி நேரத்தில் 11 லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. சிறப்பு தடுப்பூசி முகாமில் மதியம் 12 மணி வரை மட்டும் 7 லட்சத்தை 90 ஆயிரம் பொதுமக்கள் தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ளனர். அனைத்து மாவட்டங்களிலும் எதிர்பார்த்ததை விட அதிக அளவில் மக்கள் ஆர்வமாக வந்து தடுப்பூசி செலுத்திக்கொள்கின்றனர். இனிவரும் காலங்களில் வாரத்திற்கு ஒரு முறை சிறப்பு தடுப்பூசி முகாம்கள் நடத்த திட்டமிட்டிருக்கிறோம்





அதற்கு தேவையான தடுப்பூசிகளை ஒன்றிய அரசிடம் கேட்டுப் பெற முடிவு செய்துள்ளோம்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**- மணிராஜ், திருநெல்வேலி**


MONEY PROBLEMS?

பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CRP PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா

வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# செப்டம்பர் மாத எண்கணித பலன்கள்

## 7,16,25ஆம் தேதிகளில் பிறந்தவர்கள்

ஆடம்பரங்களை விரும்பாத இவர்கள் மிகவும் தூய்மையாகவே இருப்பார்கள். அணியும், ஆடையும், நடை, உடையும், பேச்சில் நிதானமும் முகத்தில் மலர்ச்சியும், தெளிவும், வசீகரமும், உண்டும். மனித குலத்திற்கு அப்பாற்பட்ட மதிநுட்பமான விசயங்களை அறிந்து உலகிற்கு கொண்டு வருபவர்களும் இவர்களே. நியாயமாக இருந்தால் அதை தெரிவிக்க தவறுவதில்லை. எதிலும் நீதியாகவும், நேர்மையாகவும் நடக்க விரும்பும் இவர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஏதேனும் கருத்து வேறுபாடு இருந்து கொண்டேயிருக்கும். 7,16,25 திகதிகளில் பிறந்திருந்தாலும், 0,2 என்ற முதல் எழுத்தில் பெயர் அமைந்தாலும் 7ஆம் எண்ணில் பெயர் எண் அமைந்து இருந்தாலும் அடங்காத பல அதிரடியான மாற்றங்களுடன் பல வருட கனவுகளை எல்லாம் கண் முன்னே நினைவாக நிரந்தரமாக நடக்க உள்ளது. இனி உங்கள் காட்டில் ஒரே மகிழ்ச்சி மழை தான்.

**பொருளாதாரம்:** சொல்லவா வேண்டும் கண் முன்னே பார்க்கத்தான் போகிறோமே. வங்கி இருப்புகள் குவிந்து கொண்டே இருக்கும். தொட்டது எல்லம் மளமளவென துவங்கப் போகிறது. எடுத்த காரியங்கள் எல்லாவற்றிலும் வெற்றியே, கொடுத்து மறந்து போன கடன் தொகையை எல்லாம் அவர்கள்களாகவே தேடி வந்து கொண்டு வந்து கொடுத்துப் போகும் நேரம் இது.

**மங்கள நிகழ்வுகள்:** இனி வீட்டில் மேளம், தாளம், டும்,டும் என மங்கள ஒலி மனதை கொள்ளை கொள்ளும் அளவிற்கு கேட்டுக் கொண்டேயிருக்கும். பாதியில் நின்று போன வரன்கள் வரிசை கட்டி நிற்கப் போகிறார்கள். செலக்ட் செய்வதில் செய்வதில் பெற்றோர்கள் தடுமாற நேரிடலாம். கவனத்துடன் செயல்பட்டு மாப்பிள்ளையை தேர்ந்தெடுங்கள், மழலைக்காக ஏங்கிய பலர் நிம்மதியடைவர். விரைவில் மனம் மகிழும் படி நடந்தேறும்.

**உடல்நலம்:** மனதும், உடம்பும் ஏகாந்த நிலையில் இருக்கும். விரும்பியபடி ஒத்துழைக்கும், பெற்றோர்கள், குழந்தைகள் நலமும் அப்படித்தான் விரட்டி வந்த பல நாள் வியாபாரிகள் எல்லாம் துரத்தி அடித்து விடுவீர்கள். இயற்கை மருந்துகளில் அதிக நாட்டம் கொள்வீர்கள். வலிமை அதிகரிக்கும். மனோ சக்தியில் மூலம் பல சக்திகளை பெறுவீர்கள். மொத்தத்தில் மகிழ்ச்சியை மனத்திற்குள்ளும், புறமும் அனுபவிக்கும் காலம் இதுதான்.

**தொழில் அதிபர்கள்:** ஏற்றுமதியாளர்களுக்கு மெகா ஏற்றமான காலம் இந்த மாதம். வாசனை திரவியங்கள், உணவு தானியங்கள், எலக்ட்ரானிக்ஸ், எலக்ட்ரிகல்ஸ், ஸ்டேசனரி தயாரிப்புகள் ஆபரண உற்பத்தியாளர்கள், இனிப்பு பொருட்கள், பிராண்ட உணவகங்கள், நட்சத்திர அந்தஸ்து ஓட்டல்கள் இவைகள் மூலம் அதிரடியான மாற்றங்கள் பெற்று விருப்பம் போல உயர்வுகளைப் பெற்று மகிழ்வதுடன் வங்கிகளின் செல்லப் பிள்ளையாக மாறி வேண்டுமளவிற்கு கடன் தொகையை கை நிறைய பெற்று உயர்விற்கு வழிகாட்டும் உன்னதமாக காலமாக அமைந்திடும்.

**வியாபாரிகள்:** உணவுப் பொருட்கள், விற்பனை, இரும்பு, உதிரிப்பொருட்கள், பேப்பர், எழுது பொருட்கள், பால் பொருட்கள், இனிப்பகங்கள், சைவ உணவகங்கள் சகட்டு மேனிக்கு லாபத்தை குவிக்கப் போகிறார்கள். கேட்ட இடத்தில் பணம் வந்து சேரும். அரசாங்க ஆதரவும் அதிஸ்டத்திற்கு வழிகாட்டும். சாலை ஓர, சிறு வணிகர்கள் வசந்த காலத்தை கண்ட கூடாகக் காண்பார்கள்.

**அரசியல்வாதிகள்:** மக்கள் செல்வாக்கு மிதமிஞ்சி வந்து மகிழ்வூட்டும், பொதுக் காரியங்கள், என்றால் வீட்டு வேலையை கூட உதறிவிட்டு அங்கு சென்று நிற்பீர்கள். தலைமை மிகவும் அன்புடன் தங்களை நடத்துவது பெருமையாக இருக்கும்.

**கலைஞர்கள்:** திரைப்பட கலைஞர்கள் தங்கள் திறமையை நிரூபிக்க ஏற்ற காலம் இது. ஆடை வடிவமைப்போர் ஆச்சரியம் அடையும் வகையில் பொருளாதாரம் உயரும். தொலைக்காட்சி துறையினர் தொடர்ந்து மெகா தொடர்களின் வாய்ப்புகளும், ஊதிய மாற்ற உயர்வுகளும் பெறுவார்கள். ஓவியம், கட்டிடம், சிற்பக் கலைஞர்கள், தங்கள் திறமைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு சென்று பாராட்டு பெறுவார்கள்.

**பெண்கள்:** அரசாங்கம், தனியார் துறையில் பணிபுரியும் மகளிர் மனம் மகிழும்படி எல்லா காரியங்களும் தடையின்றி நடந்தேறும். பூர்வீகச் சொத்துக்கள் வந்து சேரும். புகுந்த வீட்டில் புகழும், செல்வாக்கும், பெரியவர்களின் கனிவும் நிச்சயம் கிடைத்து மகிழ்வீர்கள்.

**பணியாளர்கள்:** கல்வி நிறுவனப் பணியாளர்கள், அரச அதிகாரிகள், விவசாய ஆராய்ச்சிப் பிரிவினர், வானியல் பிரிவினர், அந்தஸ்து ஓட்டல் பணியாளர், இரும்பு, வாகன, எண்ணெய் உற்பத்திப் பிரிவினர், எதிர்பார்த்த வகையில் நினைத்து கூட பார்க்க இயலாத வருமானத்தைப் பெற போகிறார்கள். பட்ட கடன்களை அடைத்து மனதளவில் மகிழ்வை பெறுவார்கள்.

**மாணவர்கள்:** பொது மருத்துவம், விவசாய ஆராய்ச்சி மாணவர்கள், ஃபேஷன் டிசைன் பிரிவினர், விலங்கியல், எலக்ட்ரானிக்ஸ், துறையினர் கடந்த கால நிலுவைகள் ஆன்லைனிலேயே முடித்து சான்றிதழ் எளிதில் பெற்று மகிழும் நேரம் இது. இனிமேல் 'அரியர்' என்ற நிலை வராது. நல்லதே நடக்கும்.

## 8,17,26ஆம் தேதிகளில் பிறந்தவர்கள்

8ஆம் எண்: எப்பொழுதும் பிறருக்கு கட்டளையிடும் சக்தி படைத்த இவர்களுக்கு அடிச்சா இப்படி அடிக்கணும் யோகம் என்ற அளவிற்கு புகுந்து விளையாடப் போகுது நினைத்தது, நினைக்காதது என ஒரே குஷிதான் இந்த மாதம் முழுக்கு இவர்களை கண்டுப் பயப்படுவதை தவிர்த்து தங்களுடன் இணைந்து பணிபுரிய வைத்தால் நீரில் எந்த நிறத்தை கரைத்தாலும் அதே நிறத்தை காட்டுவதுபோல தங்களுடன் நெருங்கி உங்களுக்காகவே உழைத்து உயரத்திற்கு கொண்டு வரும் இவர்களால் தான் எட்டு திசைகளும் பெருமை அடைகிறது எனலாம். இந்த 8,17,26திகதிகளில் பிறந்தவர்களும் P,F ஐ பெயரின் முதல் எழுத்தாக பெற்றவர்களும், பெயர் எண் 8இல் அமைந்தவர்களும் இந்த 2021 ஐ கரும்பாக சுவைக்கலாம். இந்த மாதம் நடக்கும் எல்லாம் இனிப்பாகவே நடைபெறும்.

**பொருளாதாரம்:** நடத்தும் தொழில்கள் எல்லாம் பெருகி உயர்வடையும். தொடங்கி பாதியில் நின்றுபோன பணிகளெல்லாம் பரபரப்பாக இயங்க உள்ளது. வங்கி இருப்புகள் மிகப்பெரிய வளம் பெறப் போகிறது. தட்டுத் தடுமாறி வாங்கிய கடன்களை எல்லாம் முழுக்க அடைத்துவிட்டு பெருமூச்சு விடுவீர்கள். குடும்பத்தாருடன் அயலூர் பயணங்கள் சென்று மட்டற்ற மகிழ்வு பெறுவர்.

மங்கள் நிகழ்வுகள்: திருமணங்கள் திடீரென நிச்சயிக்கப்படும். பெண் மற்றும் ஆண் குழந்தைகளால் சில வகையில் மன இறுக்கத்தை அடையலாம். காதலர்கள் திருமணம் வரை செல்வர். நீண்ட நாள் மழலை குறை நிவர்த்தியாகும் காலம். தந்தையார் வழி உறவுகளால் உதாசீனப்படுத்தப்பட்டாலும் வெற்றி உங்களுடையதாகவே அமைந்திடும். புதுமனை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. பழைய வாகனம் மாறி பளிச்சென்று புதிய வாகனம் வந்து புகழையும் பெருமையையும் ஏற்படுத்தும்.

**உடல் நலம்:** உடல் நிலை உயர்வாக செயல்படும். மகிழ்வும், சுறுசுறுப்பும் கூடுதல் பலம் தரும். தாய், தந்தையர் நலம் காக்கப்பட வேண்டும். நீண்ட நாள் தங்களை பதம் பார்த்த பல 'வலி'கள், பல வழிகள் மூலம் பறந்தோடி விடும். வீட்டில் உள்ளோர் அனைவரும் நல்ல நலத்துடன் இருப்பது மேலும் உரமூட்டும் தங்கள் உடம்பையும், மனதையும்.

**தொழில் அதிபர்கள்:** போட்டி, பொறாமை, இவைகளெல்லாம் காணாமல் கரைந்து ஓடி விடும். என்னவெல்லாம் புதுமைகளை புகுத்தினாலும் தொழில் துறையில் அவையெல்லாம் பன் மடங்கு வெற்றியாகவே வந்து மகிழ்விக்கும். குறிப்பாக கல்லூரி நிர்வாகிகள், திரைப்படம், தொலைக்காட்சி துறையினர், பெட்ரோலியம், சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள், பிளாஸ்டிக், இயந்திரம், உணவக உற்பத்தி சாலைகள் போன்ற துறை சார்ந்த முதலீட்டாளர்கள் தொடர்ந்து முன்னிலை வகித்து அற்புதமான முறையில் ஆதாயத்தை அள்ளிக் குவிப்பாங்க இந்த மாதம்.



எண் கணித நிபுணர்: Dr. JNS.செல்வன், Phd.

**வியாபாரிகள்:** எந்த போட்டி, பொறாமைகளும், பக்கத்து கடைக்காரர்களாலும் எதுவும் செய்யமுடியாது. கூட்டம் உங்கள் பக்கம்தான். வியாபாரம் பன் மடங்கு பெருக உள்ளது. வெளிவட்டார பழக்கங்கள் மூலம் பொருட்களை எளிதில் சந்தைப்படுத்தி விடுவீர்கள். அள்ளிக் கொண்டு போகலாம். குவியும் பணத்தை, நல்வாய்ப்புகள் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் வளர்ந்து கொண்டே இருக்கும். மாதம் முழுக்க மகா யோகம்தான்.

**பணியாளர்கள்:** பணியாற்றும் நிறுவனத்தில் உழைப்பிற்கு அதிகமான ஊதியம், கேட்ட கடன் தொகைகளை அள்ளி வழங்கும் அதிகாரிகள் எதிர்பாராத பதவி உயர்வு, வீடு, வாகன, சுயகடன் தொகைகள் எல்லாவும் ஒரு சேர வந்து கணக்கு, வழக்கு பார்க்க முடியாத அளவிற்கு கை நிறைந்து வழியும் பொருளாதார நிலை அதிரடி மாற்றம்தான் உங்களுக்கு.

**அரசியல்வாதிகள்:** யாரும் எதிர்பாராத பதவிகள் தேடி வரப் போகிறது. எதற்கெடுத்தாலும் தலைமை உங்கள் ஆலோசனைகளை கேட்டு செயல்படப் போகிறது. ஏற்கனவே இருந்து வந்த வட்டம், கிளைகளை எல்லாம் கடந்து மாவட்டம் என்ற நிலைக்கு பதவிகளை கொண்டு வரப்போகிறது. எல்லாம் நேரம் காலம்தான் என முணுமுணுக்கப் போகிறார்கள். கூடவே இருந்து குழிபறிப்பார்கள். அவர்களையும் சமாளிக்கும் திறமையில் நீங்கள் அசகாயசூரர்கள்தான். விரும்பிய முன்னேற்றம் வெகுவிரைவில் என்பதை ஊரே அறியப் போகிறது.

**கலைஞர்கள்:** புதிய வாய்ப்புகளும், புகழும், அதிபர்களின் ஆதரவும் ஒரே நாளில் எல்லோருக்கும் தெரியும் அளவிற்கு வெளிக்காட்டப்படும். பாக்கிகள் எல்லாம் பறந்தேடி வந்து பணப்புழக்கத்தை பல வழிகளில் தரப்போகிறது. எதை எடுப்பது, எதை விடுவது என தடுமாறும் அளவிற்கு பட அதிபர்கள் வாய்ப்பை வழங்கி விடப்போவதால் தடுமாற்றத்தில் திக்கு முக்காடிப் போவீர்கள்.

**பெண்கள்:** ஏற்கனவே பேசி விட்டு பேசாமல் இருந்த வரன் வீட்டார்கள் தங்கள் வீட்டருகே நிற்கப்போகிறார்கள் வரன் கேட்டு. யாரைத் தேர்ந்தெடுப்பது என குழப்பமடைவீர்கள். திருமணம் ஆன பெண்கள் குழந்தைகளால் மட்டற்ற மகிழ்ச்சியை மனம் குளிர அனுபவிக்கப் போறாங்க. பூர்வீக சொத்துக்களும், பண பலனை அதிகரிக்கப் போகிறது. வலிமையான மன நிலையை பெற்று மகிழ்வீர்கள்.

மாணவர்கள்: உயர் கல்வி மூலம் மேலும் தனது நிலையை உயர்த்திக் கொள்வீர்கள். எந்த தடையும் இன்றி கல்வி பயணம் கட கடவென கடந்தோடும். கற்று முடித்த கணினி, கெமிக்கல், ஆசிரியர், ஆடிட்டர், சிவில், கலைக்கல்வி மாணவர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் வந்தே விட்டது எனலாம். நில்ல முயற்சியாளர்களுக்கு நாடு போற்றும் அளவிற்கு புகழ் உண்டு.

## 9,18,27ஆம் தேதிகளில் பிறந்தவர்கள்

முகமலர்ச்சியுடன் கூடிய அமைதியான வெளித்தோற்றம் அகத்தில் எப்பொழுதும் ஒரு போராட்ட தேடுதல், ராஜதந்திரம், மெஜஸ்ட்டிக்கான தோற்றம், வார்த்தைகளில் உஷ்ணம், வகை, வகையான உணவு பதார்த்தங்களில் நாட்டம் தேசியப் பற்று, அடுத்தவரிடம் சச்சரவுகளை ஏற்படுத்திக் கொள்வதில் விருப்பம், எதிரிகளிடமும் நட்புக் கொண்டு தக்க சமயத்தில் அவர்களே மாட்டிக்கொள்ளும் படி செய்து விடுவார்கள். மொத்தத்தில் எல்லா விசயங்களும் இவர்களுக்கு சாதகமாகவே நடக்க வேண்டும். இல்லையேல் நடத்திக் கொள்வார்கள். இந்த 9,18,27ஆம் திகதிகளில் பிறந்தவர்களும் 9ஆம் எண்ணில் பெயர் எண் அமைந்தவர்களும், இவ்வளவு வல்லமைகளை தன்னகத்தே கொண்ட இவர்கள் இந்த மாதம் பிறரிடம் மிகவும் அடக்கத்துடன் நடந்து கொண்டால் வம்புகள் எல்லாம் வந்த வழியே ஓடிவிடும்.

பொருளாதாரம்: விரும்பியபடி ஏகபோகமாக செலவழிக்க இயலாமல் தடுமாற்றம் காண்பர். கொடுத்தது வராது. கேட்டதும் வம்பு செய்யும், கையிருப்புகளும் கரைந்து போகும், போட்டு வைத்த பொருள் வரவு திட்டங்களில் ஏதேனும் ஒன்று தடையை ஏற்படுத்தலாம். கல்வி நிறுவனங்கள் வைத்திருப்போர் நல்ல பலன் காணலாம். மருந்து கம்பெனிகளாலும் வருமானம் உண்டு. புதிய கட்டிடங்கள், ஏற்றுமதி, இறக்குமதி மூலம் வருமானம் அதிகரிக்கும்.

மங்கள நிகழ்வுகள்: தாய், தந்தையரின் மனத்திற்கேற்ற வகையில் சொந்தமில்லா பந்தங்கள் மூலம் வரன்கள் கிடைக்கப்பெறுவர். தக்க நேரத்தில் சகோதர, சகோதரிகளால் தர்க்கங்கள் ஏற்படலாம் கவனம். விட்டுக் கொடுத்து போவதே மேலானது. நெடுங்கால காதல் ஜோடிகள் இந்தா, அந்தா என்று இழுபறியில் இருந்து தங்களின் திருமண திட்டங்கள் மீண்டும் தொலைக்காட்சி தொடர் போல இழுபறியிலேயே முடியும்.

**உடல் நலம்:** வலிமையும், பலமும் கொண்டவன் நானே என காட்டிக் கொண்ட நீங்கள் சற்று சோர்வுறுவது தேவையே இல்லை. எல்லா நிகழ்வுகளுக்கும் பிரதானமானது மனமே. திடமனதுடன் செயல்படுங்கள். நிச்சயமாக துணிந்தவனுக்கு.... இந்த முதமொழியை செயல்படுத்துங்கள். காட்டு ராஜாவை (சிங்கம்) போன்று கர்ஜிக்கலாம். தாய், தந்தையர் நலம் உயர்ந்து காணப்படும். வறுத்தது, பொரித்தது, பிரட்டல், திரக்கல் என்று வகைகளை தவிர்ப்பதே வயிற்றுக்கு நீங்கள் செய்யும் நல்ல விசயம்.

**தொழில் அதிபர்கள்:** இரும்பு உற்பத்தி, கமிஷன் துறை, எலக்ட்ரானிக்ஸ் உற்பத்தியாளர்கள், உலகளாவிய டிராவல்ஸ், ஏற்றுமதி செய்வோர் எதிர்பார்த்த வகையில் விருப்பம் போல் பண வரவுகளால் பெற்றாலும் அதற்கேற்ற வகையில் செலவுகளும் செய்ய நேரிடும். குறிப்பாக கட்டிடம் கட்டி விற்கும் ரியால்ட்டர்ஸ், மருந்து உற்பத்தியாளர்கள், விவசாய துறையினர், கலைத்துறையினர் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும்.

**வியாபாரிகள்:** ஒருநாள் போல் இருக்காது எல்லா நாட்களும் செலவுகளை கட்டுக்குள் கொண்டு வாருங்கள். வருமானம் குறைந்தாலும் உறுதியான தங்கள் நிலையிலிருந்து இறங்காமல் கடமை உணர்வுடன் செயல்படுங்கள். ஏற்ற, இறக்கங்கள் இயல்பாமை, அரசாங்கள், ரியல் எஸ்டேட் துறையினர், அழகு சாதன விற்பனையாளர்கள் எதிர்பாராத திடீர் செல்வுகளை எதிர்கொள்ள நேரிடும். வருமுன் காப்பதற்காகவே இவைகள் வலியுறுத்தப்படுகிறது.

**அரசியல்வாதிகள்:** பெரும் பதவிகளை நோக்கிக் காத்துக் கொண்டிருந்தவர்கள், இப்பொழுது இருப்பதே போதும் என்ற வகையில் தலைமைக்கும், உங்களுக்கும் முடிச்சுப்போட்டு கூட்டத்தினரால் மனம் நோகும். கவலை வேண்டாம் நிலைமை விரைவில் மாறும்.

**கலைஞர்கள்:** கடுமையான தங்கள் உழைப்பின் மூலமே இந்த மாதத்தை தள்ள நேரிடும். ஆசை வார்த்தைகளை அள்ளி இறைத்து இருக்கும் பணத்தையும் கிள்ளி எடுத்துப் போக ஒரு கூட்டமே பின்னால் தொடரும் எச்சரிக்கை. புதிய ஒப்பந்தங்கள் வரும் போது எதுவானாலும் ஏற்றுக் கொள்ளுங்கள்.

**பெண்கள்:** வீட்டுப் பிரச்சினைகளில் இருந்து விடுபட்டாலும், அக்கம், பக்கம், அக்கா, தங்கை என யாராவது வம்பிழுப்பதில் அதிக ஆர்வத்துடன் வருவார்கள். மாட்டிக்கொள்ள வேண்டாம். கணவர் தரிசனம் காட்டினாலும், மாமனார், மாமியார் வழக்கம் போல அவர்களுக்குண்டான கெத்து காண்பிப்பார்கள். சற்று அடங்கி போங்கள்.

**மாணவர்கள்:** முறையான பயிற்சிகள் மூலமும், நல்ல தேடுதல்கள் மூலமும் வெற்றியை தன்னகத்தே திருப்ப முடியும். விளையாட்டில் அதிக ஆர்வம் ஏற்படலாம். பொறியியல், மருத்துவம், கல்வி முடிந்தவர்களுக்கு வேலை உறுதி.

# கடந்தவையும் கடப்பவையும் (2)

- உமா மோகன் -

சொப்பர் சைக்கிளில்
சுப்பராக ஓடிச்சென்று
பொலிகண்டியில் நின்றுதான் - பாடசாலை
வசு வண்டி எடுப்பதுண்டு - அது

அந்தக்காலம் கெடுபிடிகள் எதுவுமே
அற்ற காலம்
ஆறாம் வகுப்பில் நான் கற்ற காலம்

அழகிய பருத்தித்துறை ஊரில் - என்றும்
பெருமையுடன் திகழ்வதாம்
பெண்கள் உயர்தரப் பாடசாலை
கண்களுக்கு விருந்தாகும் அழகிய சூழல் அது

நிறைந்த சவுக்கு மரம்
குறைவில்லா அலரி மரம்
தெவிட்டாத முத்தைத் தரும் கத்தேக்கு மரத்தோடு
பசிய வண்ணப் புற் தரைக்கும் குறைவில்லை ஆங்கே

முன்னுக்குப் பெருங்கடல்
என்னாளும் குளிர் காற்று
அண்டையில் துறைமுகம் - அங்கு
எண்டைக்கும் சுறுசுறுப்பு

பக்கத்தில் அழகிய வாடிவீடு - அங்கு
அக்கால வெள்ளைக்காரர் தங்கிப் போவர் - அன்றைய
வெள்ளைக்காரரின் உல்லாச இருப்பிடம் - பின்னாளில்
கொள்ளைக்காரரின் பொல்லாத வசிப்பிடம் ஆனது

அதன் பின்தான் ஆபத்தும் தொடர்ந்தது

அழுத்தும் குண்டுகள் அவரைத் துரத்தவே
கழுத்துப் பிடியாய் எம்மையும் பிடித்தனர்
அவரது வாகனங்கள் பாலம்மேல் பவனி போக - பணயமாய்
எமது பேரூந்தை இடையிலே நகர்த்தினர்

திக்கத்துப் பாலத்தைக் கடக்கும் வேளை - மனம்
பக்குப் பக்கென்றே அடித்துக்கொள்ளும்
அழுத்துவோர் அழுத்தியை அழுத்தவில்லை அன்று - அதனால்
எழுத்திலே எழுதுகிறேன் என்கதையை இன்று ........

அன்று அழுத்தவில்லை ஆனாலும்
அன்றோடு நான் இழந்தவை

அழகிய அவ் வளாகத்துக் கல்வி - அங்கு
பழகிய என் ஆருயிர் நண்பி - அவளுடன்
நான் கொண்ட அந்த அழகான நட்பு
அந் நாளில் நாம் செய்த பொன்னான குறும்பு

பரந்துபட்ட வெட்டை வெளி. அதைச் சுற்றிவரப்
பெரும் சுவர்கள் - அங்கு அடுக்கடுக்காய் வகுப்பறைகள்.
வகுப்பறையின் முன்னறலிலே
பசும் புற் தரை - பச்சைப் பஞ்சு மெத்தை விரித்ததுபோல் - அங்கு

மத்தியான வேளையிலே குழுக் குழுவாய் அமர்ந்திருந்து
மெத்த மகிழ்வுடனே பகிர்ந்து நாம் உண்ணுவது - பின்
படக்கதைகள் சொல்லுவது
பாட்டுப்பாடி ஆடுவது

அயலிலுள்ள ஹாட்லி அண்ணாமாரின் வெட்டையை எட்டிப்பார்ப்பது
அடுத்த பக்கப் பிள்ளையாரை
அங்கிருந்தே இரசிப்பது

காஞ்சோண்டி இலை புடுங்கி ஓடி ஓடிப் பூசுவது
மிஸ் மானின் நண்பி முன்னே முகம் தாழ்த்தி நிற்பது என - அன்று
அத்தனையும் மகிழ்வுதான் - ஆனாலும்
மொத்தமாக அங்கிருந்து அனுபவிக்க முடியாமல் போனதன்று.

இவை பள்ளி உள்ளுக்குள் அன்றுடன் நான் இழந்தவை - ஆனால்
வெளியில்..........

(தொடரும்)

# உலகில் இயற்கையைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்ட இலட்சக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டமைக்கு யார் பொறுப்பாளிகள்?

- சத்தியன் (கனடா)



இதுவரையில் இயற்கையைப் பாதுகாக்கும் முயற்சியில் உலகில் இலட்சக் கணக்கானவர்கள் கொல்லப்பட்டமைக்கு யார் பொறுப்பாளிகள்? என்ற கேள்வியை நாம் முன்வைத்தால் அதற்கு பதில் உலகெங்கும் உள்ள ஆட்சியாளர்களும் அரசாங்கங்களும். அதிகாரிகளுமே என்று பதில் சொல்லுவதற்கு எவருமே முன்வர மாட்டார்கள். ஏனென்றார் அவர்களும் கொல்லப்பட்டு விடு வார்கள் என்ற பயமே இதற்கு காரணம்.

உலகில் உயிர்கள் படைக்கப்பட்டபோதே, அவற்றின் வாழ்வுக்காக இயற்கை வளங்களும் சேர்த்தே படைக்கப்பட்டுள்ளன. இயற்கை வளங்களோடே அத்தனை உயிரினங்களின் வாழ்க்கையும் சிறப்பாக நடைபெற்று வந்தது. மனிதர்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள். இயற்கை வளங்களைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். காலம் வேகமாக மாறியது. தனிமனித உடைமைப் போக்குகள் உருவானது. அறிவியலின் ஆதிக்கம் பெருகியது. விளைவு, மனிதருக்கு மட்டுமே பூமி என்ற நிலை உருவானது. அதுவும் மாறி, அறிவியல் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மட்டுமே இயற்கை வளம் யாவும் சொந்தம் என்ற நிலை உருவாகியுள்ளது.

இலங்கை இந்தியா மற்றும் தென்னாசிய நாடுகளிலும் இயற்கையின் அடையாளங்களாகவும் பொக்கிசமாகும் விளங்கும் மரங்கள் செடிகள் கொடிகள் பாறைகள் ஆறுகள் குளங்கள் ஆகியவற்றை அழிக்கின்றார்கள். ஆனால் நாமோ அவை தவறான விடயங்கள் என்பதை கவனிக்கத் தவறுகின்றோம்.

மனிதர்களின் பேராசையால் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு, பிற உயிரினங்கள் யாவும் பாதிப்படைந்து வருகின்றன. நீர், நிலம், ஆகாயம், வாயு என நான்கு பூதங்களும் மாசடைந்துவிட்டன. சீக்கிரமே, வாழ முடியாத இடமாக பூமி ஆகிவிடுமோ என்ற நிலை உருவாகி வருகிறது. வனங்கள் அழிந்து, நதிகள் வறண்டு, மலைகள் மறைந்து, கடல் நீர் உயர்ந்துபோன நிலையில், இனி எத்தனை தலைமுறைகள் இந்த பூமியைப் பார்க்குமோ என்ற கவலை எல்லோருக்கும் இருந்துகொண்டே இருக்கிறது. உயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லாவற்றையும் இயற்கை தருகிறது. காடுகள், நுண்ணியிரிகள், ஆறுகள், ஏரிகள், கடற்பகுதிகள், மலைகள், மண் வளம், மேகங்கள், ஏன் ஒவ்வொரு மழைத்துளியும்கூட இயற்கையின் கொடைதான். இதில், ஒன்றை இழந்துகூட மனிதர்கள் வாழவே முடியாது. வாழ அவசியமான எல்லாவற்றையும் அழித்துவிட்டு யாரோடு, எதனோடு வாழப்போகிறார்களோ தெரியவில்லை.

இயற்கையை நேசிப்பது மட்டுமல்ல, அதைப் பாதுகாப்பதும் அவசியம். இது கடமை மட்டுமல்ல, பொறுப்பும்கூட. உங்கள் தலைமுறைக்கு சொத்து சேர்ப்பதைப்போல, இயற்கையையும் பாதுகாத்து சேர்த்துவையுங்கள். இயற்கை வளங்களின் இன்றியமையாமைகுறித்து மக்களிடையே விழிப்பு உணர்வை உண்டாக்க, ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 28-ம் நாள் உலக இயற்கை வளப் பாதுகாப்பு நாள் கடைபிடிக்கப்படுகிறது. இந்த நாளில், இயற்கையைப் பாதுகாக்க நம்மால் ஆனதைச் செய்வோம். அதுவே, இந்த நாளுக்கான நமது மரியாதை என்று சொல்லலாம்.

இவ்வாறு ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 28-ம் நாள் உலக இயற்கை வளப் பாதுகாப்பு நாள் கடைபிடிக்கப்படுகிறது என்பதை நாம் எழுத்து வடிவில் பார்த்தாலும் இவ்வாறான இயற்கையை அதன் எதிரிகளிடமிருந்து பாதுகாக்கும் முயற்சியில் இறங்கிய இலட்சக் கணக்காணவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்பதை சிலர் அறிகின்ற போது யார் அந்த எதிரிகள்? என்ற கேள்வியையும் முன்வைக்கின்றார்கள். இயற்கையை அழித்து பொருள் சேர்க்கும் திருட்டு முயற்சியில் இறங்குகின்றவர்களே இயற்கையின் எதிரிகள் என்று இனங்காணப்பட்டுள்ளார்கள்.

உலகில் இதுவரையிலும் கொல்லப்பட்டவர்கள் ஏராளம். ஆனால் இயற்கையைப் பாதுகாக்க வேண்டிய அரசாங்கங்கள் அந்த கொலைகளைத் தடுக்கவில்லை. காரணம் உலகெங்கும் ஆட்சியாளர்களில் பலரும் இயற்கையை அழித்து பணம் சம்பாதிக்கும் சமூக மற்றும் இயற்கை விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றார்கள்.



2020ஆம் ஆண்டில் உலகெங்கிலும் இயற்கையைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த 227 பேர் கொல்லப்பட்டதாக ஆய்வொன்று தகவல் அளித்துள்ளது. கொல்லப்பட்டவர்கள் காடுகள், இயற்கை வளங்கள் போன்றவற்றைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது கடுமையாகத் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டதாக "கிளோபல் விட்னஸ்" எனும் மனித உரிமைக் குழு நடத்திய ஆய்வு கூறியது. கொலம்பியாவில் பழங்குடியினருக்குச் சொந்தமான நிலம், காடுகள் அல்லது கோக்கோ பயிர்களை அழிவிலிருந்து காப்பாற்ற முயன்ற சுமார் 65 பேர் கொல்லப்பட்டனர்.

அதுபோன்ற காரணத்துக்காக உலகில் மிக அதிகமானோர் கொலம்பியாவில் கொல்லப்பட்டனர் என்று ஆய்வு கண்டறிந்தது. அதற்கு இரண்டாம் நிலையில் மெக்சிகோ உள்ளது. அங்கு 30 பேர், காடுகளைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது கொல்லப்பட்டனர்.

பிலிப்பைன்ஸில் அவ்வாறு கொல்லப்பட்டவர்கள் 29 பேர். அவர்கள் சுரங்கவேலைகள், மரம் வெட்டுதல், அணை கட்டும் திட்டம் ஆகியவற்றை நிறுத்தும் முயற்சியின்போது கொல்லப்பட்டதாக நம்பப்படுகிறது.

கால நிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் உடன்படிக்கை 2015 ஆம் ஆண்டு கைச்சாத்தானது தொடக்கம் ஒவ்வொரு வாரமும் சராசரியாக நான்கு இயற்கை ஆர்வலர்கள் கொல்லப்படுவதாக இந்த ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோன்று இலங்கை இந்தியா மற்றும் தென்னாசிய நாடுகளிலும் இயற்கையின் அடையாளங்களாகவும் பொக்கிசமாகும் விளங்கும் மரங்கள் செடிகள் கொடிகள் பாறைகள் ஆறுகள் குளங்கள் ஆகியவற்றை அழிக்கின்றார்கள். ஆனால் நாமோ அவை தவறான விடயங்கள் என்பதை கவனிக்கத் தவறுகின்றோம்.

# "அண்ணாவும் நானும்"

## சென்றவாரத் தொடர்ச்சி

அறிஞர் அண்ணா அவர்களின் (அகவை ஐம்பது) பொன்விழா நிகழ்வில் கவிஞர் கண்ணதாசன் எழுதிய "பொன் விழையா மன்னவனின் பொன்விழாவில் பூச்சொரிந்து வாழ்த்திடுவோம் வாழ்க அண்ணா!"

எனும் வாழ்த்துமாலையில் சில வரிகளை நினைவூட்டி எனது நினைவுகளைத் தொடர்கிறேன்.

கொஞ்சும் குரல் எனினும் அது:

**குமுறுங்குரல் அலவோ?**
**பஞ்சின் மொழி எனினும் அது**
**பண்பின் மொழி அலவோ?**
**துஞ்சுந் தமிழ் பொங்கும் வகை**
**சொன்னார் அவர் சொன்னார்!**
**அஞ்சும்பகை அலறும்படி**
**அண்ணா உரை சொன்னார்!**

**ஆண்டுக்கொரு புதுமை தரும்**
**அறிவுத் திருமாறன்!**
**ஆட்சிக்கொரு வழிகூறிடும்**
**அரசுக் கலைவாணன்!**
**மீண்டும் தமிழ் சூடிட**
**விரையும் படை வீரன்**
**மீட்சிக்கென வேல் தாங்கிய**
**வெற்றித் தமிழ் வேந்தன்!**



**செம்பொன் மணி யாரத் தொடு**
**செல்வம் பலதரலாம்**
**தம்பிப்படை யாவும்பல**
**தங்கத்திரள் தரலாம்**
**நம்பித்தமிழ் முறைபாடிய**
**நலமேநிறை அண்ணன்**
**தெம்புக்கது குறைவே! அவர்**
**திறனுக்கது சிறிதே!**

"தொலைந்துபோன வசந்தகாலம்", எனும் எனது நூலிருந்து, *15-09-1909* ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் திரு. நடராஜா முதலியார் - திருமதி. பங்காரு அம்மையார் தம்பதியினருக்கு அருந்தவப் புதல்வனாகவும் - தமிழ்மொழியின் காவலனாகவும் இப்பூமியில் அவதரித்தார் அறிஞர் அண்ணா. "...... அண்ணாவை வாசிக்கத் தொடங்கிய காலங்கள் எனது இளமைக் காலங்களாகும்.

முதலில் அண்ணா அவர்களைப் பற்றிய சில விபரங்களை வாசகர்களுக்குச் சுருக்கமாகத் தருகிறேன்.

*1949* ஆம் ஆண்டு தி.மு.க. எனும் மக்கள் அமைப்பை நிறுவியவர், அப்போது தி.மு.க. அரசியல் கட்சியாக உருப்பெறவில்லை. *29-04-1957* இல் முதன்முதல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையேற்று எதிர்க் கட்சித் தலைவரானார். *01-03-1967* இல் தமிழக சட்டமன்றத்தில் *138* தம்பிமார்களுடன் அண்ணா தமிழக முதல்வர் ஆனார். அண்ணா பெரிதும் விரும்பும் தமிழர் திருநாளாம் பொங்கல் நாளில் சட்டமன்றத்தில் சட்டபூர்வமாக (தமிழ்நாடு) பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்.

காஞ்சிபுரம், நடராஜா முதலியார் அண்ணாத்துரை எனும் (சி. என். அண்ணாத்துரை சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ பட்டதாரி. பின் பொருளியலில் முதுமானிப் பட்டம் பெற்றார். அவருடைய 58ஆவது வயதில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 'டாக்டர்' பட்டம் வழங்கிப் பெருமை கொள்கிறது.

அறிஞர். அண்ணா தமிழகத்தின் முதன்மைப் பேச்சாளராகத் திகழ்ந்தார். பேச்சிலும், எழுத்திலும் புதுமை பல செய்து மறுமலர்ச்சிக்கு வித்திட்டார். அவர் எழுத்தும் பேச்சும் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தின.

கலைகளில் சிறந்த காஞ்சியில் தோன்றி தமிழப்பாசறையாம் பச்சையப்பனில் பட்டம் பெற்றுத் தந்தை பெரியார் பகுத்தறிவு பள்ளியில் பயின்ற மாமனிதர். பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் புதிய தமிழகம் உருவாகக் கனவுகண்டவர். ஆற்றல் வாய்ந்த அவரது பேச்சும், எழுத்தும் தமிழ் உரைநடையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தின. அண்ணாவின் பாணி பலரால் இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது. மொழி முறுக்கேறியது. புதியடேதார் வகைப்பெற்றது. அண்ணா வழியினரின் பேச்சும், எழுத்தும் உரைநடை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தன.

அண்ணா அவர்கள் தமிழில் 'சௌமிய' ஆண்டில் பிறந்தவரானதால் 'சௌமியன்' என்ற புனைப்பெயரைச் சூட்டிக் கொண்டவர். மற்றும் 'சமதர்மன்', 'சமஷ்டி', 'ஒற்றன்', 'ஆணி', 'பரதன்', எனும் வெவ்வேறு பெயர்களில் எழுதியவராவர். ஒரே இரவில் இவரால் எழுதப்பெற்ற 'ஓர் இரவு' நாடகம் (பின்னாளில் திரைப்படமாயிற்று). 'கல்கி' அவர்களால் பாராட்டப்பெற்றதுடன், "தென்னாட்டின் பெர்னாட்ஷா' என்று அழைக்கப்பட்டார். இவருடைய திரைக்கதை, நாடக வசனங்களின் அறிமுகத்திற்குப் பின்பே தமிழ் சினிமா புதிய பாதையில் தன் பயணத்தை மேற்கொள்ளத் தொடங்கியது. பின் அவரைத் தொடர்ந்து வந்த கலைஞர் மு.கருணாநிதியின் உரை வீச்சுகளும் - எழுத்தும் புதிய உரமூட்டி வளர்த்தெடுத்தது.

சொற்பொழிவாளர் - எழுத்தாளர் - நூலாசிரியர் - நாடகாசிரியர் - இதழாளர் - சிந்தனையாளர் - கலைஞர் - எனப் பன்முகங்கொண்டு ஒப்பாரும் மிக்காருமின்றித் திகழ்நதார். முன் ஆயத்தம் எதுவுமின்றி, எந்தத் தலைப்பில் பேச்சென்றாலும் அருவிபோல் பொழியும் ஆற்றல் மிகுந்தவர்.

ஒருமுறை 'தலைப்பில்லை' எனும் தலைப்பையே தலைப்பாக மாற்றிப் பேசியவர். அண்ணாவின் 'ஆற்றோரம்' எனும் தலைப்பில் பேசிய மேடைப்பேச்சு உலகப் புகழ் வாய்ந்தது. தமிழ்மொழியில் பேசுவது போன்றே ஆங்கிலத்திலும் அடுக்குமொழி வைத்துப் பேசிப் பிரமிக்க வைப்பார்.

*1970*ஆம் ஆண்டு அண்ணாவின் முதலாவது ஆண்டு நினைவு நாள். *(02.02.1969* இல் அமரர் ஆனார்). அப்போது எனக்கு 23வயது. அண்ணா நினைவுநாள் தமிழகமெங்கும் உணர்ச்சியுடனும் எழுச்சியுடனும் நினைவுகூரப்பட்டது. எனக்குள் சொல்லமுடியாத உணர்வலைகள். பிரசித்தமான பின்புலங்கள் எதுவும் எனக்கில்லை.

காங்கேசன்துறை பொன்.கணேசமூர்த்தி எனும் என் வயதையொத்த தோழர் (பின்னாளில் விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய பணியில் ஈடுபட்டவர்) 'காங்கேசன்துறையில் இயங்கிவந்த 'இளந்தமிழர் மன்றம்' எனும் அமைப்பிலிருந்து வெளியேறிய சமயம், என்னுடன் இணைந்து 'தமிழ் கலை மன்றம்' எனும் அமைப்பை உருவாக்கிய நேரமது. 'தமிழ்க் கலை' மூலம் பேரறிஞர். அண்ணா நினைவு நாளைக் கொண்டாட ஏற்பாடாயிற்று. சுறுசுறுப்பாக இயங்கினேன். பின்னாளில் வட்டுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த அளவெட்டியூர் தா.திருநாவுக்கரசு - உடுப்பிட்டி மு.சிவசிதம்பரம் ஐயா (உப சபாநாயகர்) ஆசிரியரும், பொதுவுடமை வாதியுமான தலைவர் வி.பொன்னம்பலம் ஆகியோரைச் சிறப்பு சொற்பொழிவாளராக அழைந்திருந்தேன்.

அண்ணாவின் பால் பெருமதிப்புக் கொண்டவர்களான படியால் விருந்தினர்கள் யாவரும் மகிழ்ச்சியுடன் கலந்து பேருரைகள் ஆற்றினார். ஊறணி அந்தோணி சாமியார் தேவாலய முன்றலில் அண்ணா நினைவு நாள் பேச்சரங்கம் - இப்போது நினைத்தாலும் உள்ளம் சிலிர்க்கிறது.

என்னுடைய முதல் பொதுமேடைப் பேச்சும் சொல்வேந்தர் அண்ணாவின் நினைவுநாளில் இடம்பெற்றமை தொலையாத வசந்த நினைவாகும்!

**- வீணை மைந்தன்**

*மு காகவி பாரதி - நினைவு நூற்றாண்டில் (2021-1921) விரைவில் ஆரம்பமாகிறது.*
*தமிழ்ச் சினிமாவில் பாரதி பாடல்கள்......*
*(காட்சியும் விளக்கமும்)*



# மலேசியாவில் அண்ணா – 112ஆவது பிறந்த நாள் நினைவுகள்



## சோறு என்று சொன்னதற்காக வீட்டில் "திட்டு" வாங்கிய மலேசியத் தலைவர் திராவிட இயக்கத் தலைவர்களின் விமர்சனத்திற்கு ஆளான துன் சம்பந்தன் அறிஞர் அண்ணாவின் வருகையால் மலையகத்தில் எழுந்த தாக்கம் (அறிஞர் அண்ணாவுக்கு 2021 செப்.15, 112-ஆவது பிறந்த நாள்)

நக்கீரன்



கோலாலம்பூர், செப்.15:

அரசியல் மேடைகளில் மெல்லிய தென்றல் வீசுவதைப் போன்று திகழ்ந்த பேரறிஞர் அண்ணா இன்னும் ஒரு சில ஆண்டுகளுக்காவது வாழ்ந்திருந்தால் தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல இந்தியாவிற்தே ஒரு வழிகாட்டுத் தலைவராக விளங்கி இருப்பார். அத்துடன் வட இந்திய தலைவர்களே பாராட்டும் தென்னிந்தியத் தலைவராக உருமாறி இருப்பார் உயர்ந்திருப்பார் என்று தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத் தலைவரும் ஐநா மன்றத்தில் மலேசியப் பிரதிநிதியாக செயல்பட்டவருமான டான்ஸ்ரீ கே.ஆர். சோமசுந்தரம் அவர்கள், அறிஞர் அண்ணாவின் 112-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு அவரைப் பற்றிய நினைவுகளை பகிர்ந்து கொண்டார்.

அவர் தமிழக முதல்வரான பின் உடல் நலம் பாதிக்கப்பட்டு அமெரிக்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் அறிஞர் அண்ணாவையும் உடனிருந்த கே.ஏ. மதியழகனையும் அங்கு சந்தித்த விவரத்தை டான்ஸ்ரீ கே.ஆர். சோமா அவர்கள் பகிர்ந்து கொண்டது சுவாரசியமாக இருந்தது.

1967 மார்ச் 6-ஆம் நாளில் முதல்வராக பதவியேற்ற அண்ணா, அதற்கு ஏறக்குறைய ஈராண்டுகளுக்கு முன் மலேசியாவிற்கு வருகை தந்தபோது, மலேசியவாழ் தமிழ்ச் சமூகத்திலும் அரசியல் வட்டத்திலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தின.







அந்த நேரத்தில் பொதுப்பணி-அஞ்சல் துறை அமைச்சராக இருந்த துன் வீ.தி. சம்பந்தனார், இந்திய சமுதாயத்தை குறிப்பாக மலேசியத் தமிழர்களை அரசாங்கத்தில் பிரதிநிதித்த ஒரு தேசியவாதியாகவும் காங்கிரஸ் இயக்கவாதியாகவும் விளங்கினார். அதனாலோ என்னவோ அறிஞர் அண்ணாவை கடைசிவரை அரசியல் எதிரணிக்காரராகவே கருதிவிட்டார்.






ஒரு கட்டத்தில் அறிஞர் அண்ணாவின் மேன்மையையும் அரசியல் எல்லையைக் கடந்த அவரின் பன்முகப் பாங்கையும் தமிழ் இனத்திற்காகவும் மொழிக்காவும் அவர் பாடாற்றிய விதத்தையும் எண்ணிப்பார்த்த துன் சம்பந்தன், அண்ணாவின்மீது பற்றுகொள்ளத் தொடங்கினார். ஆனால், அந்த வேளையில் அண்ணா உயிருடன் இல்லை.

தமிழ் நாட்டிலும் இந்தியாவிலும் காங்கிரசிற்கு எதிராக அண்ணா அரசியல் புரிந்தார் என்பது உண்மைதான். அதற்காக, மலேசிய இந்தியர் காங்கிரசும் அறிஞர் அண்ணாவுடன் அரசியல் பகைமை கொண்டிருக்கத் தேவை இல்லை. அண்ணா ஜவஹர்லால் நேருவையே எதிர்த்தார் என்பதற்காக அதே நேருவால் தொடங்கி வைக்கப்பட்ட மலேசிய இந்தியர் காங்கிரஸ் இயக்கத்தை வழிநடத்திய துன் சம்பந்தனும் அண்ணாவை ஏற்காமல் இருந்தார் என்பது உண்மைதான்.


அதனால்தான், அவர் மலேசியாவிற்கு வருகை மேற்கொண்டிருந்த சமயத்தில் துன் சம்பந்தன் அவரைப் புறக்கணித்தார் என்று அந்த காலக்கட்டத்தில் அவதானிக்கப்பட்டது. குறிப்பாக "ஸ்டேடியாம் நெகாரா"வில் அண்ணா கலந்து கொண்டு ஆங்கில உரை ஆற்றுவார் அதில் துன் சம்பந்தனார் கலந்து கொண்டு தலைமை தாங்குவார் என்றெல்லாம் அறிவிப்பு செய்திருந்த நிலையில் கடைசியில் துன் சம்பந்தனுக்குப் பதிலாக ம.இ.கா. துணைத் தலைவர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.


நிகழ்ச்சி சிறப்பாக இருந்தாலும், அண்ணாவை சம்பந்தன் அலட்சியப்படுத்தி விட்டார் என்று அந்நாட்களில் எழுச்சியுடன் திகழ்ந்த மலேசியத் திராவிடர்க் கழகத்தினருக்கு சம்பந்தன்மிது வருத்தமும் கோபமும் எழுந்தன என்றும் மலாக்காவில் அரசுமுறை நிகழ்ச்சியில் அவசியம் கலந்து கொள்ள வேண்டி இருந்ததால் அண்ணாவின் நிகழ்ச்சிக்கு வரமுடியாமல் போனதாக சம்பந்தனார் தரப்பில் பின்னர் விளக்கம் அளிக்கப்பட்டதாகவும் இதன் தொடர்பில் மலேசிய திராவிய இயக்க மூத்தத் தலைவர் இரெ.சு. முத்தையா தெரிவித்தார்.











இத்தகைய அரசியல் மாச்சரியம், சங்கடத்தைத் தவிர பொதுவாக மலேசியத் தமிழர்கள் அண்ணாவை தேசிய அளவில் கொண்டாடி குதூகலித்தனர்.

அப்பொழுது, மலேசியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் அரசியல் ரீதியான பிணக்கு நிலவியது. மலேசிய தேசிய பாதுகாப்பு நிதியும் திரட்டப்பட்ட நேரம் அது. இந்த நிதிக்கு மலேசியத் தமிழர்கள் தாராளமாக நிதி அளிக்க வேண்டும் என்று பினாங்கில் நடைபெற்ற கூட்டத்தில் கேட்டுக் கொண்டார் அண்ணா.

தமிழகத்துடன் கலாச்சார-பண்பாட்டுத் தொடர்பை மட்டும் தற்காத்துக் கொண்டு இந்த மண்தான் உங்களுக்கெல்லாம் தாயகபூமி என்ற உணர்வுடன் தமிழர் அனைவரும் ஒன்றுபட்டு இங்கேயே வாழ வேண்டும் என்று அண்ணா வெளிப்படுத்திய தேசிய சிந்தனை யெல்லாம் துன் சம்பந்தனாரின் காதுகளை அப்போது எட்டவில்லை.

அண்ண கலந்து கொண்ட பினாங்குக் கூட்டத்தில் இன்னொரு சுவாரசிய சம்பவமும் இடம்பெற்றது. அதற்கு முன்னதாக, கோலாலம்பூர்க் கூட்டத்தில் அண்ணா ஆங்கிலத்தில் பேசினார் என்பதை அறிந்த பினாங்குவாழ் தமிழர்களும் அண்ணாவின் ஆங்கிலப் பேச்சைக் கேட்க ஆர்வம் தெரிவித்தனராம். இதைப் பொருட்படுத்தாத அண்ணா தமிழிலேயே பேசிக் கொண்டிருக்க, ஆங்கிலத்தில் பேசும்படி இடையிடையே குறுக்கீடுகள் தொடர்ந்த நிலையில், கோலாலம்பூர் உங்கள் நாட்டின் தலைநகரம் அங்கு நடைபெற்றக் கூட்டத்தில் தமிழை அறியாதவர்களும் கலந்து கொண்டதால் ஆங்கிலத்தின் பேச வேண்டிய தேவை எழுந்தது.

இங்கு அந்த நிலை இல்லை பேசும் நானும் சரி, கேட்கும் நீங்களும் சரி அனைவருமே தமிழர் என்பதால், இங்கு ஏன் ஆங்கிலம் என்று நயமாகக் கேட்டு தமிழிலேயே தன் உரையைத் தொடர்ந்தாராம் அண்ணா!

பேரறிஞர் அண்ணா மறைந்தபோது, 1969 பிப்ரவரி 4-ஆம் நாள் வெளிவந்த தமிழ் நாளேட்டின் அத்தனைப் பக்கங்களும் அண்ணாவைப் பற்றிய செய்திகளையே தாங்கி வந்ததால், இது குறித்த தகவல் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் வரை சென்றதாகவும் துன் சம்பந்தனிடம் விளக்கம் கேட்டறிந்ததாகவும் சொல்லப்படுகிறது.

கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் திராவிட இயக்க மறுமலர்ச்சி தொடங்கிய காலத்திலிருந்தே தமிழும் எழுச்சிபெறத் தொடர்ந்தது. அதற்கேற்ப ஏராளமான பருவ இதழ்கள் அங்கு வெளிவரத் தொடங்கின. அதன் தாக்கம் மலேசியாவிலும் எதிரொலித்தது.

இப்படிப்பட்ட நிலையில் அண்ணா வருகையின்போது தமிழ் எழுச்சி இன்னும் ஏகமாக எழுந்தது. நல்ல தமிழில் பேச வேண்டும் என்ற உணர்வு அன்றைய தலைவர்களிடமும் பொதுவாக அனைவரிடமும் ஏற்பட்டது. அப்படிப்பட்ட தாக்கத்திற்கு ஆளான டான்ஸ்ரீ க. குமரன், உண்மையிலேயே குமரனாக இருந்தபொழுது வீட்டில் "சோறு" என்று சொல்லி சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார்.

இதைக் கண்டு சினம் கொண்ட அவரின் பாட்டி, இத்தனைக் காலமும் சாதம் என்று சொல்லிவிட்டு, இப்பொழுது என்ன புதிதாக சோறு என்கிறாய் என்று கடிந்து கொண்டாராம். அண்ணா அவர்கள், மலேசியத் தமிழர்களிடம் எத்தகைய தாக்கத்தை யெல்லாம் ஏற்படுத்தினார் என்று ஏராளமான விவரத்தைப் பகிர்ந்து கொண்டார் அந்த மூத்த அரசியல்-சமூகத் தலைவர்.

பத்திரிகையாளர், இதழாளர், "ஹோம் லேண்ட்" என்னும் ஆங்கில இதழாசிரியர், பள்ளி ஆசிரியர், நாடக ஆசிரியர், நாடக நடிகர், திரைப்பட கதை ஆசிரியர், சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர், தமிழக முதல்வர் என்றெல்லாம் எத்தனையோ வடிவங்களை அண்ணா தன் வாழ்க்கைப் பயணத்தில் ஏற்றிருந்தாலும் அவரின் உரையும் அடுக்குமொழி நடையும்தான் உலகளாவியத் தமிழர்களை அவரின்பால் ஈர்த்தன.

அமெரிக்காவின் யேல் பல்கலைக்கழகத்தில் இருந்து கௌரவ "டாக்டர்" பட்டத்தைப் பெற்ற அமெரிக்கர் அல்லாத ஒரேத் தலைவர் அறிஞர் அண்ணா என்பது இன்னும் குறிப்பிடத்தக்கது.

அண்ணாவைப் பற்றி சொல்ல முனைந்தால் எண்ண மெல்லாம் விண்ணக அளவிற்கு விரியும்.

எது எவ்வாறாக இருந்தாலும், மறைந்து 52 ஆண்டுகள் ஆன நிலையிலும் அண்ணாவைப் பற்றிய சிந்தனை உலகத் தமிழர்தம் நெஞ்சங்களில் பதிந்து இருக்கிறதென்றால, அவர் வாழ்ந்த வாழ்க்கை அப்படி.

பிரதமர் ஆன நிலையிலும் புத்தகப் புழுவாகவே வாழ்வைத் தொடர்ந்த நேரு, ஒரு கட்டத்தில் அண்ணாவை வெறுத்தார் எதிர்த்தார் என்பதெல்லாம் உண்மைதான் எனினும் பின்னாளில் அதே நேரு அண்ணாவை வெகுவாகப் பாராட்டியதுடன் வியந்தும் புகழ்ந்தார்.

அண்ணா, தன்னைவிட பெரும் புத்தகப்புழுவாக இருக்கிறாரே என்று பளிச்சென சொன்னாராம் நேரு.

அப்படிப்பட்ட புத்தகப் புழுவான அண்ணா, ஒரு நாளில்கூட விடியலைக் கண்டதில்லை. பொடி உறிஞ்சிய மூக்கோடு நள்ளிரவைத் தாண்டியும் சில நாட்களில் வெள்ளி முளைக்கும் வேளையிலும் உறங்கச் சென்ற அண்ணா, தமிழினத்தின் விடியலுக்காக அயராது பாடாற்றினார் என்பது மட்டும் உண்மையிலும் உண்மை.

நக்கீரன் - Nakkeeran 013-244 36 24



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 964



## திருமங்கலாய் சிவன் கோவில்
### திருக்கரைசையம்பதி, திருகோணமலை

தலபுராணம் என்பது வரலாற்றிற்குச் சமமானதாகக் கருதக்கூடிய பல விடயங்களைத் தன்னகத்தே அடக்கிக் காணப்படும். ஆலயத்தின் அமைவு, ஆலயத்தின் சிறப்பு, ஆலயம் சார்ந்த நிலப்பரப்பு, அந்நிலப்பரப்பிலே வாழ்ந்த மக்களின் பண்பாடு, நாகரீகம், போன்ற பல விடயங்களைத் தலபுராணங்கள் தன்னகத்தே கொண்டு காணப்படும். இத்தலபுராணங்களை கற்றறிந்த சான்றோர்கள் இயற்றுவதால் அவற்றிலே தெளிவு காணப்படும்.

திருமங்கலாய் சிவன்கோவில் என்ன காரணத்தாலோ அழிவுற்றபோதிலும், இவ்வாலயத்தின் ஆரம்பமும், அதன் சிறப்பும் இவ்வாலய தலபுராணமாகிய திருக்கரைசைப் புராணத்தின் மூலம் கிடைத்திருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும். புராணம் என்றால் கட்டுக்கதை என்ற கருத்து மக்களிடையே நிலவுகின்றது. இக் கருத்து தவறானதாகும். புராணம் என்பது புராதனமானது. தொன்மையானது என்ற கருத்துடையது.

வரலாறு உள்ளதை உள்ளபடி உரைக்கும்போது, புராணங்கள் வரலாற்றோடு வர்ணனைகளையும் சேர்த்து சேர்த்துக்கூறுவதால், மக்களிடையே இவ்வாறான எண்ணம் தோன்றியிருக்கலாம். இவ்வாறான தலபுராணங்களைப் பேணிக்காப்பது, சைவமக்களுடைய ஆதி வாழ்விடங்களையும், அவர்கள் பேணி வளர்த்த ஆலயங்களையும் அதன் சிறப்புக்களையும் அறிய வாய்ப்பளிக்கும். திருமங்கலாய் சிவன்கோவிலுக்குரிய திருக்கரசைப்புராணம், கொட்டியாபுரப்பற்றிலுள்ள பல ஆலயங்களிலே இன்றும் படிக்கப்பட்டு வருகின்றது.

திருமங்கலாய் சிவன்கோவில் தலபுராணக் குறிப்புக்களிலிருந்து திருமங்கலாய் சுவாமி பெயர் கந்தலிங்கேஸ்வரர் என அறியமுடிகின்றது. இவ்வாலயத்திலே முக்கியமான இரு தீர்த்த தினங்கள் காணப்பட்டுள்ளன. திருமங்கலாய் சிவன் கோவிலில் இருந்து சுவாமி எழுந்தருளி, மகாவலிகங்கையில் ஆடி அமாவாசை அன்றும், மகரமாதத்திலும் தீர்த்தமாடுவார். இவ்வாலயம் அழிவுற்றபின்னர் இந்த வழமையின்படி கங்குவேலி சிவனும், தம்பலகாமம் கோணேசரும் மகாவலி கங்கையிலே தீர்த்தமாடுவது வழக்கம்.

திருமங்கலாய் சிவன்கோவிலுக்குரிய திருக்கரைசைப் புராணம் இவ்வாலயத்தின் தொன்மையையும், சிறப்பையும் எடுத்துக் கூறுகின்றது. இலங்கையின் கிழக்குப் பிரதேசங்களிலே தமிழ் மன்னர்கள் பன்னெடுங் காலமாத்திற்கு முன்பே அரசாட்சி செய்துள்ளார்கள் என்ற செய்தியை திருக்கரசைப் புராணம் கூறுகின்றது. அக்காலத்தில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கும் மன்னர்களும், யாத்திரிகர்களும், வியாபாரிகளும் சர்வசாதாரணமாகச் வருவதும் போவதும் நிகழ்ந்துள்ளது.

இந்தியாவிலிருந்து மன்னர் பரம்பரையைச் சேர்ந்த சிங்கபூதரன் என்பவன், அயோத்தியிலிருந்து இலங்கைக்கு வந்தான். தற்போது இலங்கைத்துறை என்று சொல்லப்படும் இடத்தில் கப்பலில் வந்திறங்கினான். அப்போது இப்பிரதேசத்தை எழில்வேந்தன் என்னும் அரசன் ஆண்டுகொண்டிருந்தான். இவனுடைய மகள் பெயர் திருமங்கை. திருமங்கையை சிங்கபூதரன் திருமணம் செய்து, எழில்வேந்தனுக்குப் பின், திருக்கரைசையம்பதியில் அரண்மனை அமைத்து ஆட்சி செய்துள்ளான். அரண்மனை அமைத்த இடத்திற்கு இரணியன்குன்று என்று பெயர். இப்பெயர் திரிபுபட்டு இரணியன் கொட்டு என்று வழங்கப்படுகின்றது. சிங்கபூதரனும், திருமங்கையும் சோந்து அமைத்த கோவிலே திருமங்கலாய் சிவன்கோவில் என்று வழங்கபப்ட்டது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் முறையே பொருந்திச் சிறந்து விளங்கிய திருமங்கலாய் சிவன்கோவில், மகாவலிகங்கையின் பெருவெள்ளப் பெருக்கினால் அழிந்திருக்கலாம் என்றும், பின்னர் காடுவளர்ந்து மூடியிருக்கலாமென்றும் ஒரு கருத்து நிலவுகின்றது. இவ்வாறு காடு வளாந்து மூடியிருந்த காலத்தில், ஸ்ரீ தியாகராசக் குருக்கள் என்பவர், ஆலயத்திலிருந்த லிங்கத்தையும், அம்பாளையும் எடுத்துவந்து வெருகலம்பதியில் ஒரு சிறு கோவில்கட்டி வணங்கி வந்துள்ளார்.

இக்கோவிலும் பராமரிப்பாரின்றி அழிவுற்றிநிலையில், இந்தத் திருவுருவங்கள் மூதூரிலுள்ள பிள்ளையார் கோவிலில் வைக்கப்பட்டுள்ளது. சுமார் மூன்றடி உயரமான லிங்கமும், அம்பாளும் சிறிது பின்னப்பட்டிருந்தபோதிலும், மிக அழகிய திருவுருவங்களாகக் காணப்படுகின்றன. திருமங்கலாய் ஆலயத்திற்குரிய மணியொன்று கங்குவேலிச் சிவன் கோவிலில் இருக்கின்றது.

வரலாற்றுப் பெருமைமிக்க இவ்வாலயம், பழுதடைந்து காணப்படுகின்றது. ஆயினும் ஆலயச் சிதைவுகளைத் தேடியெடுத்து ஒழுங்குபடுத்திப் பாதுகாத்த பெருமை திரு. க.செல்லத்துரை சாமியாரைச் சார்ந்ததாகும். ஒரு காலத்தில் வரலாறு மீண்டு தமிழ்மக்கள் கோலோச்சும் காலத்தில், வரலாற்றுப் பெருமைமிக்க ஆலயங்கள் யாவும் தமது உன்னத நிலையை மீண்டும் பெறும் வாய்ப்பு ஏற்படும். "ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும், வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும்" என்பதற்கிணங்க, "குடைநிழல் இருந்து குஞ்சரமூர்ந்தோர் நடைமெலிந்து நண்ணினும் நண்ணுவர்" என்பதை மனதிருத்தி, எமது வரலாறு மீண்டும் எழுச்சிபெற்று, அதன் மூலம் தமிழ் மக்கள் வாழ்வும், அவர்கள் பொற்றிப் பேணும் ஆலயங்களும் புதுப்பொலிவு பெறும். இது காலத்தின் நியதி என்பதை மனதிருத்திருத்துவதே பொருத்தமுடையது.

*வளரும்...*




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# அன்பின் தொனி - 623

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள் -** Be Holy

பரிசுத்தமும் நீதியும் - Holiness & Righteousness

"பரிசுத்தம் - நீதி" இவ்விரண்டு வார்த்தைகளும் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டவை. இவ் வார்த்தைகள் இரண்டு அம் சங்களைக்கொண்ட ஒரே நிலைப்பாட்டை உடையதாய் வேதத்தில் காணப்படுகிறது. "பரிசுத்தம்" ஒருவருடைய குணாதி சயத்தோடு (character) சம்பத்தப்பட்டது, "நீதி" ஒருவருடைய நடத்தையோடு (conduct) சம்பந்தப்பட்டது. எப்படி ஒரு மரத்தின் வேரும், கனியும் நெருங்கிய தொடர்புடையதாய் இருக்கிறதோ அப்படியே இச் சொற்கள் இரண்டும் அமைந்திருக்கின்றன. வேர் இல்லாமல் கனி இருக்கமுடியாததுபோல பரிசுத்தம் இல்லாமல் நீதியாய் செயற்பட முடியாது. பரிசுத்தம்தான் எம்மை நீதியாய் நடப்பிற்கிறது.

"பரிசுத்தம்" ஒருவர் இருக்கும் நிலையை விபரிக்கிறது, "நீதி" அவருடைய நடத்தையை விபரிக்கிறது. ஆகையால் நாம் பரிசுத்தமாய் இருக்கவும் நீதியாய் நடக்கவும் தேவனால் அழைக்கப்பட்டவர்கள், எனவே அதற்கு அமைய ஜீவிக்க வேண்டுமாயின் எமது வாழ்க்கையை தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து தேவ ஆவியானவரின் வழிநடத்துதலோடு வாழ முன்வருவேண்டும்.

இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன் பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். **ரோமர் - 6 : 22-23**

இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப் படுத்தக்கடவோம். **- 2 கொரிந்தர் 7: 1**

இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். **- எபேசியர் 4: 21-24**

யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள், பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே. **- எபிரேயர் 12: 14**

ஒவ்வொரு மனிதனும் பரிசுத்தமாய் வாழவேண்டும் என்பது தேவனுடைய எதிர்பார்ப்பு. ஆனால் சத்துருவான பிசாசா னவன் ஒவ்வொரு மனிதனையும் தன் வசப்படுத்தி, உலக ஆசைகளைக்காட்டி அவனை கண்களின் இச்சைக்கும், மாமிசத்தின் இச்சைக்கும், ஜீவனத்தின் பெருமைக்கும், ஆளாக்கி அவனை மோசம்போக்கி, பாவத்தில் விழுத்தி அவனை பரிசுத்த வாழ்க்கை வாழ விடாதபடிக்கு தடை செய்கிறான். இந்த நிலையிலிருந்து தப்பித்து வாழவேண்டுமாயின் உலகில் ஒரே வழிதான் உண்டு. அதாவது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஒருவன் தன் சொந்த இரட்சக ராக ஏற்றுக்கொண்டு, தேவ நீதிப்படி முழுக்கு ஞானஸ்நானம் எடுத்து, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலோடு ஜீவிக்கும்போது சத்துருவான பிசாசின் சோதனைகட்கு ஆளாகாதபடி பரிசுத்த ஜீவியம் ஜீவித்து தேவனைப் பிரியப் படுத்தலாம்.

பரிசுத்தமும் ஆவியும் - Holiness and the Spirit

தேவன் பரிசுத்தராய் இருக்கிறதுபோல நாமும் இருக்க தேவன் எம்மை பரிசுத்தத்திற்கென்று அழைக்கிறார். "பரிசுத்த ஆவி" என்று கூறும்போது, ஆவியானவர் பரிசுத்தர் என்பது தெளிவாகிறது. ஆவியானவர் எமக்குள் வாசம் செய்கிறார் அல்லது ஆவியானவரால் நிரப்பப்பட்டுள்ளோம் என்று சொல்லும்போது, அவருடைய பரிசுத்தம் எமக்குள் இருக் கிறதா என்பதற்கு விடை காணவேண்டியதாய் இருக்கிறது.

பரிசுத்தம் என்றால் என்னத்தைக் கருதகிறோம்? பரிசுத்த வாழ்க்கை என்பது தேவனுக்குப் பிரியமுள்ளவர்களாக வாழ்ந்து, தேவ ராஜ்யத்திற்கு அடுத்தவைகளின் நோக்கத்தோடு ஜீவிப்பதாகும். இப்படியான ஒரு ஜீவியத்தை நாமாக அமைத்துக்கொள்ள நாம் தனித்து செயற்பட முடியாது. ஆவியானவர் மட்டுமே எம்மை இயேசுவின் பரிசுத்த நிலைக்கு எம்மைக் கொண்டுவர ஒத்தாசை அழிக்கமுடியும்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை நாம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு வாழும்போது எமக்குள் வந்து வாசம் செய்யும் ஆவியானவர் எம்மைப் பரிசுத்தத்திற்குள் வழிநடத்துகிறார். நாம் ஒன்றிற்கும் தகுதியற்றவர்கள் என்பதை உணர்ந்தவர்களாய், உடைந்த உள்ளத்தோடு பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலுக்கு எம்மை ஒப்புக்கொடுக் கும்போது, அவர்தாமே வேதாகமத்தின் வார்தைகளுக்கூடாக தேவனைப் பிரியப்படுத்தி வாழ்கிற வாழ்க்கையை எமக்குத் தெரியப்படுத்தி அதன்படி ஜீவிக்கிற வாஞ்சையையும் விருப்பத்தையும் எமக்குள் ஏற்படுத்துவார்.

சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள்யாவும் என்னுடையவைகள், அதினாலேஅவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன். **- யோவான் 16: 13-15**

நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது, அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.
**- யோவான் 14: 16-17**

*தொடரும்...*


கேரளா மூலிகை மருத்துவம்

வைத்திரயர் - சஞ்சீவ ராஜூ

பரம்பரை மூலிகை வைத்தியசாலை
பதினொரு பரம்பரையாக நாடி பார்த்து உங்களது உடம்பிலிருக்கும் நோய்களைக் கண்டறிந்து அதற்கேற்ற மருந்துகளை தருகின்ற வைத்தியர் பரம்பரையைச் சேர்ந்த சஞ்சீவ ராஜு இந்தியா முதல் மலேசியா, சிங்கப்பூர், பிரான்ஸ், ஜேர்மன், லண்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு சென்று மருத்துவம் செய்த பின் தற்போது கனடா வந்துள்ளார்.

பல இடங்களில் மருத்துவம் செய்து நம்பிக்கை இழந்து விட்டீர்களா? கவலைப் பட வேண்டாம். பக்க விளைவுகளற்ற தகுந்த மருந்துகளைப் பெற்று உங்கள் வருத்தங்கள் குணமாக ஒரு முறை நம்மிடம் வாருங்கள். நல்ல தீர்வு பெற்றுச் செல்லுங்கள். இலவச ஆலோசனை வழங்கப்படும்.





ஆஸ்துமா, அலர்ஜி, மூச்சுத்திணறல், தும்மல், நெஞ்சுச்சளி, தோல் வியாதி சொறி யாஸிஸ், முடக்குவாதம், மூட்டு வலி, வயிற்றுவலி, இடுப்பு வலி, முதுகு வலி, கை-கால் வலி, கழுத்துவலி, ஒற்றைத் தலைவலி, பக்க வாதம், நரம்புத் தளர்ச்சி, நீரழிவு (சர்க்கரை வியாதி), சிறுநீரகக்கற்கள், வாய்வுத் தொல்லைகள், குடற் புண், இரத்த பலம் அபிவிருத்தி, ஆண்களுக்கான பிரச்சனைகள், ஆண்மைக் குறைவு, உடல் பருமன்-குறைக்க, கூட்டுவதற்கு, முடி உதிர்தல், ஞாபக மறதி, உள்மூலம், வெளிமூலம், பகந்திரி மூலம், கால் வெடிப்பு, மஞ்சட்காமாலை, வெண்குஷ்டம், பெண்களுக்கான மாதவிடாய்ப் பிரச்சனை, நெஞ்செரிதல், மலச்சிக்கல், செக்ஸ் பிரச்சினை, மன அழுத்தம், காக்கா வலிப்பு, ஞாபக மறதி, சரவாங்கி போன்ற நோய்களை மூலிகை வைத்தியம் மூலம் குணப்படுத்த முடியும். அத்துடன் கர்ப்பப்பை கோளாறுகள், குழந்தையின்மைக்கான மருத்துவத்துடன், சகல நோய்களுக்கும் சிகிச்சை செய்யப்படும். அத்துடன் போதைப் பொருட்களை உட்கொள்ளும் பழக்கத்தை மறப்பதற்கான மருந்துகளும் தரப்படும்.

வேர், பச்சை இலைகள், பட்டைகள், கிழங்குகளில் இருந்து பெறப்பட்டு பொடியாக, கசாயமாக, குளிசைகளாக, லேகியமாக இந்த இயற்கை மருந்துகள் தரப்படும்.
எந்தவித பக்க விளைவுகளும் கிடையாது! நம்பி வாருங்கள்! நலமுடன் வாழுங்கள்!

2900 MARKHAM ROAD, MajesticCity UNIT L 13 ,
OPP. VASANTHAM SUPER MARKET, MARKHAM RD,
SCARBOROUGH, ON, M1X 1E6

647-294-3189


*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 28)*

## கல்கியின் பொன்னியின் செல்வன்

# வந்தியத்தேவனின் இலங்கைப் பயணம்

'ஆம் அம்மா என் பிள்ளைகளுக்கு நன்மை செய்யவே விரும்புகிறேன். இந்த சாபக் கேடு உள்ள ராஜ்ஜியம் அவர்களுக்கு வேண்டாம். மதுராந்தகன் சம்மதித்தால் பின் ஆதித்தகரிகாலனிடம் கேட்க வேண்டும். அத்துடன் உன் பெரிய பாட்டி சம்மதிக்க வேண்டும். உன் பெரிய பாட்டிதான் என்னை சிம்மாசனம் ஏற வைத்தார். கரிகாலனிற்கு இளவரசர் பட்டம் கட்டியதும் அவரின் வற்புறுத்தலால் தான். அவர் உன் மீது மிக்க அன்பு வைத்துள்ளார். அதனால் நீ தான் எனக்கு உதவ வேண்டும்' என்றார். 'அப்பா புறாவுக்காக சதையை அளித்த சிபியும், கன்றுக் குட்டிக்காக மகனை அளித்த மனுநீதிச் சோழரும் எம் முன்னோர்கள்! கரிகால் வளவனும், பெருநற்கிள்ளியும் இந்த ராஜ்ஜியத்தை ஆண்டவர்கள். தன் திருமேனியில் தொண்ணூற்றாறு புண் சுமந்த வீர விஜயாலயச் சோழர் சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். காவேரிக் கரையில் நூற்றி எட்டு ஆலயங்களைக கட்டிய ஆதித்த சோழரும், சிற்றம்பலத்தானுக்கு பொன் வேய்ந்த பராந்தகனும் ராஜ்ஜியத்தை விஸ்தரித்தனர். அன்பே சிவம் என்று பக்திமான் கண்டராதித்தர் ஆட்சி புரிந்த தர்ம மகாராஜா! இப்படிப் பட்ட புனித இராஜ்ஜியத்தில் சாபக் கேடு எப்படி இருக்க முடியும்? சொல்லுங்கள்' என்றாள் குந்தவை. அதற்கு சுந்தர சோழர், 'கட்டாயம் சொல்ல வேண்டும் அதிலும் உனக்கு சொல்ல வேண்டும். நீ தானே என் அன்பு மகள் அதனாலாயே உன்னை அழைத்தேன்' என்றபடி தொடர்ந்தார்.

'நான் இராஜ குலத்தில் பிறந்தாலும் இராட்சியத்திற்கு உரிமை உள்ளவன் அல்ல! ஆளும் ஆசையும் எனக்கில்லை. என் தந்தைக்கு மூன்று மூத்த சகோதரர்கள் இருந்தார்கள். இதனால் இராட்சியம் ஆளும் கனவு கூட என்னிடம் இல்லை. நான் போர் படைகளுடன் போவேன் எனக்கு சிறிய படை இருந்தது. அதற்கு தலைமை தாங்கி நின்றேன். என் படை போரில் தோற்றது யாவரும் மாண்டனர். நான் திரும்பி ஊருக்கு போக விரும்பவில்லை ஏனென்றால் என் முன்னோர்கன் வீராதி வீரர்கள், சூராதி சூரர்கள்! எத்தனை அவமானம் எனக்கு என்று எண்ணி என் உயிரை மாய்க்க கடலில் குதித்தேன். ஆனால் விதியின் வசத்தால் என் உயிர் பிரியவில்லை. இதனால் சிறு தீவு ஒன்றை சென்று அடைந்தேன். அழகிய அந்த தீவு பச்சை மரங்களால் சூழப்பட்டிருந்தது. அங்கு நான் இருக்கும் போது ஒரு அழகிய பெண்ணை கரடியிடமிருந்து காத்தேன். அவள் ஒரு சித்திரப் பொம்மை போல் அழகாக இருந்தாள். அவள் காட்டில் வாழும் பெண் போல் உடை நடையும் கொண்டிருந்தாள். அவள் சட்டென மறைந்து மீண்டும் தன் தந்தையுடன் வந்து நின்றாள். இலங்கைத் தீவின் கடற்கரையோரத்தில் வாழ்ந்து மீன் பிடித்து பிழைக்கும் கரையார் என்னும் வகுப்பைச் சேர்ந்த பெண். இவள் என்னைக் காப்பாற்றினாள் என்பதை அவள் தந்தை சொன்னபின் தான் தெரிந்து கொண்டேன். தான் மரத்தில் இருந்த போது ஒரு கரடி பின்னால் என்னைத் தாக்க எத்தனித்ததாகவும், அதைக் கண்ட பெண் என்னை எச்சரிக்கை செய்வதற்காகவே சத்தம் செய்து கொண்டு ஓடினாள் என்றும் தெரிந்து கொண்டேன். அவளிற்கு நன்றி செலுத்தினேன். அழகு நிறைந்த அவளால் பேச முடியாது, கேட்க முடியாது என்று பின்னர் தெரிந்து கொண்டேன். இருந்தும் அவள் அபூர்வ சக்தியால் யாவற்றையும் தெரிந்து கொண்டாள். என் இதயமும் அவளுடன் கலந்தது. அதனால் அந்த த ீவே என் சொர்க்கமாயிற்று! அவளிற்கு நாட்கள், வாரங்கள், மாதங்கள், வருடங்கள் கடந்து சென்றதே தெரியவில்லை. இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்தாள். திடீர் என்று ஒரு கப்பல் அந்தக் கரையோரம் வந்து நின்றது. அந்தக் கப்பலில் இருந்தவர்கள் என்னைத்தான் தேடி வந்திருந்தார்கள் என்பதை அறிந்தேன். என் தந்தையின் சகோதரர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள். மற்றைய சகோதரருக்கு மக்கள் இல்லை. அதனால் இராட்சியம் ஆள வாரிசு இல்லையாம்! எனக்காக சோழ ராஜ்ஜியம் காத்திருப்பதாகவும் அறிந்தேன். காதலின் கனவு என்னைக் கப்பலில் ஏறத்தடுத்தது. ஆனால் என் கடமை, நாட்டின் துயரம் என என் வாழ்வையே புரட்டி விட்டது. மீண்டும் வருவேன் என்று அவளிடம் விடைபெற்றேன். அவளும் என்னை நோக்கிய வண்ணமே நின்றாள். இன்னும் அந்தப் பார்வை என் கண்களில் படர்ந்து கவலையை தருகிறது. என் கதையை என் நண்பன் அநிருத்தர் மட்டும் அறிவார். ஆனால் அவர் கூட என் மன நிலையை அறியார்! இதை உனக்கு மட்டும் சொல்லுகிறேன். ஏனெனில் என்னை நீ உணர்ந்து துணை நிற்பாய் என்று எண்ணுகிறேன். அங்கிருந்து புறப்பட்ட நான் கோடிக் கரையேறினேன். தஞ்சைக்கு நேராக வந்தேன். இங்கு என் பாட்டனார் பராந்தக சக்கரவர்த்தி மரணப் படுக்கையில் மனம் வருந்தியபடி இருந்தார். என்னைக் கண்டதும் அளவிலா மகிழ்ச்சி கொண்டார். என் சிறு பிராயம் முதல் என் பெயரில் மிக்க பிரியம் கொண்டு என்னை எப்போதும் தன்னுடன் வைத்திருப்பார். ஆனாலும் அங்கு இருக்கப் பிடிக்காது பிடிவாதம் செய்து அவரிடமிருந்து விடை பெற்று இலங்கை சென்றேன். திரும்பி இலங்கைத் தீவு வந்துவிட்ட என்னைத் தேட ஆட்களை அனுப்பியிருந்தனர். இறுதியாக என்னைக் கண்டு கொண்டார்கள். வீழ்ச்சி அடைந்து கொண்டு போகும் சோழ ராஜ்ஜியம் என்னால் உயர்வடையும் என்று என் பாட்டனார் நம்பினார். அவர் இறக்கும் தருவாயில் என்னை அழைத்து உச்சி மோர்ந்து, அப்பனே எனக்கு பிறகு உன் பெரிய தந்தை கண்டராதித்தர் சிம்மாசனம் ஏறுவான். பிறகு இந்த சோழ ராஜ்ஜியம் உன்னை அடையும் உன்னாலே இந்த சோழ குலம் மேன்மை அடையும்! சோழ நாட்டின் மேன்மையை நிலை நாட்டுவதே என் வாழ்க்கையின் இலட்சியமாக வேண்டும் என்று என்னிடம் வாக்குறுதி பெற்றுக் கொண்டார். அவரிடம் உள்ள பத்தியால் சோழ நாட்டின் மேன்மையை நிலை நாட்டுவதே என் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டேன். என் பெரிய தகப்பனார் தன் முதல் மனைவிக்கு பிள்ளைகள் இல்லாததால் இரண்டாம் கல்யாணம் செய்தார். இரண்டாம் மனைவிக்கு பிள்ளைகள் பிறந்ததால் அரசுரிமை அவர்களுடையதே எனக்கு இராட்சியம் ஏது? இந்தக் குழப்பத்தைத் தீர்க்க பராந்தக சோழன் இறந்த பிறகு கண்டராதித்தருக்கு இராஜ பட்டாபிஷேகம் நடந்தது. அப்போதே எனக்கு யுவராஜ பட்டம் வந்தது. நாட்டு மக்களும் என் மேல் பிரியமா இருந்தார்கள். புதிதாக முடி சூடிய சக்கரவர்த்தியையும், யுவராஜாவையும் ஒருங்கே பார்த்து மகிழ ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். அவர்கள் விருப்பம் போல் நாம் அரண்மனை மேல் மாடத்தில் முன்றலுக்கு வந்து நின்றோம். சிறுவர் முதல் பெரியோர் வரை மகிழ்ந்து கொண்டாடினார்கள். இந்நிலையிலும் என் காதல் என்னைவிட்டுப் போக எண்ணியது. அதே நேரம் சோக வதனம் கொண்டு கண்ணீர் ததும்ப என்னைப் பரிதாபமாகப் பார்த்தது அவள் முகம்! என் தலை சுழன்றது மயக்கம் வந்தது சற்று நேரத்தில் மயக்கம் தெளிந்து என் நண்பன் அநிருத்தரிடம் என் நிலையைச் சொல்லி அவளைத் தேடச் சொன்னேன். இறுதியில் அவளைத் தேடிக் கோடிக்கரைக்கு நானே சென்றேன் அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை கலங்கரை விளக்கின் உச்சத்தில் நின்று தலைகீழாக கடலில் விழுந்து தன்னை மாய்த்துக் கொண்டதாக அறிந்து கொண்டு மனம் உடைந்து நின்றேன். அதனால் அவளை என்ன செய்வது என்ற கேள்வி என்னிடம் இல்லை. இதனால் ராஜ காரியங்களில் முழுமையாக




ஈடுபட்டேன். போர்க்களம் சென்றேன். என் நல் வாழ்வையும் அமைத்தேன். பிள்ளைப் பேறு கண்டேன் இத்தனை நாட்கள் பிரிவு! என் மனம் அவளை மறக்கவில்லை அவள் கனவிலும் நினைவிலும் வந்து என்னைத் தொந்தரவு செய்கிறாள்.' என்று சொல்லி உடல் நடு நடுங்க குந்தவையை நோக்கினார். குந்தவையும் அவர் தோளில் சாய்ந்து கொண்டுவிட்டாள். 'அப்பா இத்தனை வருடங்கள் இந்த வேதனையுடன் இருந்து உங்களைக் காயப்படுத்திக் கொண்டீர்கள்! இன்று என்னிடம் சொல்லிவிட்டீர்கள் உங்கள் உடல் நிலை சரியாகிவிடும்' என்றாள். இதைக் கேட்ட சுந்தரசோழர் 'மகளே மாண்டவர்கள் மீண்டு வருவார்கள் என்பதை நான் நம்பவில்லை ஆனால் இப்பொழுது நேரில் கண்டு பீதி கொண்டுள்ளேன் என்னை நம்பாவிட்டால் உன் தோழி வானதியிடம் கேள்' என்றார். மேலும் 'உனக்கு ஞாபகம் இருக்கிறதா? காவேரியில் குழந்தை தவறி விழுந்து நாம் தேடிய போது கையில் ஏந்தி வந்தவள் அவளே! ஆதித்தகரிகாலனின் பட்டாபிஷேகத்தின் பின் ஆசிவாங்க இங்கு வந்த போது பெண்களின் மத்தியில் அவள் நின்று உன் தமையனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். நான் தஞ்சை வந்த பிறகு நாலைந்து தடவை என் முன்னால் தோன்றி எச்சரிக்கை செய்தாள். நீ தான் என்னைக் கொன்றாய் சோழ ராஜ்ஜியம் இன்னொருவருக்குரியது அதை உரியவனுக்கே கொடு பாவம் செய்யாதே என்ற எச்சரிக்கை அவள் கண்களில் தெரிந்தது. குந்தவை, மக்கள் எதைச் சொன்னாலும் நம் சோழ சிம்மாசனம் மதுராந்தகருக்கே போகட்டும் என் புதல்வர்களுக்கு வேண்டாம்! பெரிய பிராட்டியை சீக்கிரம் வருமாறு அழைப்பு விடு அவருடன் பேசி மதுராந்தகருக்கு பட்டம் கட்டிவிட்டு ஆதித்தகரிகாலனின் பொன் மாளிகைக்கு சென்று நிம்மதியாக வாழ்வேன்' என்றார் சுந்தரசோழர். சரி அப்பா அவ்வாறே செய்கிறேன் என்று கூறி தன் தாயிடம் சென்று, 'அம்மா தந்தையை ஒரு கணம் கூட விட்டுப் பிரியாதீர்கள்' என்று சொல்லி விட்டு விடை பெற்றாள். என் குடும்பத்தவருக்கும், நாட்டிற்கும் எதிராக சதி செய்வது நிச்சயமாகத் தெரிகிறது இந்த அபாயத்திலிருந்து இவர்களைக் காப்பாற்றுவது என் பொறுப்பாகி விட்டதே! என்று எண்ணினாள். பின்னர் குந்தவை தஞ்சையில் ஆதுரசாலை ஆரம்பிப்பதாக தீர்மானித்தபடி ஏற்பாடாய் இருந்தது. அவள் அங்கு சென்றாள் அரச குலப் பெண்களிற்கு சொந்தமாக சொத்துரிமை இருந்தது. அந்த சொத்தை மக்கள் நன்மைக்காக பயன்படுத்துவதும், அவற்றினை செப்புப் பட்டயத்தில் பொறிக்கும் படி செய்வார்கள். குந்தவை ஆதுரசாலை அமைத்து நோய்வாய்ப்பட்டவர்களுக்கு உதவினாள். இதன் ஆரம்ப விழாவிற்கு எல்லோரும் கூடி வந்தனர். விழா சிறப்பாக நடந்தது நந்தினியும் குந்தவையும் அங்கு பேசிக் கொண்டார்கள் நந்தினி, 'அரசருக்கு எதிராக சதி செய்கிறார்களாமே! யார் அவர்கள்' என்றாள். குந்தவை, 'எனக்கு தெரியவில்லை தஞ்சையில் இருந்து இராஜ காரியத்தைப் பார்த்துக் கொள்ள எண்ணுகிறேன்' என்றாள். 'நல்ல தீர்மானம் என் விருந்தாளியாக கடம்பூர் இளவரசன் கந்தமாறனும் இருக்கிறான் அவனும் உங்களுக்கு உதவக்கூடும்' என்றாள் நந்தினி.

அப்பொழுது குந்தவை, 'கந்தமாறன் இங்கு என்ன செய்கிறான்? எங்கே இருக்கிறான்?' என்று கேட்டாள். நந்தினி அதற்கு, பதிலாக, 'அவன் ஒற்றன், துரோகி, சிநேகித துரோகம் என்று வாய் ஓயாது புலம்பிக் கொண்டிருக்கிறான். தொண்டை நாட்டில் திருவல்லம் என்னும் ஊரில் முன்பு அரசு புரிந்த வானவர் குலத்தைச் சேர்ந்த வந்தியத்தேவன், இவன் கந்தமாறனின் நண்பனாக இருந்தானாம் பின்பு அவனை முதுகில் குத்திவிட்டு ஓடிவிட்டானாம். அவன் ஒற்றன் என்ற சந்தேகத்தில் அவனைப் பிடித்துவர சின்னப்பழுவேட்டரையர் ஆள் அனுப்பியுள்ளார், அவன் காயப்பட்ட மறு நாள் என் அரண்மனையில் கொண்டு வந்து போட்டார்கள். காயத்திற்கு சிகிச்சை செய்யும் பொறுப்பு என்னுடையதாயிற்று! மெதுவாக உயிர் பிழைத்து வருகிறான். அவனை நீங்கள் வந்து பார்க்கலாம் அதனால் ஏதாவது உண்மை புலப்படும்' என்றாள் பழுவூர் ராணி நந்தினி. குந்தவை கோபத்தோடு 'எப்படி அவனை ஒற்றன் என்று எண்ணுவீர்கள்? யார் அவனைப் பிடிக்க கட்டளை இட்டது?' என்று கேள்வி கேட்க நந்தினி, 'எனக்கு எப்படித் தெரியும்? சம்புவரையர் மகன் கந்தமாறன் சொன்னான்' என்றாள். பின்னர் குந்தவை தேவியின் தான சீல சாசனம் படிக்கப்பட்டது. கிராமத்து சர்வமானிய நிலங்களை அந்த ஊர் விவசாயிகள் சகல உரிமைகளுடன் அனுபவித்துக் கொண்டு, தஞ்சாவூர் சுந்தர சோழ ஆதுரசாலை வைத்தியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு இருநூறு கலம் நெல்லும், அங்கு சிகிச்சை பெறும் நோயாளிகளுக்காக தினம் தோறும் ஐம்பதுபடி பசும்பாலும், ஐந்து படி ஆட்டுப்பாலும், நூறு இளநீரும் அனுப்ப வேண்டியது என்றும், இதை எழுதியவர் பெயர் இதை மேற்பார்வை செய்தவர் பெயர் யாவும் பொறிக்கப்பட்டிருந்தது. வாசித்து முடிந்ததும் சாசனங்கள் கிராமத்தவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மக்கள் அனைவரும் வாழ்க! வாழ்க! பேரரசர் வாழ்க! அவர் குடும்பத்தவர், அமைச்சர்கள் வாழ்க! என்று வாழ்த்தி மகிழ்ந்தனர். இந்த வாழ்த்தொலிகள் பழுவேட்டரையரிற்கு பெரும் ஆத்திரத்தையும், எரிச்சலையும் ஊட்டியது. குந்தவை கந்தமாறனைப் பார்ப்பதற்கு வருவதாக இருந்ததும் அவரின் எரிச்சல் எல்லை கடக்க காரணமாயிற்று. இதனால் அவர் தஞ்சை மாளிகைக்குச் சென்று குந்தவையை வரவேற்க மனமின்றி மழபாடியினருக்குச் சென்றார். குந்தவையும் கந்தமாறனைப் பார்க்க வந்தாள். கந்தமாறனிடம் நடந்தவைகளைக் கேட்டு அறிந்து கொண்டாள். அவன் தனக்கு நடந்த துக்க சம்பவத்தை கற்பனை கலந்து அழகாக சொன்னான். வந்தியத்தேவனும் குந்தவைக்கு நடந்தவற்றைக் கூறியிருந்தான். அதனால் குந்தவைக்கு எதை நம்புவது என்று தெரியவில்லை. அதே நேரம் அரண்மனைத் தாதி அங்கு வந்து, 'ஒற்றன் பிடிபட்டு விட்டான்' என்றாள்.

*(தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com

**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன**

---

# இவ்வார ராசிபலன்

**17-09-2021 வெள்ளி தொடக்கம் 23-09-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** வியாபாரத்தால் நன்மை உண்டு. விருந்தினர் வருகை உண்டு. பிள்ளைகளால் பெருமை உண்டு. மருத்துவ செலவு உண்டு. வழக்குகள் வெற்றி தரும். பங்கு சந்தை வியாபாரம் லாபம் தரும். உடல் உபாதை அதிகமாகும். பெற்றோர்களால் பாராட்டு பெறுவீர்கள். கடன் சுமை தீரும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. சொத்து பிரச்சனைகள் தீரும். சாதனைகள் நிகழ்த்தும் நாளாக அமையும். கருட வழிபாட்டால் கடன் தீரும்.
அதிர்ஷ்ட எண்: 8,7,2,5
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,A




**ரிஷபம்:** கால்நடையால் லாபம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. பயணத்தில் எச்சரிக்கை தேவை. ஆடம்பர அகங்கள் கூடும். உத்தியோக மாற்றம் உண்டு. புதிய தொழில் அமையும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். வெகுமதி கூடும் நாள். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் அமையும். பயணத்தால் லாபம் ஏற்படும். கடன் சுமைகள் தீரும். பொருள் சேர்க்கையுண்டு. வரவுகள் மிகுதியுண்டு. மாங்கல்ய நமஸ்காரம் மனோ தைரியம் கொடுக்கும்.
அதிர்ஷ்ட எண்: 1,0,2,6
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S




**மிதுனம்:** ஆரோக்கியம் திருப்தி தரும். மறைமுக தொல்லை நீங்கும். உடல் ஆரோக்கியம் கூடும். வழக்கு வெற்றி தரும். புத்திர வழியில் தொல்லை உண்டு. புதிய பொருள் சேர்க்கை உண்டு. புகழ் கூடும் நாள். அரசு வழியில் ஆதாயம் உண்டு. வேலை பளு அதிகரிக்கும். மன அமைதி கிட்டும். காரிய வெற்றி கிட்டும். வாழ்க்கை வசதி பெருகும். வீண் வம்பு ஒடி மறையும். தாயின் பிராத்தனையால் தகுதிகள் உயரும்.
அதிர்ஷ்ட எண்: 4,1,8,6
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,D




**கடகம்:** வருமானவரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. வேலை பளு கூடும். பொருள் நஷ்டம் ஏற்படும். அலட்சிய போக்கு தவிர்க்கவும்.மனை வாங்கும் யோகம் உண்டு. உடல் நலம் சீராகும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. சந்தோஷமான நாளாக அமையும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். மனைவியின் பிராத்தனை மாற்றம் தரும்.
அதிர்ஷ்ட எண்: 9,3,1,5
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,J




**சிம்மம்:** புதிய சிந்தனை உருவாகும். விவசாய விளைச்சல் மூலம் நற்பலன் உண்டாகும். இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. தொல்லைகள் அகலும். போட்டிகள் மறையும் வில்லங்கம் விலகும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். உடல் நலம் சீராகும். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. பூமியால் லாபம் உண்டாகும். போட்டி பொறாமைகள் மறையும். வலம்புரி வழிபாடு ஜெயம் தரும்.
அதிர்ஷ்ட எண்: 5,1,9,2
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,R




**கன்னி:** விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் நிறைவேறும். குதூகலப் பயணம் உண்டு. குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும். உதவிகள் கிடைக்கும் நாள். கல்வியில் கவனம் தேவை. காதல் கை கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். பொன் பொருள் சேரும். வெற்றிக்கான வழி பிறக்கும். பூமா தேவி வழிபாட்டால் புதிய தொழில் அமையும்.
அதிர்ஷ்ட எண்: 7,1,3,4
அதிர்ஷ்ட நிறம்: இளம் சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K




**துலாம்:** திட்டங்கள் எளிதாகும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. இசை ஆர்வம் கூடும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். வெளியூர் பயணம் நன்மை தரும். பயணம் அனுகூலம் தரும். பாராட்டுக்கள் உயரும். புதிய தொழில் அமையும். தீப வழிபாடு தீமைகளை அகற்றும்.
அதிர்ஷ்ட எண்: 9,7,1,2
அதிர்ஷ்ட நிறம். குங்கும கலர். அதிர்ஷ்ட எழுத்துக்கள். M,Q




**விருச்சிகம்:** கமிஷன் தொழில் லாபம் தரும். வெளியூர் பயணம் உண்டு. விவேகம் வெளிப்படும். வீண் செலவு ஏற்படும். சாதனையான நாள். போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். கடன் தொல்லை நீங்கும். மன சந்தோஷம் அதிகரிக்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். புண்ணிஸ்தலம் செல்வீர்கள். குபேர வழிபாடு குடும்பத்தில் மேன்மை தரும்.
அதிர்ஷ்ட எண்: 5,7,4,1
அதிர்ஷ்ட நிறம். சில்வர் கிரே. அதிர்ஷ்ட எழுத்துக்கள். A,S




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

'ராஜயோகம்'

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**தனுசு:** எதிர்ப்புகள் ஓடி ஒழியும். வாகனச் செலவு ஏற்படும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். கல்வியில் கவனம் தேவை. பெரிய வாய்ப்புகள் தேடி வரும். உண்மைகள் வெளிப்படும் நாள். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். தனவரவு உண்டு. குடும்ப உறவு பலப்படும். குதுகல எண்ணம் அதிகரிக்கும். நீண்டநாள் கனவு நிறைவேறும். செயலில் துணிவு கூடும். ஆறுமுக வழிபாடு ஏறுமுகம் தரும்.
அதிர்ஷ்ட எண். 0, 7, 6, 1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி. அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,F




**மகரம்:** கடன்சுமை குறையும். உடல்வலி தோன்றி மறையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். பழையக் கடன் வசூலாகும். சுபவிரயம் ஏற்படும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பெற்றோரின் ஆசி கிடைக்கும். உறவினர் வருகை உண்டு. திடீர் செலவு ஏற்படும். விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும். பிற வழிபாடு நிறைகளை கொடுக்கும்.
அதிர்ஷ்ட எண். 6,8,1,4
அதிர்ஷ்ட நிறம். இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,K




**கும்பம்:** சுபச் செய்தி தரும். சுயதொழில் வாய்ப்பு அமையும். மெத்தனப் போக்கு மாறும். மேன்மைகள் தொடரும். புதிய நட்பு உருவாகும். வரவுகள் அதிகரிக்கும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். திறமைகள் வெளிப்படும். சந்தர்பங்கள் சாதகமாக அமையும். வஸ்திர தானம் செய்வதால் வளம் பெருகும்.
அதிர்ஷ்ட எண்: 2,6,8,7
அதிர்ஷ்ட நிறம். வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,G




**மீனம்:** சிக்கனத்தை கையாள வேண்டும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். கடன் அதிகமாகும். பேச்சில் பணிவு பெற்றோர் ஆலோசனை பயன் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். தனவரவு தடைப்படும். எண்ணங்கள் மாறுப்படும். உறவினர் வருகை உண்டு. பால்தானம் செய்வதால் பாவங்கள் விலகும்.
அதிர்ஷ்ட எண்: 1,4,8,3
அதிர்ஷ்ட நிறம். இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,U

## வீணாவின் கவிக்கணை

சாதிமத பேதமின்றி
நம் சந்ததிகள்
நிம்மதியாக வாழ்ந்திடவும்,
உழவர்கள் பஞ்சம் தீர்ந்து
நம் வருங்காலம்
பட்டினியின்றி வாழ்ந்திடவும்,
பெண்ணை பெண்ணாக,
சக மனித பிறப்பாக பார்க்கும்
நல்விடியலாக அமையவும்,
உன் தீப்பொறி கருத்துக்கள்
அனைவரின் மனதையும்
திருந்த்தவும், நீ மறுபிறப்பு
எடுத்து வரமாட்டாயோ
என் பாரதீயே???


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான
ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள்,
மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக்
கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும்
உணவுப் பதார்த்தங்களும்.....
மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைன்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைன்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...
Sumeet
Aachi
LEMON RICE POWDER
GARAM MASALA
Vidiem
ABC
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

## ஜீவன் முக்தி (பகுதி ) 123

# ஞான தீக்ஷை



*(சென்ற வார தொடர்ச்சி...)*

### வாழ்வின் இலட்சியத்திற்கு விழிப்படைவதே ஜீவன் முக்தி.

நீங்கள் இப்பொழுது பிறப்பின் காரணத்தைப் பற்றிய விழிப்புணர்வில்லாமல் இருக்கிறீர்கள். நீங்கள் பிறப்பெடுத்ததன் காரணத்திற்கான விழிப்பைப் பெற்றீர்களானால் நீங்களும் அவதாரம்தான்.
என்னுடைய சிறப்புகளைச் சொல்லும்போதே, உங்களுக்குள்ளும் அது நிகழ்வதற்கான சாத்தியம் உள்ளது என்பதனால்தான் இந்தச் சம்பவத்தையே சொல்கிறேன்.
'இரண்டு கைகளையுடைய ஒருவர் ஞானமடைந்தார்' என்று சொன்னால் இரண்டு கைகளுடைய அனைவரும் ஞானம் அடையலாம் என்பது சாத்தியக்கூறு என்ற நம்பிக்கை வார்த்தை. சாத்தியம் நிச்சயம் சாத்தியம் என்பதே.

### இது சத்தியம் என்பது சத்தியம்

ஒருவர் 'நான் இறைவன் என்று உணர்ந்திருக்கிறேன்' என்று சொல்லும்பொழுது என்ன அர்த்தம் என்றால், 'நான் உணர்ந்திருக்கிறேன் என்ற பெருமையல்ல. நீங்களும் உணரமுடியும்' என்ற சாத்தியத்தை சொல்கிறோம்.
என் பெருமையயைச் சொல்வதற்காக இதை எழுதவில்லை.
சாத்தியக்கூற்றைச் சொல்வதற்காக எழுதுகிறோம்.
உங்கள் எல்லோருக்குள்ளும் கூட, இது நடப்பதற்கான சாத்தியம் இருக்கிறது என்று சொல்வதற்காகத்தான் எழுதுகிறோம்.

### இப்பேது மனிதனாயிருந்தாலும் ஞானத்தின் பிரதிபலிப்பு தான் நீங்கள்.

ஒரு பத்து வயதிருக்கும். சிறு வயதிலிருந்தே அண்ணாமலையார் கோவிலுக்குத் தினமும் சென்று சேவை செய்வோம். சேவை செய்வதென்றால் அங்கு தரையைக் கூட்டிச் சுத்தம் செய்வது, தரையைக் கழுவி விடுவதற்காக பைப் பிடிப்பது என இப்படி ஏதேனும் ஒரு காரணத்தை உருவாக்கியாவது தொடர்ந்து கோவிலுக்குச் சென்று சேவை செய்வோம்.

பள்ளி மாணவர்கள் போன்று விளையாடிக்கொண்டிருந்த காலம் அது. இப்போதுதான்... கதைக்குள்ளே நுழைகிறோம்.
இதைச் சொல்லிய பிறகுதான் பிறப்பையே சொல்லியிருக்க வேண்டும். இந்தக் கதை புரிந்தால்தான் பிறப்பின் இரகசியமே புரியும். பிறப்பை இன்னும் விரிவாகச் சொல்லவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் இநதக் கதை புரிந்தால்தான் அந்தக கதை புரியும். அதனால்தான் பல விதங்களில் எனக்கு நிகழ்ந்த அனுபவத்தை உங்களுக்கு புரிய வைக்க பயிற்சிக்கிறோம். அதுதான் இறுதியான நாடகம்.
ஒருநாள் என்ன ஆனது. ரொம்பத் தீவிரமாக எப்படியாவது கடவுள் தரிசனம் கிடைக்க வேண்டும் என்ற சிந்தனை தீவிரமாக எழுந்தது. அப்பொழுதே ஒரு ஆழமான தேடுதலும், ஏக்கமும் இருந்ததினாலே கோவிலுக்குப் பின்புறம் இருக்கின்ற அண்ணாமலையார் சந்நிதிக்குப் பின்புறம் அமர்ந்து ரிலாக்ஸாக இதையே சிந்தனை செய்து கொண்டிருந்தேன்.
அங்கே ஒரு சின்ன குகைமாதிரி இருந்தது. அந்தக் குகையிலிருந்து திடிரென ஒருவர் வெளிவந்தார். ஒரு 30 வயது மதிக்கத்தக்க ஒரு சன்யாசி அவர்.
'தக தகவென்று பொன்மேனி, பொன்னிறம். கண் அவ்வளவு பளபளவென்று பார்ப்பதற்கே அவ்வளவு அருமையாக இருந்தார்', இடுப்பில் ஒரு காவி, தோளில் ஒரு காவி, கையிலும் கழுத்திலும் ருத்திராஷம். நீண்ட விரிந்த கூந்தலோடு வந்தார்.
அவர் வந்த உடனே நான் கேட்டேன், 'சாமி நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள், நீங்கள் யார்?'.

அவர் சொன்னார் 'நான் அருணகிரி யோகீஸ்வரர். நான் இங்கேதான் இருக்கிறேன்'.
நான் நினைத்தேன். 'அது ஒரு குகை. அதன் உள்ளே ஒரு வழி இருக்கும். அந்த கதவை திறந்தவுடனே குகை மாதிரிபோகும்' என்று.
ஏனென்றால் திருவண்ணாமலையில் எங்கு பார்த்தாலும் நிறைய குகைகள் இருக்கும். அந்த மாதிரி, இங்கும் இருக்கும்போலிருக்கிறது. அதுபோல் ஒரு குகையில்தான் இவரும் இருக்கிறார் என்று நினைத்தேன்.
என்னருகில் வந்து உட்கார்ந்தார். வெகு நாட்கள் பழகிய மிக நெருங்கிய உறவினர் போன்ற நெருக்கத்தை உணரந்தேன். ரொம்ப நேரம் இருவரும் பேசிக்கொண்டிருந்தோம். அதன்பிறகு குகைக்குள் போய் விட்டார். அதன்பிறகு நான் எப்போது அந்தப் பக்கமாக வந்து, 'சாமி, சாமி' என்று உடனே வெளியில் உடகார்ந்து என்னோடு ரொம்ப நேரம் பேசிக்கொண்டிருப்பார் நிறைய ருத்ராக்ஷம் கொடுப்பார். சில நேரத்தில் சாப்பாடும் கொடுப்பார்.

சில நேரத்தில் நான் சாப்பாடு எடுத்த வந்து அவருக்கு கொடுப்பேன். கூப்பிட்ட உடன் வருவார். சாப்பிடுவார்: பேசுவார்: போய்விடுவார். இதுமாதிரி ஒரு ஆறுமாத காலம் சென்றிருக்கும். இந்தப் பழக்கம் இப்படியே சென்று கொண்டிருந்தது.
பள்ளி விடுமுறை, மே மாதத்தில் சரும். அப்போது ஆரம்பித்த பழக்கம். விடுமுறை தினத்தில் காலையில் எழுந்த உடனேயே அங்கு சென்று விடுவேன். அவர்பாட்டுக்கு என்னோடு வந்து உட்கார்ந்து இருப்பார். பேசிக்கொண்டிருப்பார். நெருங்கிய தோழர்கள் மாதிரி ஆகிவிட்டோம்.
இந்த ஈர்ப்பு ரொம்ப ஆழமான ஈரப்பு ஆகி விட்டது. இந்தக் கதையை ஆழமாகப் புரிந்து கொள்ளுங்கள்.

உபநிடதத்தில் ஒரு அருமையான கதை இருக்கிறது.
ஒரு மரத்தில் இரண்டு கிளிகள் இருந்ததாம். அதில் ஒரு கிளி மேல் கிளையில் அமைதியாக உட்கார்ந்து இருந்ததாம். கீழ்க்கிளையில் உள்ள சிறிய கிளி நினைக்குமாம் கீழே உள்ள கிளைகளில் உள்ள பழங்களைக் கொறித்துச் சாப்பிடுமாம்.
திடிரெனட்று பழங்களில் ஒன்று கசப்பாக இருந்துவிட்டால் உடனே அந்தக் கிளி நினைக்குமாம். 'அய்யையோ இந்த மாதிரி இனிப்பு, கசப்பு என்று பழங்களை சாப்பிட்டுக் கஸ்டப்படுவதைக் காட்டிலும் அந்த மேல் கிளையில் சாந்தமாக அமர்ந்திருக்கும்' அந்தக் கிளியைப் போன்றே அமர்ந்திருக்கலாம்' என்று நினைக்குமாம்.
அந்த சாந்தமாக, ஆனந்தமயமாக ஒளிமயமாக இருக்கின்ற அந்தப் பறவையைப் பார்த்து, அதை நோக்கி மீண்டும் செல்ல ஆரம்பிக்குமாம். அந்தச் சமயத்தில் மீண்டும் ஓரு பழத்தைச் சாப்பிம ஆரம்பிக்குமாம். இனிப்பான பழங்களை சாப்பிடுகின்ற வரைக்கும்தான் அது ஜாலியாக சந்தோஷமாக இருக்கும். அது மேலே இருக்கின்ற பறவையைப் பற்றி நினைக்கவே நினைக்காதாம்.

கசப்பான பழத்தைச் சாப்பிட்ட உடனேயே மேலே உள்ள பறவையைப் பற்றி நினைக்குமாம். இல்லையென்றால் மேலே இருக்கின்ற பறவையைப் பற்றி நினைக்காது.
நாம்கூட நம் வீட்டில் கஷ்டம் வந்தால்தான் கடவுளை நினைக்கிறோம். வீட்டில் கஷ்டம் வந்தால், உடனே 'சாமி மாதிரியே ஆயிடலாம்பா' என்று நினைக்க வேண்டியது. வீட்டில் சந்தோஷமாக இருந்தால் நினைத்துப் பார்ப்பதுகூடக் கிடையாது. அதுதான் மனம்.
அது மாதிரியே அந்தக் கசப்புப் பழத்தைச் சாப்பிட்ட உடனேயே மேலே போகலாம் என்று நினைக்கும். இது மாதிரி அந்தச் சின்ன பறவை விளையாடி விளையாடி இறுதியில் ஒருநாள் பொறுமையாக மேலிருக்கும் பெரிய பறவையிடம் வந்தடைந்து வட்டதாம்.

அந்தப் பெரிய பறவைக்கு அருகே வர, வர மிக அருகில் வந்த பிறகுதான் அந்தச் சின்னப் பறவைக்குத் தெரிந்ததாம்....
'அந்த பெரிய பறவையிநுடைய ஒளியிலே தான் கரைந்து கொண்டிருக்கிறேலம்' என்று அருகில் வந்தஉடனே திடிரென்று அந்த சின்னப்பறவை இதைப் புரிந்துகொண்டதாம்.
'நாம் தனியான ஒரு சின்ன பறவையே கிடையாது. அந்தப் பெரிய பறவையினுடைய நிழல்தான் தன்னை தனி ஒன்றாக நினைத்துக் கொண்டிருக்கிறது.' என்று சிறிய பறவைக்குப் புரிந்ததாம்

நனகு புரிந்து கொள்ளுங்கள்.
நீங்களும் உலகத்திலே பல்வேறு துக்கங்களுடனும், கஷ்டங்களுடனும் போராடி கசப்பைச் சுவைத்து அந்தப் பறவையைப் போல தாவித் தாவி மேல் கிளைக்கு வரும்பொழுதுதான் புரியும். 'நீங்கள் தனியான ஜீவனல்ல. ஞானயினுடைய பிரதிபலிப்புதான் நீங்கள்'. என்பது புரியும்.
நித்தியானந்த பரமசிவம் மகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அமுத மொழிகள். மேலதிக தொடர்புகளுக்கு: (416) 880 -8585

***(தொடரும்...)***

----

### *பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்*

அன்று பெங்களுரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மச்சாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

**மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080**



# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

+ தமிழ் பேசும் வைத்தியர்கள்
+ ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
+ குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
+ அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
+ அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
+ நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com






Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

**CHRISTEEN SEEVARATNAM**
**(416) 258-6759**



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
**www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca**

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

25 வெள்ளி விழா 2021 UTHAYAN உதயன்

JRS AUTO TECH.CA INC
All Mechanical & Electrical Repairs
9 AM TO 9 PM – 7 DAYS A WEEK
ENGINE · TRANSMISSION · RUSTPROOFING · OILCHANGE · TYRES · AUTOGLASS & TINT
416-206-9489 | 416-628-4399
2655 Lawrence Ave, E, Unit 5 Scarborough, ON M1P 2S3

உதயம் 1328 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 17, 2021

# "கனடாவின் 'பைரவி நுண்கலைக் கூடத்தின் இசை சார்ந்த, மனித நேயம் சார்ந்த பணிகள் மெச்சத் தக்கவை"


## மாணவி பிரேமிக்கா ஜெயச்சந்திரனின் "ட்ரம்ஸ்" அரங்கேற்ற நிகழ்வில் "உதயன்" லோகேந்திரலிங்கம் புகழாரம்



" கனடாவில் மிக நீண்ட காலமாக இயங்கிவருகின்ற "பைரவி நுண்கலைக் கூடத்தின் இசை சார்ந்த மற்றும் மனித நேயம் சார்ந்த பணிகள் மெச்சத் தக்கவை". அத்துடன் மேற்படி நிறுவனத்தின் அதிபர் கலைஞர் ஜெயச்சந்திரன் அவர்கள் இளம் கலைஞர்களுக்கு வழங்கும் சந்தர்ப்பங்கள் மிகவும் அதிகம். அது போன்றே இன்று நடைபெறும் பிரேமிக்கா ஜெயச்சந்திரன் என்னும் அவரது புதல்வியின் பிரேமிக்கா ஜெயச்சந்திரன் அவர்களின் ட்ரம்ஸ்" வாத்திய அரங்கேற்ற நிகழ்வைப் பார்க்கின்றேன்.

இவ்வாறு "பைரவி நுண்கலைக் கல்லூரியின் பிரேமிக்கா ஜெயச்சந்திரன் அவர்களின் "ட்ரம்ஸ்" வாத்திய அரங்கேற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றியபோது "உதயன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் புகழாரம் சூட்டினார்.

(உள்ளே விபரமான செய்தி 22ம் பக்கத்தில்)




# தாயக மற்றும் புலம் பெயர் எழுத்தாளர்களுக்கு 'உதயன்' வெள்ளி விழா சிறப்பிதழ் பிரதிகள் நேரடியாக வழங்கப்பெற்றன

சில தினங்களுக்கு முன்னர். ஜேர்மனி வாழ் எழுத்தாளரும் "வெற்றி மணி" ஆசிரியரும் வெளியீட்டாளருமான சுப்பிரமணியம் சிவகுமாரன் அவர்களுக்கும், இலங்கையில் வாழும் "உதயன்" எழுத்தாளர் திருமதி. சஹானா அவர்களுக்கும் "உதயன்" வெள்ளி விழா சிறப்பிதழ் பிரதிகள் நேரடியாக வழங்கப்பெற்றன.

ஜேர்மனி வாழ் சுப்பிரமணியம் சிவகுமாரன் அவர்களுக்கு உதயன் ஆசிரியர் நாகமணி லோகேந்திரலிங்கம் அவர்களும். இலங்கையில் வாழும் "உதயன்" எழுத்தாளர் திருமதி. சஹானா அவர்களுக்கு ஜா-எலவில் வசிக்கும் நாகமணி மகேந்திரன் அவர்களும் வழங்குவதைக் காணலாம்.

படங்களில் கனடா வாழ் கவிநாயகர் கந்தவன். டாக்டர் கதிர் துரைசிங்கம் மற்றும் இலங்கை எழுத்தாளர் சஹானா அவர்களின் கணவரும் காணப்படுகின்றனர்.





(செய்தி: சத்தியன், படங்கள்: பிரதீபன்)

# எழுத்து என்ற ஆயுதத்தால் சமூகத்தை செப்பனிட முனைந்தவர் இலக்கிய நண்பர் நந்தினி சேவியர் அவர்கள்

## அஞ்சலிக் குறிப்பில் கொழும்பிலிருந்து எழுத்தாளர் 'நல்லை அமிழ்தன்' தெரிவிப்பு



தான் கையில் எடுத்துக்கொண்ட எழுத்து என்ற ஆயுதத்தால் சமூகத்தை செப்பனிட முனைந்தவர் இலக்கிய நண்பர் நந்தினி சேவியர் அவர்கள. அவர் தான் சார்ந்த முற்போக்கு என்னும் கொள்கையிலிருந்து விலகாமல் இறுதிவரை தனது கோட்பாடுகளை தூக்கி எறிந்து விடாமல் இலக்கியப் படைப்புக்கள் மூலமாக கருத்துக்களை காவிச் சென்றவர்" இவ்வாறு கொழும்பிலிருந்து அனுப்பிவைத்த மறைந்த நந்தினி சேவியர் தொடர்பான அஞ்சலிக்குறிப்பில் தெரிவித்துள்ளார் நண்பரும் கவிஞருமான 'நல்லை அமிழ்தன்' அவர்கள்

நேற்று வியாழக்கிழமை இலங்கையின் திருகோணமலையில் காலமான எழுத்தாளர் நந்தினி சேவியரின் இறுதிக் கிரியைகள் அங்கு நடைபெறவுள்ளன.

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H-Selvanayagam Broker